REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2020 செப்டெம்பர் 29 செவ்வாய்க்கிழமை

# தினகரன்
THINAKARAN
තිනකරන්

வரு. 88 இல. 231 | September 29,Tuesday, 2020 | 24 பக்கங்கள் | 30/-







# 6 மாதத்தில் புதிய அரசியலமைப்பு சட்டநகல் சபையில் சமர்ப்பிப்பு



## எதிரணியின் ஆதரவுடன் 20 ஆவது திருத்தம் ஒக்டோபர் 12 இன் பின் நிறைவேறும் – ஜீ.எல்.பீரிஸ்

**ஷம்ஸ் பாஹிம்**

புதிய அரசியலமைப்புக்கான ஆரம்ப நகல் சட்ட வரைவு எதிர்வரும் 06 மாத காலத்தினுள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுமென கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

இதற்கான பணிகளை நிபுணர் குழு ஆரம்பித்துள்ளதாக குறிப்பிட்ட அவர், மட்டுப்படுத்தப்பட்ட நோக்கத்திற்காகவே 20 ஆவது திருத்தம் சமர்ப்பிக்கப்படுவதாக குறிப்பிட்டார்.


ஆகஸ்ட் 12 ஆம் திகதிக்கு முன்னர் உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பு கிடைத்தும் எதிரணியின் ஆதரவுடன் அதனை நிறைவேற்ற எதிர்பார்ப்பதாகவும் அவர் கூறினார்.

பொதுஜன பெரமுன தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடக மாநாட்டில் கருத்துத் தெரிவித்த அவர், மேலும் கூறியதாவது,

04

# கொரோனாவினால் பலியானோர் எண்ணிக்கை 10 இலட்சமாகியது

## பாதிப்புக்குள்ளானோர் தொகை மூன்று கோடிக்கு மேல்



உலகம் முழுவதும் கொரோனா வைரஸ் தாக்குதலில் சிக்கி பலியானோர் எண்ணிக்கை தற்போது 10 இலட்சத்தை கடந்துள்ளது.

சீனாவின் வூகான் நகரில் கடந்தாண்டு இறுதியில் கொரோனா வைரஸ் கண்டுபிடிக்கப்பட்டது. தற்போது உலகின் 210 நாடுகளுக்கு மேல்

04

# வாக்குறுதியை மீறியதாக சஜித் மீது அஸாத் சாலி மீண்டும் குற்றச்சாட்டு

## எம்.பியாக நியமிப்பதாக கூறி அதனை மீறிவிட்டாராம்



வாக்குறுதியை மீறிய குற்றச்சாட்டின் அடிப்படையில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவுக்கு எதிராக அழைப்பாணையொன்றை அனுப்ப தேசிய ஐக்கிய முன்னணி தீர்மானித்துள்ளது.

கொழும்பு, நாவலயிலுள்ள கட்சியின் அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற

04

# பிரபல நடிகர் டெனிசன் குரே காலமானார்



இலங்கை சிங்கள சினிமாத் துறையின் பிரபல நகைச்சுவை நடிகர் டெனிசன் குரே நேற்று (28) காலமானார். உடல்நலக் குறைவு காரணமாக கடந்த

04

# திலீபன் நினைவு கூரப்படுவது சிலரது சுயலாப அரசியலுக்காகவே

## தனக்கு அத்தகைய தேவையில்லை என்கிறார் டக்ளஸ்




சுயலாப அரசியலுக்காகவே திலீபன் நினைவுகூரப்படுவதாக குற்றஞ்சாட்டியுள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, அவ்வாறான தேவை தனக்கு இல்லையெனவும் தெரிவித்துள்ளார். தொலைக்காட்சி நேர்காணல் ஒன்றில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே, ஈழ விடுலைப் போராட்ட இயக்கங்களின் ஆரம்ப கால உறுப்பினரும் கடற்றொழில்

04

# 20 ஐ எதிர்த்து இதுவரை 39 மனுக்கள் தாக்கல்

## நேற்று மட்டும் 19 மனுக்கள்




20 ஆவது திருத்தத்தை எதிர்த்து மேலும் 19 மனுக்கள் நேற்று தாக்கல் செய்யப்பட்டுள்ளன. பாராளுமன்ற உறுப்பினர் மயந்த திசாநாயக்க உட்பட மேலும் இரண்டு பேரால் மனுக்கள் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டன.

04

# நியூ டயமன்ட் கப்பலின் கப்டனுக்கு விளக்கமறியல்

## கொழும்பு மேலதிக நீதிவான் நேற்று உத்தரவு



இலங்கை கடற்பரப்பில் தீ விபத்துக்குள்ளான நியூ டயமன்ட் எண்ணெய் கப்பலின் கிரேக்க நாட்டு கப்டனை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

04

# அரசியலிலிருந்து விலகுவதாக சுஜீவ அறிவிப்பு



அரசியலிலிருந்து விலகுவதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பிரதிப் பொதுச் செயலாளர் சுஜீவ சேனசிங்க அறிவித்துள்ளார். அத்தோடு கட்சியின் பிரதிப் பொதுச்

04

# சாணக்கியன் எம்.பி உட்பட அறுவருக்கு நீதிமன்ற அழைப்பாணை

## திலீபனுக்கு நினைவுகூர முயற்சித்தமை காரணம்



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன், மட்டக்களப்பு மாநகரசபை முதல்வர் தி.சரவணபவன் உட்பட ஆறு பேரை நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளது. அதற்கமைய அவர்களை எதிர்வரும் 02ஆம் திகதி காலை மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு

04

# மாகாண சபைத் தேர்தலை உடனடியாக நடத்தவும்

## தேர்தல் ஆணையர் மஹிந்த கோரிக்கை



மாகாண சபைத் தேர்தலை உடனடியாக நடத்துமாறு தேர்தல்கள் ஆணைக் குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய கோரிக்கை விடுத்துள்ளார். கொழும்பில் நேற்று நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்ட போதே அவர் இந்த கோரிக்கையை

04

20ஆவது திருத்தம்;

# ஆராய குழுவை நியமித்தது சு.க



**லோரன்ஸ் செல்வநாயகம்**

உத்தேச அரசியலமைப்பின் 20ஆவது திருத்தச் சட்டமூலம் தொடர்பில் ஆராய்ந்து கட்சிக்கு பரிந்துரைகளை முன்வைப்பதற்காக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி குழுவொன்றை நியமித்துள்ளது. 10 பேர் கொண்ட மேற்படி விசேட

04



முன்னைய காலங்களில வடக்கில நடக்கிற போராட்டங்கள், உண்ணாவிரதங்களில முன்னுக்கு நிற்கிற ஏணித்தலையையும் காணேல்ல, அவரோட நிக்கிற உயரமான தம்பியையும் காணேல்ல.....
பாராளுமன்றத் தேர்தல் இப்பதானே முடிஞ்சது... இனி நாலு வருஷத்துக்கு பிறகு அதுப்பத்தி சிந்திப்பினம் போல கிடக்கு....

தியாகங்கள் மூலமே 50 நாட்களுக்குள் கட்டுப்படுத்தினோம்;

# நாட்டில் கொரோனா இருந்ததை மறந்து செயற்படும் மக்கள்

## அவதானம் அவசியம் என்கிறார் இராணுவ தளபதி



கொரோனா வைரஸ் (கொவிட் 19) பரவல் தொடர்பில் பொது மக்கள் மிகுந்த அவதானத்துடன் செயற்பட வேண்டுமெனவும் சுகாதார

04

# வடக்கில் பூரண கதவடைப்பு ஹர்த்தாலுக்கு மக்கள் ஒத்துழைப்பு

**நமது வடக்கு நிருபர்கள்**

திலீபனின் நினைவு தினத்தை அனுஷ்டிப்பதற்கு அனுமதிக்காமை மற்றும் தமிழ் மக்களுக்கு எதிராக அரசாங்கத்தின் அடக்குமுறைகளுக்கு எதிர்ப்பு தெரிவித்து வடக்கில் நேற்று பூரண ஹர்த்தால் முன்னெடுக்கப்பட்டதுடன் கிழக்கு மாகாணத்தின் மட்டகளப்பு

04



படம்: ஐ.சிவசாந்தன்




தினகரன்
THINAKARAN
தினகரன்
தினகரன்
வடக்கின் உதயம்
Uthayam
மாற்றமுறும்
உலகுக்கு ஏற்ப
மாசற்ற
ஊடக கலாசாரத்துடன்
ஒக்டோபர் ௨ முதல்

2020 செப்டெம்பர் 29 செவ்வாய்க்கிழமை
தினகரன்
THINAKARAN
තිනකරන්

27ம் திகதி முதல் 30ம் திகதி வரை
தொழுகை நேரம்

| | |
|---|---|
| சுபஹ் | 04.44 |
| லுஹர் | 12.03 |
| அஸர் | 03.16 |
| மஃரிப் | 06.05 |
| இஷா | 07.14 |

இன்றைய சுபதினம்

சார்வரி வருடம் புரட்டாசி 13

ராகுகாலம் : மாலை : 3.00 - 4.30வரை
சுபநேரம் : காலை : 7.30 - 9.00வரை
யோகம்: மரண யோகம்
நட்சத்திரம் : சதயம் ந.இ 2.48
திதி: திரயோதசி

தினகரன் விளம்பரம் 0112429367 விற்பனை பிரிவு 0112429444, 0112429378 ஆசிரியபீடம் editor.tkn@lakehouse.lk



உள்ளூரில் உற்பத்தி செய்யப்படும் புடவைகள் தொடர்பில் ஆராய்வதற்காக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நேற்று (28) புடவைத் தொழிற்சாலைகளுக்கு கண்காணிப்பு விஜயமொன்றை மேற்கொண்டார். தங்கொட்டுவ தொழிற் பேட்டையிலமைந்துள்ள Dankotuwa Textile Mill (pvt) ltd, கந்தானை, கப்புவத்தை Vanguard Industrial (pvt) ltd மற்றும் வத்தளை Creative Textile Mill (pvt) ltd நிறுவனங்களுக்கு சென்றார். ஜனாதிபதியுடன் அமைச்சர் விமல் வீரவங்சவும் விஜயம் செய்திருந்தார்.

## நாணயமாற்று

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலியா டொலர் | 127.68 | 133.78 |
| கனடியன் டொலர் | 135.74 | 141.17 |
| யூரோ | 211.86 | 219.32 |
| ஜப்பான் யென் | 1.7217 | 1.7962 |
| சிங்கப்பூர் டொலர் | 132.08 | 137.31 |
| ஸ்டேலிங் பவுன்ஸ் | 232.85 | 240.53 |
| சுவிஸ் பிராங்க் | 195.69 | 203.25 |
| அமெரிக்க டொலர் | 183.08 | 187.40 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை |
|---|---|
| பஹ்ரின் டினார் | 491.06 |
| குவைத் டினார் | 604.52 |
| ஓமான் ரியால் | 481.01 |
| கட்டார் ரியால் | 50.86 |
| சவூதி ரியால் | 49.37 |
| ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 50.42 |

25 நாட்களாக முன்னெடுக்கப்பட்ட

# உடரதல்லை தோ. தொழிலாளர்களின் வேலைநிறுத்தம் நேற்றுடன் நிறைவு

**நுவரெலியா தினகரன் நிருபர்**

உடரதல்லை தோட்ட தொழிலார்களால் முன்னெடுக்கப்பட்ட வேலை நிறுத்த போராட்டம் நேற்றுடன் நிறைவடைந்துள்ளது.

நானுஓயா உடரதல்ல தோட்டத்தில் கடந்த 3ஆம் திகதி முதல் தொழிலாளர்களால் முன்னெடுக்கப்பட்ட வேலை நிறுத்த போராட்டம் நேற்றுடன் (28) முடிவடைந்துள்ளதாக மலையக தொழிலாளர் முன்னணியின் இயக்குனர் எம்.கணகராஜ் தெரிவித்துள்ளார்.

இந்த கலந்துரையாடலுக்கான ஏற்பாடுகளை நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் மலையக மக்கள் முன்னணியின் தலைவருமான வேலுசாமி இராதாகிருஸ்ணன் மேற்கொண்டிருந்தார்.

அண்மையில் போராட்டம் முன்னெடுக்கப்பட்ட உடரதல்ல தோட்டத்திற்கு நேரடியாக விஜயம் செய்த அவர் தொழிலார்களின் பிரச்சினைகளை கேட்டறிந்து கொண்டதுடன். இது தொடர்பான பேச்சுவார்த்தை ஒன்றுக்கு தாம் ஏற்பாடு செய்வதாக கூறியிருந்ததை தொடர்ந்தே இந்த பேச்சுவார்த்தை நேற்று (28) உதவி தொழில் ஆணையாளர் அலுவலகத்தில் நடைபெற்றது.

இது தொடர்பான பேச்சுவார்த்தை (28) திங்கட்கிழமை நுவரெலியா மாவட்ட செயலகத்திலமைந்துள்ள உதவி தொழில் ஆணையாளர் அலுவலகத்தில் நடைபெற்றது.

இந்த கலந்துரையாடலில் தோட்டக் கம்பனி சார்பாக களனி வெளி பெருந்தோட்ட கம்பனியின் பிராந்திய பொது முகாமையாளர் அநுர சேனாநாயக்க தோட்ட அதிகாரி கிருஷாந்த இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் சார்பாக வேங்குருசாமி தொழிலாளர் தேசிய சங்கத்தின் சார்பாக நுவரெலியா பிரதேச சபை உறுப்பினர் நிரோஷன் நுவரெலியா பிரதேச சபை உறுப்பினர் சிவஞானம், சிரேஸ்ட தொழில் இயக்குனர் எம்.சந்திரன் மற்றும் தோட்டக் கமிட்டி தலைவர்களும் கலந்து கொண்டனர்.

இந்த பேச்சுவார்த்தையில் தொழிலாளர்கள் முன்வைத்த 17 கோரிக்கைகளும் விரிவாக ஆராயப்பட்டதுடன் இதற்கான தீர்வுகளை தோட்டக் கம்பனி தீர்த்து வைப்பதாக இணக்கம் தெரிவித்ததை தொடர்ந்து போராட்டத்தை நிறைவுக்கு 04

மட்டு. நகரில் சட்டவிரோத மீன்பிடிப்பு;

# ஆயிரக்கணக்கான குடும்பங்கள் வாழ்வாதாரத்தை இழக்கும் அபாயம்

மட்டக்களப்பில் சுமார் ஆயிரக்கணக்கான குடும்பங்கள் வாழ்வாதார அச்சுறுத்தலுக்குள்ளாகியிருக்கும் நிலையில், இந்த ஆபத்திலிருந்து மக்களை பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

பொதுமக்கள் தினமான நேற்று (28) மாளிகாவத்தையிலுள்ள கடற்றொழில் அமைச்சின் அலுவலகத்தில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை சந்தித்த மட்டக்களப்பு நாவலடி கிராமிய கடற்றொழிலாளர்கள் அமைப்பின் பிரதிநிதிகளால் இந்த கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.



மட்டக்களப்பு மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் சட்ட விரோத மீன்பிடிச் செயற்பாடுகள் தொடர்பில் அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு வந்த இப் பிரதிநிதிகள், மட்டக்களப்பு வாவிப் பகுதியில் மேற்கொள்ளப்படும் சட்ட விரோதச் செயற்பாடுகளினால் சுமார் ஐம்பது வகையான மீன் இனங்கள் அழிவடைந்து வருவதாகவும் இதன் காரணமாக வாவியை நம்பி வாழுகின்ற சுமார் 11 ஆயிரம் குடும்பங்களின் வாழ்வாதாரம் அச்சுறுத்தலுக்குள்ளாகியிருப்பதாவும் முறையிட்டனர்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, கடற்றொழில் அமைச்சராக இருந்த காலப் பகுதியில், மட்டக்களப்பு வாவி மூன்று பிரிவுகளாக பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு பிரிவுகளிலும் எவ்வாறான செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட முடியுமென்று வரையறுக்கப்பட்டுள்ள போதிலும், குறித்த வரையறைகள் பின்பற்றப்படாதமையினாலேயே இந்த நிலை ஏற்பட்டுள்ளது என்றும் 04

மர்ஹூம் எம்.எச்,எம்.அஷ்ரப் நினைவுதின போட்டிகள்

## துஷ்யந்தன், சிராஜுதீனுக்கு பரிசு வழங்கி கௌரவிப்பு

**நற்பிட்டிமுனை தினகரன் நிருபர்**

சம்மாந்துறை மனித நேய நற்பணிப்பேரவை ஏற்பாடு செய்த மாமனிதர் மர்ஹூம் அஷ்ரபின் 20ஆவது சிரார்த்த தின நினைவு தினம்தொடர்பாக நடைபெற்ற போட்டிகளில் ஊடவியலாளர் இருவர் பரிசு மற்றும் சான்றிதழ் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

பேச்சுப்போட்டியில் மூன்றாம் இடத்தை பாண்டிருப்பு துஷ்யந்தனும் கட்டுரைப்போட்டியில் நான்காம் இடத்தை தோப்பூர் எஸ்.சிறாஜுதீனும் பெற்றுக்கொண்டனர்.

பிரதம அதிதிகளாக கலந்து 04

# கழிவுகள் மூலம் மின் உற்பத்தி; இத்தாலி பூரண ஒத்துழைப்பு

இத்தாலிய தூதுவர் அமைச்சர் டளஸிடம் உறுதி

**லோரன்ஸ் செல்வநாயகம்**

கழிவுகளை உபயோகித்து மின் சாரத்தை தயாரிக்கும் இலங்கை அரசாங்கத்தின் செயற்திட்டத்திற்கு இத்தாலி அரசாங்கம் பூரண ஒத்துழைப்பு வழங்குமென இத்தாலியத் தூதுவர் எம். ஈ. ரீட்டா மெனெல்லா தெரிவித்துள்ளார்.

மின்சார வள அபிவிருத்தி அமைச்சர் டளஸ் அழகப்பெருமவுக்கும் இலங்கைக்கான இத்தாலியத் தூதுவர் ரீட்டா மெனெல்லாவுக்குமிடையிலான உத்தியோகபூர்வ சந்திப்பொன்று கொழும்பில் நடைபெற்றுள்ளது.



இதன்போதே இத்தாலியத் தூதுவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அகற்றப்படும் குப்பை கூளங்களை முகாமைத்துவம் செய்யும் நடவடிக்கைகளுக்குத் தீர்வாக கழிவுகளைக் கொண்டு மின்சாரம் தயாரித்து தேசிய மின் இணைப்புக்கு பங்களிப்புச் செய்ய முடியும் என அமைச்சர் இதன்போது குறிப்பிட்டுள்ளதுடன் அதற்கு இத்தாலி அரசாங்கம் பூரண ஒத்துழைப்பு வழங்கும் என்றும் இத்தாலியத் தூதுவர் தெரிவித்துள்ளார்.

இதுவரை இலங்கையில் மின்சார உற்பத்தித் துறையில் இயற்கை வளங்களைப் பயன்படுத்தி சாத்தியமான முறையில் மின் உற்பத்தி செயற்பாடுகள் இடம்பெறுவதுடன் கழிவுகள் மூலம் மின்சாரம் 04

# ஈஸ்வரலிங்கத்தின் தாயார் காலமானார்



கலைஞர் கே. ஈஸ்வரலிங்கத்தின் தாயார் கந்தையா வீசாலாச்சி (வயது 82) சிறிது காலம் சுகவீனமுற்றிருந்த நிலையில் நேற்று (28/09/2020) காலை 11.40 மணியளவில் காலமானார்.

அவரது பூதவுடல் அஞ்சலி செலுத்துவதற்காக இன்று காலை 10 மணி முதல் மாலை 8 மணி வரையும் நாளை காலை 9 மணி முதல் பிற்பகல் 2 மணி வரையும் புஞ்சிபொரளை "லேடி ஜே"க்கு அருகிலுள்ள நிலா மலர்ச்சாலையில் வைக்கப்பட்டிருக்கும். இறுதிக்கிரியைகள் பின்னர் அறிவிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# 20 க்கு எதிராக இன்று வரை மனு செய்யலாம்

பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டுள்ள 20 ஆவது அமைப்பு திருத்தச் சட்டமூலத்தை சவாலுக்கு உட்படுத்தி இன்று வரை (29) உயர் நீதிமன்றத்தில் மனுக்களை தாக்கல் செய்ய முடியுமென தெரிவிக்கப்பட்டுள்ளது. கடந்த 22 ஆம் திகதி 20 ஆவது திருத்தம் தொடர்பான சட்டமூலத்தை நீதி அமைச்சர் அலி சப்ரி பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தார். 04

## நீரிழிவு, இரத்த அழுத்த மாத்திரைகளை விழுங்கிய 1 1/2 வயது குழந்தை ஐசீயூவில் அனுமதி

**பதுளை தினகரன் விசேட நிருபர்**

நீரிழிவு மற்றும் இரத்த அழுத்தத்துக்கு பயன்படுத்தப்படும் மாத்திரைகளை விழுங்கிய ஒன்றரை வயது ஆண் குழந்தை ஆபத்தான நிலையில், பதுளை அரசினர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, தீவிர சிகிச்சைக்குற்படுத்தப்பட்டுள்ளது.

பதுளையை அண்மித்த மீகஹகியுல என்ற இடத்திலேயே, நேற்று (28) இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

குழந்தையின் பாட்டி நீரிழிவு மற்றும் இரத்த அழுத்தத்துக்கு தினமும் மாத்திரைகள் பலவற்றை பாவித்து வரும் 04



17 மில்லியன் ரூபா செலவில் புனரமைக்கப்பட்ட 10 பஸ்வண்டிகள் இலங்கை போக்குவரத்து சபையிடம் கையளிக்கும் நிகழ்வு நேற்று ஜாஎல பொறியியல் நிறுவனத்தில் நடைபெற்றது. போக்குவரத்து அமைச்சர் காமினி லொக்குகே, உத்தியோகபூர்வமாக பஸ்களை கையளிப்பதையும் அருகில் இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம, இ.போ.ச தலைவர் கிங்ஸ்லி ரணவக்க ஆகியோரையும் காணலாம்.

(படம்: வாசித பட்டபெந்திகே)


# வவுனியா நகரில் அனைத்து கடைகளையும் திறக்குமாறு ஒலிபெருக்கி மூலம் அறிவிப்பு

**ஓமந்தை விஷேட நிருபர்**

வடக்கு கிழக்கில் நேற்று ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டுள்ள நிலையில் நேற்று வவுனியா நகரில் அனைத்து வர்த்தக நிலையங்களும் மூடப்பட்டன.

இந்நிலையில் நகரின் வர்த்தக நிலையங்களுக்கு சென்ற பொலிசார் கடைகளை திறக்குமாறு உத்தரவிட்டதுடன் ஒலிபெருக்கிகள் மூலம் கடைகளை திறக்குமாறும் அறிவித்தல் விடுத்தனர்.

வவுனியா நகரின் அனைத்து பகுதிகளுக்கும் வாகனங்களில் சென்ற பொலிசார் ஒலிபெருக்கி மூலம் கடையைத்திறக்குமாறு அறிவித்தல் விடுத்தனர்.



## ஆயிரக்கணக்கான குடும்பங்கள்... 03ஆம் பக்கத் தொடர்

அமைச்சரிடம் எடுத்துக் கூறப்பட்டது.

அத்துடன் மட்டக்களப்பின் முகத்துவாரப் பகுதி நீண்ட காலதமாக சுத்தப்படுத்தி மண் திட்டுக்கள் அகற்றப்படாமல் காணப்படுவதால் வாவியில் மீன் உற்பத்திகள் குறைவடைந்து வருவதாகவும் சுட்டிக்காட்டப்பட்டது.

இதுதொடர்பாக கவனம் செலுத்திய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, மட்டக்களப்பு கடற்றொழிலாளர் பிரதிநிதிகளினால் சுட்டிக்காட்டப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பாக ஆராய்ந்து தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கடற்றொழில் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தை கேட்டுக் கொண்டதுடன், தனக்கு பூரண அறிக்கையொன்றை சமர்ப்பிக்குமாறும் அறிவுறுத்தினார்.

## 20 க்கு எதிராக இன்று... 03ஆம் பக்கத் தொடர்

முன்வைக்கப்பட்டுள்ள 20 ஆவது திருத்தத்தை சவாலுக்கு உட்படுத்தி நீதிமன்றத்தை நாட கடந்த ஒருவார கால அவகாசம் வழங்கப்பட்டது.

அதற்கமைய 20 ஆவது திருத்தத்தை எதிர்த்து சுமார் 20 மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. தீர்ப்பை வழங்க 21 நாட்கள் உயர் நீதிமன்றத்திற்கு கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. இந்த காலப் பகுதியில் இச் சட்டமூலம் தொடர்பில் எந்தவொரு நடவடிக்கையையும் பாராளுமன்றத்தால் எடுக்க முடியாது.

இதேவேளை, நேற்று (28) ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் 20 ஆவது திருத்த சட்டமூலத்தை எதிர்த்து மனு ஒன்றை தாக்கல் செய்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

## உடரதல்லை... 03ஆம் பக்கத் தொடர்

கொண்டு வருவதாக தொழிற்சங்கங்களின் தோட்டத் தலைவர்கள் தெரிவித்தனர். ஏதிர்காலத்தில் தோட்டத்தில் மேற்கொள்ளப்படும் புதிய மாற்றங்கள் தொடர்பில் தொழிற்சங்க தலைவர்களுடன் கலந்துரையாடி அவற்றை முன்னெடுப்பதற்கும் தோட்ட நிர்வாகத்தினர் இனக்கம் தெரிவித்தனர். இதனைத் தொடர்ந்து தோட்ட தொழிலாளர்கள் இன்று முதல் (29.09.2020) தொழிற்சங்க போராட்டத்தை கைவிட்டு தொழிலுக்கு திரும்புகின்றனர்.இந்த போராட்டமானது கடந்த 25 நாட்களுக்கு மேலாக முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## நீரிழிவு, இரத்த அழுத்த...

நிலையில் இதனை அவதானித்து வந்த குழந்தையும், பாட்டி இல்லாத வேளை, அந்த மாத்திரைகளை எடுத்து, சிலவற்றை விழுங்கியுள்ளது. விழுங்கிய சிறிது நேரத்தில் குழந்தை மயங்கி விழுந்துள்ளது.

இதைக் கண்ட குழந்தையின் தாய், அருகேயுள்ள மீகஹகியுல பிரதேச வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்றதும், குழந்தையைப் பரிசோதனை செய்த டாக்டர், உடனடியாக குழந்தையை பதுளை அரசினர் மருத்துவமனைக்கு கொண்டு செல்லுமாறும் பணித்தார்.

தற்போது குழந்தை பதுளை அரசினர் மருத்துவமனை தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டு, சிகிச்சை பெற்று வருகிறது.

## அரசியலிலிருந்து...

செயலாளர் பதவியிலிருந்தும் இராஜினாமாச் செய்வதாகவும் அவர் தெரிவித்துள்ளார். அண்மையில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் அடைந்த தோல்வியைத் தொடர்ந்து அரசியலிலிருந்து விலக முடிவு செய்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## வாக்குறுதியை மீறியதாக...

நிறைவேற்றுக்குழுக் கூட்டத்தில் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கருத்து வெளியிட்டுள்ள தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவர் அசாத் சாலி, தன்னை பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்வதாக சஜித் பிரேமதாச கூறியிருந்த போதிலும் அந்த வாக்குறுதி மீறப்பட்டுள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தியில் இணைந்து போட்டியிடவோ, தேசிய பட்டியலில் பாராளுமன்றத்திற்கு செல்லவோ நாங்கள் எதிர்பார்த்திருக்கவில்லை. எனினும் “நான் சஜித் பிரேமதாச, ரணசிங்க பிரேமதாசவின் மகன், கட்டாயம் உங்களை பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்வது எனது பொறுப்பு” என சஜித் பிரேமதாச என்னிடம் வாக்குறுதி வழங்கினார். அந்த வாக்குறுதியை மீறியமைக்காவே இந்த அழைப்பாணையை அனுப்ப தீர்மானித்துள்ளோம்.

நினைத்து பார்க்காத விதத்தில் இந்த நாட்டில் வாழும் தமிழ், முஸ்லிம் மக்கள் ஐக்கிய மக்கள் சக்திக்கு வாக்களித்தனர். எனினும் அந்தக் கட்சி தனது தேசிய பட்டியலில் முஸ்லிம்கள் எவருக்கும் சந்தர்ப்பம் வழங்கவில்லையெனவும் அசாத் சாலி குறிப்பிட்டுள்ளார்.

## ஆராய குழுவை...

குழுவின் தலைவராக அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா நியமிக்கப்பட்டுள்ளார்.

குழுவின் ஏனைய உறுப்பினர்களாக பேராசிரியர் ரோஹன லக்ஷ்மன் பியதாச, அமைச்சர் மஹிந்த அமரவீர, இராஜாங்க அமைச்சர்களான தயாசிறி ஜயசேகர, துமிந்த திஸாநாயக்க, பாராளுமன்ற உறுப்பினர் ஷான் விஜயலால் டி சில்வா, முன்னாள் அமைச்சர் பைஸர் முஸ்தபா, பாராளுமன்ற உறுப்பினர் சாரதி துஸ்மந்த, சட்டத்தரணி சஞ்சய கமகே, கலாநிதி சமில லியனகே ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இந்த குழுவின் பரிந்துரைகளை பரிசீலனைக்கு உட்படுத்திய பின்னர், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவினால் நியமிக்கப்பட்ட குழுவிடம் இது தொடர்பிலான கருத்துக்களும் திட்டங்களும் சமர்ப்பிக்கப்படுமென்று அக்கட்சியின் பொதுச்செயலாளர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

அரசியலமைப்பின் 20ஆவது திருத்தச் சட்டமூலம் தொடர்பாக பல்வேறு மாற்றுக்கருத்துக்கள் வெளியாகிவரும் நிலையில், சுதந்திரக் கட்சி இந்த குழுவை நியமித்துள்ளது.

இதேவேளை, அரச நிர்வாகம் சிறந்த முறையில் இடம்பெற வேண்டும் என்பதற்காக 20ஆவது திருத்தச் சட்டமூலத்துக்கு ஆதரவு தெரிவிப்பதாக அக்கட்சியின் ஊடகப் பேச்சாளர் வீரகுமார திஸாநாயக்க அண்மையில் தெரிவித்திருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.(ஸ)

## கழிவுகள் மூலம்... 03ஆம் பக்கத் தொடர்

உற்பத்தி செய்வது தொடர்பில் பரிசீலித்துப் பார்க்க முடியும் என குறிப்பிட்டுள்ள இத்தாலிய தூதுவர் அதற்கான முதலீடுகளை தமது நாட்டிலிருந்து பெற்றுக்கொள்ள முடியும் என்றும் அவர் அமைச்சர் டலஸ் அழகப்பெருமவுக்கு தெரிவித்துள்ளார்.

உலகின் பல நாடுகளில் கழிவகற்றல் தொடர்பில் பெரும் சிக்கல்கள் ஏற்பட்டுள்ளதுடன் இலங்கையிலும் அதற்கான நெருக்கடி நிலவுவதாக குறிப்பிட்ட அமைச்சர், கழிவுகள் மூலம் மின் உற்பத்தி செய்வதால் அத்தகைய பிரச்சினைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க முடியும் என்றும் அவர்தெரிவித்துள்ளார். அகற்றப்படும் கழிவுகளுக்கும் பெறுமதியை வழங்கி நாட்டின் பொருளாதாரத்திற்கு அதன் மூலம் பங்களிப்பை பெற்றுக்கொள்ளும் செயற்பாடாக இந்த நடவடிக்கைகள் அமையும் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.(ஸ)

## துஷ்யந்தன், சிராஜுதீனுக்கு... 03ஆம் பக்கத் தொடர்

கொண்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான முகம்மட் சுஹைர் பாராளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான திரு.சுமந்திரன் ஆகியோர் வழங்கினர். போட்டிகளில் அதிகளவு முதல் மற்றும் இரண்டாம் இடங்களை இளம் முஸ்லிம் பெண்கள் பெற்றதை காணமுடிந்தது.

## திலீபன் நினைவு...

அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா இவ்வாறு தனது கருத்தை வெளியிட்டுள்ளார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், “திலீபனை நினைவுகூருவது தொடர்பாக தற்போது பேசி வருகின்ற அரசியல் தலைவர்கள் சுயநல அரசியல் நோக்கங்களுக்காக பேசுகின்றார்களே தவிர, எவரும் உளப்பூர்வமாக பேசவில்லை.

இந்தஅரசியல் தலைவர்களை இது தொடர்பான பகிரங்க விவாத்திற்கு வருமாறு அழைக்கின்றேன்.

குறிப்பாக ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எப், புளொட் போன்ற அமைப்புக்களை புலிகளின் தலைமை அழித்த போது யாழ்ப்பாணத்தில் அதனை நேரடியாக திலீபன் வழிநடத்தியிருந்தார்.

அதேபோன்று, தமிழரசுக் கட்சித் தலைவர்களும் புலிகளின் தலைமையினால் அழிக்கப்பட்டிருக்கின்றார்கள். அதுமாத்திரமல்ல, தற்போது இந்த அமைப்புக்களின் தலைவர்களாக திலீபனை நினைவுகூர வேண்டுமென்று கையொப்பம் இட்டவர்களும் புலித் தலைவர்களின் கொலைப் பட்டியலில் இருந்தவர்கள்தான்.

இவ்வாறானவர்களினால் உளப்பூர்வமாக திலீபனை நினைவு கூரமுடியாது. எனினும் காத்திரமான அரசியல் வேலைத் திட்டம் ஏதுமின்றி மக்கள் ஆதரவை இழந்துள்ள நிலையில் புலிகளின் ஆதரவாளர்களையாவது வளைத்துப் பிடித்து விடவேண்டும் என்ற நோக்கில் திலீபன் தொடர்பில் நீலிக் கண்ணீர் வடிக்கின்றனர்" என்றும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

## பிரபல நடிகர்...

வாரம் அவர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சைப் பெற்று வந்த நிலையில், சிகிச்சை பலனின்றி தனது 68 ஆவது வயதில் டெனிசன் குரே காலமானார். டெனிசன் குரேயின் மறைவு ரசிகர்கள் மத்தியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

## சாணக்கியன்...

மட்டக்களப்பு நீதிமன்றம் ஊடாக அழைப்பாணை அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. மட்டக்களப்பு தலைமையக பொலிஸார் வழங்கிய முறைப்பாடுகளின் அடிப்படையில் பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன், மட்டக்களப்பு மாநகரசபை முதல்வர் தி.சரவணபவன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான ஞா.சிறிநேசன், சீ.யோகேஸ்வரன், பா.அரியநேத்திரன் மற்றும் ஜனநாயகப் போராளிகள் கட்சியின் உபதலைவர் நா.சங்கரப்பிள்ளை ஆகியோருக்கும் இவ்வாறு அழைப்பாணை அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. தியாக தீபம் திலீபனை நினைவுகூருமுகமாக இலங்கை தமிழரசுக் கட்சியின் சார்பில் அல்லது அவர்களினால் நியமிக்கப்பட்ட நபர்களினால் விளக்கேற்றும் நிகழ்வை மேற்கொள்ள நடவடிக்கை மேற்கொண்டமை தொடர்பாக வழங்கப்பட்ட முறைப்பாடுகளின் அடிப்படையிலேயே இந்த அழைப்பாணை வழங்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்ற பதிவாளரின் ஒப்பத்துடன் இந்த அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கொரோனாவினால்...

பரவியுள்ள இந்த வைரஸ் பெரும் மனித இழப்புகளை ஏற்படுத்தி வருகிறது. இந்நிலையில், உலகம் முழுவதும் கொரோனா வைரஸ் தாக்குதலால் பாதிப்படைந்தோர் எண்ணிக்கை 3.30 கோடியையும் தாண்டியுள்ளது.

உலகம் முழுவதும் கொரோனா வைரஸ் தாக்குதலில் சிக்கி மீண்டவர்கள் எண்ணிக்கை 2.43 கோடியைக் கடந்துள்ளது. கொரோனாவுக்கு சிகிச்சை பெறுபவர்களில் 65 ஆயிரத்து 300க்கும் அதிகமானோரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளது.

உலகம் முழுவதும் கொரோனா வைரஸ் தாக்குதலில் சிக்கி பலியானோர் எண்ணிக்கை 10,00,195 ஆக அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## நியூ டயமன்ட் கப்பலின்...

கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றத்தில் நேற்று (28) எண்ணெய் கப்பலின் கப்டன் ஆஜர்படுத்தப்பட்டதைத் தொடர்ந்தே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இந்த விபத்து தொடர்பாக விசாரணை நடத்தும் குற்றப் புலனாய்வு திணைக்களம் சார்பில் நீதிமன்றத்தில் ஆஜராகிய பிரதி சொலிசிட்டர் நாயகம் திலீப பீரிஸ் இந்த கப்டனை நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு கோரியிருந்தார்.

இந்த கோரிக்கையை பரிசீலித்த கொழும்பு மேலதிக நீதவான் நீதிமன்ற நீதிபதி பிரியந்த லியனகே, கடந்த செப்டம்பர் மாதம் 17 ஆம் திகதி நேற்று 28ஆம் திகதி கப்டனை நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு அறிவுறுத்தல் அனுப்பியிருந்தார்.

தீயைக் கட்டுப்படுத்த தானியங்கி பாதுகாப்பு நடவடிக்கைகளைப் பின்பற்றத் தவறியமை மற்றும் தீ பரவல் தொடர்பில் பொறுப்பு வாய்ந்த அதிகாரிகளுக்கு அறிவிக்கத் தவறியமை உள்ளிட்ட குற்றச்சாட்டுக்கள் கப்டனுக்கு எதிராக சுமத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## தியாகங்கள்...

தரப்பினர் வழங்கியுள்ள சுகாதார நடைமுறைகளை கிரமாக கடைப்பிடிக்க வேண்டியது அவசியமெனவும் இராணுவத் தளபதி லெப்டினண்ட் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

நாட்டில் கொரோனா வைரஸ் (கொவிட் 19) பரவல் இருந்தமை தொடர்பில் மக்கள் இன்று மறந்து செயற்படுவதாகவும் அவர் கூறியுள்ளார்.

தொடர்ந்தும் கருத்து தெரிவித்த இராணுவத் தளபதி, சமூகத்தில் கொரோனா வைரஸ் பரவலை வெறுமனே 50 நாட்களுக்குள் தடுக்க முடிந்தது. அதேபோல் மக்கள் அதனை கட்டுப்படுத்த பெரும் தியாகங்களையும் செய்தனர். மக்களின் அர்ப்பணிப்பால் தான் இந்த நிலைமை 50 நாட்கள் என்ற குறுகிய காலத்தில் கட்டுப்படுத்த முடிந்தது. எனினும் நாட்டில் கொவிட் 19 இல்லையென சொல்வது மிகவும் வருந்தத்தக்க விடயம். தொடர்ந்தும் முகக்கவசங்களை அணிவது மிக முக்கியம். அத்துடன் சுகாதாரத் தரப்பினர் வழங்கியுள்ள சுகாதார நடைமுறைகளை கிரமாக கடைப்பிடிக்க வேண்டியதும் அவசியம். இவற்றை கட்டாயம் கடைப்பிடிக்குமாறு மக்களை கேட்டுக்கொள்கின்றோம் என்றார்.

இதேவேளை, நாட்டில் இதுவரை 2,82,197 பி.சீ.ஆர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக கொவிட் 19 தடுப்பு தேசிய செயலணி தெரிவித்துள்ளது. (27) மாத்திரம் 1,410 பி.சீ.ஆர் பரிசோதனைகள் நடத்தப்பட்டுள்ளன.

அதேபோல், நேற்று கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்ட நிலையில் மொத்த தொற்றாளர்களின் எண்ணிக்கை 3,360 ஆக உயர்வடைந்துள்ளது.

சென்னையிலிருந்து வந்த 08 பேரும், பங்களாதேஷிலிருந்து வந்த இருவரும், ஐக்கிய அரபு இராஜியத்திலிருந்து வந்த ஒருவரும் (27) தொற்றுடன் அடையாளம் காணப்பட்டனர். 139 தொற்றாளர்கள் தொடர்ந்தும் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருவதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

முப்படையால் நிர்வகிக்கப்படும் மத்திய நிலையங்களிலிருந்து 606 பேர் (28) குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர்.இதுவரை 45,636 பேர் தனிமைப்படுத்தல் நடவடிக்கையை பூர்த்தி செய்துள்ளதுடன், இராணுவத்தால் பராமறிக்கப்படும் 77 மத்திய நிலையங்களில் இருந்து 7,484 பேர் வெளியேறியுள்ளனர்.

இதேவேளை, ஓமானிலிருந்து 101 பேரும், டுபாய் மற்றும் ஜப்பானிலிருந்து 88 பேரும் நேற்று (28) அதிகாலை நாட்டுக்கு அழைத்து வரப்பட்டுள்ளனர்.

## 20 ஐ எதிர்த்து இதுவரை...

பாராளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட 20 ஆவது திருத்த வரைபை சவாலுக்குட்படுத்தி உயர் நீதிமன்றத்தில் இதுவரை 39 மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

இவ்வாறு தாக்கல் செய்யப்பட்டுள்ள அனைத்து மனுக்கள் மீதான பரிசீலனை செப்டெம்பர் 29 ஆம் திகதி உயர் நீதிமன்ற நீதியரசர்கள் முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்படவுள்ளன.

இதற்காக பிரதம நீதியரசரினால் ஐவரடங்கிய நீதியரசர்கள் குழாம் ஒன்றும் நியமிக்கப்பட்டுள்ளது.

பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய, நீதியரசர்களான புவனேக அலுவிஹாரே, சிசிர டி ஆப்ரூ, பிரியந்த ஜயவர்தன மற்றும் விஜித் மலல்கொட ஆகியோர் இந்த குழுவில் அங்கம் வகிக்கின்றனர்.

20 ஆவது அரசியலமைப்பு திருத்த வரைபு எதிர்க்கட்சியின் கடும் எதிர்ப்புக்கு மத்தியில் பாராளுமன்றத்தில் கடந்த 22 ஆம் திகதி நீதி அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரியினால் சமர்ப்பிக்கப்பட்டது.

இந்நிலையில் ஒரு வார காலத்தினுள் இதற்கு எதிராக யாரேனும் உயர் நீதிமன்றத்தை நாடினால் 21 நாட்களுக்கு 20ஆவது திருத்தம் தொடர்பாக எந்த முன்னெடுப்பையும் பாராளுமன்றத்துக்குள் முன்னெடுக்க முடியாது.

பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டுள்ள 20 ஆவது திருத்தம் தொடர்பான சட்டமூலத்தை சவாலுக்குட்படுத்தி இன்று வரை உயர் நீதிமன்றத்தில் மனுக்களை தாக்கல் செய்ய முடியும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## மாகாண சபைத் தேர்தலை...

முன்வைத்துள்ளார். அரசியல்வாதிகளும் மனிதர்கள் என்று நானே கூறுகிறேன். இலங்கையில் வேறு எவரும் இதனைக் கூற கேட்டதில்லை. அரசியல்வாதிகளும் எமது சமூகத்தில் ஒரு அங்கம்.

நாம் சமூகத்தைக் கறுப்பாக வைத்துக்கொண்டு, தங்கத்தால் செய்த, வெள்ளியால் அலங்கரிக்கப்பட்ட, பாலில் நீராட்டிய அரசியல்வாதிகளைத் தேட முடியாது.

எமக்கு ஜனநாயக சமூகம் அவசியம் என்றால், அமைச்சர் நாமல் ராஜபக்ஷ கூறியது போல், ஜனநாயகத்தின் ஊடாக எதனையும் செய்யக் கூடிய சுதந்திரம் இருக்க வேண்டும்.

அப்படியான சுதந்திரம் கிடைப்பதில்லை. ஜனநாயகம் என்பது மற்றவர்களை மதிப்பது, அவர்களின் கருத்துக்கு இடமளிப்பது. இதனைத் தவிர வேறு எதுவுமில்லை.

அரசியலமைப்புச் சட்டத்தை உருவாக்க வேண்டுமாயின் கருத்துக்களைப் பெற வேண்டுமென நான்கு இளம் பாராளுமன்ற உறுப்பினர்கள் கூறுவது குறித்து மகிழ்ச்சி.

78 ஆம் ஆண்டு அரசியலமைப்புச் சட்டம் உருவாக்கப் படும் போது மக்களிடம் கருத்து கேட்கப்படவில்லை. தற்போது, நான் 20ஆவது குறித்தோ 19ஆவது திருத்தச் சட்டம் குறித்தோ பேச போவதில்லை. நான் தற்போது ஆணைக்குழுவில் இருக்கின்றேன்.

சிறந்த அரசியலமைப்புச் சட்டம் கிடைக்குமென நாங்கள் எதிர்பார்க்கின்றோமென்றும் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

## வடக்கில் பூரண...

மாவட்டத்திலும் பூரண ஹர்த்தால் முன்னெடுக்கப்பட்டது.

திலீபனை நினைவுகூருவதற்கு எதிராக யாழ்ப்பாண பொலிசார் நீதிமன்றத்தில் தடையுத்தரவு பெற்ற நிலையில், அஞ்சலி நிகழ்வுக்கு அனுமதி வழங்குமாறு கோரி தமிழ்த் தேசிய கட்சிகள் அனைத்தும் ஒன்றிணைந்து ஜனாதிபதிக்கு கடிதம் மூலம் கோரிக்கை விடுத்தனர். இக் கட்சிகளின் கோரிக்கைக்கு பதில் கிடைக்காத நிலையில் மீண்டும் யாழில் கூடிய தமிழ் தேசிய கட்சிகள் இச் செயற்பாட்டுக்கு எதிராக யாழில் அடையாள உண்ணாவிரத போராட்டத்தை நடத்துவதெனவும் வடக்கு, கிழக்கில் பூரண ஹர்த்தாலை மேற்கொள்வதெனவும் தீர்மானித்திருந்திருந்தன.

இந்நிலையில் சனிக்கிழமை தொண்டைமனாறு ஆலய முன்றலில் உண்ணாவிரத போராட்டத்தை நடத்த தீர்மானித்திருந்த நிலையில் அதற்கு எதிராக பருத்தித்துறை நீதிமன்றம் தடையுத்தரவு பிறப்பித்திருந்தது. அதனையடுத்து சாவகச்சேரியில் உண்ணாவிரத போராட்டத்தை மேற்கொண்டனர்.

அதேபோன்று வடக்கு, கிழக்கு ரீதியில் நேற்று பூரண ஹர்த்தாலுக்கு அழைப்புவிடுத்திருந்த நிலையில் வடக்கில் அனைத்து தரப்பினரும் பூரண ஹர்த்தாலுக்கு ஆதரவு வழங்கியிருந்தனர். கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தில் மக்கள் பூரண ஆதரவு வழங்கியிருந்தனர்.

குறிப்பாக வடக்கில் அனைத்து தமிழ் தேசிய கட்சிகளும் இப் போராட்டத்துக்கு ஆதரவு வழங்கியிருந்ததுடன், யாழ்.பல்கலைக்கழக கலைப்பீட மாணவர் ஒன்றியமும் அதற்கு ஆதரவு வழங்கியிருந்தது. அத்துடன் பொது அமைப்புகள் பலவும் தமது ஆதரவை வழங்கியிருந்தன.

**யாழ்ப்பாணத்தில்....**

யாழ்ப்பாணத்தில் சகல இடங்களிலும் பூரண ஹர்த்தால் முன்னெடுக்கப்பட்டது. மாவட்டத்தின் பிரதான சந்தைகள், யாழ்.நகரப் பகுதி, பாடசாலைகள், அரச அலுவலகங்களென அனைத்தும் முடக்கப்பட்ட நிலையில் காணப்பட்டன.

நீதிமன்றங்கள் இயங்கிய போதும் அங்கு சட்டத்தரணிகள் வருகை தரவில்லை. இதனால் வழக்கு நடவடிக்கைகள் பாதிப்படைந்தன. அதேபோன்று அரச அலுவலகங்கள் இயங்கிய போதும் பொது மக்கள் யாரும் வருகை தந்திருக்கவில்லை.

இவை தவிர அனைத்து வர்த்தக நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள் அனைத்தும் பூட்டிய நிலையிலேயே காணப்பட்டன. பொது போக்குவரத்தில் இலங்கை போக்குவரத்து சபையினர் ஈடுபட்டிருந்த போதும் பொது மக்கள் பெரியளவில் ஈடுபட்டிருக்கவில்லை. இதனால் யாழில் மக்களின் இயல்பு வாழ்க்கை முற்றாக முடங்கியிருந்தது.

**வவுனியாவில்...**

வவுனியாவிலும் பூரண ஹர்த்தால் முன்னெடுக்கப்பட்டது. வியாபார நிலையங்கள், சந்தைத் தொகுதிகள் அனைத்தும் பூட்டிய நிலையிலேயே காணப்பட்டன. பாடசாலைகளில் மாணவர்களின் வரவு மிகக் குறைவாகவே காணப்பட்டன.

**முல்லைத்தீவில்...**

முல்லைத்தீவிலும் மக்களின் இயல்பு வாழ்க்கை முற்றாக முடக்கப்பட்டிருந்தது. பொது போக்குவரத்தில் அரச, தனியார் பஸ் சேவைகள் ஈடுபட்டிருந்த போதும் பொது மக்கள் யாரும் போக்குவரத்தில் ஈடுபட்டிருக்கவில்லை.

அதேபோன்று சந்தைகள், வியாபார நிலையங்கள், பொது இடங்கள் அனைத்தும் பூட்டிய நிலையில் வெறிச்சோடி காணப்பட்டதுடன் நீதிமன்றங்கள் இயங்கிய போதும் சட்டத்தரணிகள் யாரும் சென்றிருக்கவில்லை.

**மன்னாரில்...**

மன்னாரில் மக்களின் முழுமையாக பாதிக்கப்படாத நிலையே காணப்பட்டது.

வியாபார நிலையங்கள் மாத்திரமே முடப்பட்டிருந்ததுடன் அரச தனியார் நிறுவனங்கள் வழமை போன்று இயங்கியிருந்தன.

பொதுப் போக்குவரத்தும் வழமை போன்று காணப்பட்டதுடன், அரச நிறுவனங்கள், பாடசாலைகள் இயங்கியிருந்தன. எனினும் மக்களினதும் மாணவர்களினதும் வரவு மிகக் குறைவாகக் காணப்பட்டமையை அவதானிக்க முடிந்தது.

**கிளிநொச்சியில்...**

கிளிநொச்சி மாவட்டத்தில் முழுமையான ஹர்த்தால் முன்னெடுக்கப்பட்டது. வியாபார நிலையங்கள், தனியார் நிறுவனங்கள் முற்றாக முடங்கியிருந்ததுடன், பொதுப் போக்குவரத்தின் தனியார் துறையினர் ஈடுபட்டிருக்கவில்லை.

**கிழக்கு மாகாணம்...**

கிழக்கு மாகாணத்தில் முழுமையாக ஹர்த்தாலுக்கு மக்கள் ஆதரவு வழங்கியிருக்கவில்லை. குறிப்பாக மட்டக்களப்பு மாவட்டத்தில் மக்கள் ஆதரவு வழங்கியிருந்த போதும் ஏனைய மாவட்டங்களான அம்பாறை மற்றும் திருகோணமலையில் வழமைபோன்றே மக்களின் இயல்பு வாழ்க்கை காணப்பட்டது.

**ஹர்த்தாலுக்கு எதிராகவும் ஆர்ப்பாட்டம்...**

இதேவேளை ஹர்த்தாலுக்கு எதிராக கிழக்கு மாகாணத்தின் மட்டக்களப்பு மாவட்டத்தில் ஆர்ப்பாட்டம் இடம்பெற்றுள்ளது. பொது மக்களால் ஏற்பாடு செய்யப்பட்டதாக தெரிவிக்கப்பட்டு இப் போராட்டம் இடம்பெற்றுள்ளது. மட்டக்களப்பு வாழச்சேனைப் பகுதியில் இப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

**வியாபார நிலையங்களை திறக்க பொலிஸார் வற்புறுத்தல்...**

வடக்கில் பூட்டியிருந்த வியாபார நிலையங்களை திறக்குமாறு பொலிசார் அச்சுறுத்தியுள்ளனர். குறிப்பாக வவுனியா மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் சில இடங்களில் பூட்டியிருந்த வியாபார நிலையங்களில் காணப்பட்ட தொலைபேசி இலக்கங்களுக்கு தொடர்பு கொண்ட பொலிஸ் மற்றும் புலனாய்வாளர்கள் வியாபார நிலையங்களை திறக்க கூறி அச்சுறுத்தியுள்ளனர்.

**பாதுகாப்பு அதிகரிப்பு...**

வழமைக்கு மாறாக பொலிஸ் மற்றும் இராணுவத்தின் பாதுகாப்பு வடக்கில் அதிகரிக்கப்பட்டிருந்தது. யாழ்ப்பாணம், மன்னார், முல்லைத்தீவு, வவுனியா, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில் பொது இடங்கள் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் பொலிஸ் மற்றும் பொலிஸ் விசேட அதிரடிப்படையினரின் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டிருந்ததை அவதானிக்க முடிந்தது.

## 6 மாதத்தில் புதிய...

20 ஆவது திருத்தம் குறித்து ஆராய ஐவரடங்கிய குழுவை பிரதம நீதியரசர் நியமித்துள்ளார். செப்டம்பர் 22 இல் சட்டமூலம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. எனவே ஒக்டோபர் 12 ற்கு முன்னர் உச்ச நீதிமன்றம் தீர்ப்பை அறிவிக்க வேண்டும். அதன் பின்னர் இரண்டாவது வாசிப்பிற்காக 20 ஆவது திருத்தம் சமர்ப்பிக்கப்படும். எமது கட்சி சார்பிலும் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

நல்லாட்சி காலத்தில் ஜனாதிபதிக்கும் பிரதமருக்குமிடையிலான இழுபறி காரணமாக தாக்குதல் தொடர்பான தகவல் கிடைத்தும் நடவடிக்கை எடுக்கப்படாதது பற்றி உயிர்த்த ஞாயிறு ஜனாதிபதி ஆணைக்குழுவில் அம்பலமாகி வருகிறது.

19 ஆவது திருத்தத்தினால் அன்று ஏற்பட்ட குழப்ப நிலையை தொடர முடியாது. இன்று சகோதரர்கள் ஜனாதிபதி, மற்றும் பிரதமராக உள்ளனர். ஆனால் நீண்ட கால நோக்கிலே யாப்பு திருத்தம் செய்யப்படுகிறது. எதிர்க்கட்சியில் சிலரும் 20 ஆவது திருத்தத்திற்கு ஆதரவு வழங்க முன்வருவர்.ஒக்டோபர் 12 இன் பின்னர் இதனை நிறைவேற்ற வாய்ப்புள்ளது.

எதிர்வரும் 06 மாத காலத்தினுள் புதிய அரசியலமைப்பிற்கான அடிப்படை சட்ட வரைவு பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும். இதற்கான ஜனாதிபதி சட்டத்தரணி ரொமேஷ் டி சில்வாவின் தலைமையில் நிபுணர் குழு அமைக்கப்பட்டுள்ளது.இந்தக் குழு தனது பணிகளை ஆரம்பித்துள்ளது. அமைச்சரவையின் அனுமதியுடன் இக்குழு நியமிக்கப்பட்டது. அதன் பரிந்துரைகளுக்கு அமைவாக புதிய யாப்பிற்கான முன்னெடுப்பு இடம்பெறும்.

கடந்த ஆட்சியில் உயர் பாதுகாப்பு அதிகாரிகளுக்கு செயற்பட முடியவில்லை. நாட்டை நிர்வகிக்க 19 ஆவது திருத்தம் மாற்றப்பட வேண்டும். 42 வருடத்திற்கு முன்னர் ஜே.ஆர் ஆட்சியில் உருவாக்கிய யாப்பு இன்னும் தொடர்கிறது. இக்காலத்தில் பல கட்சிகள் ஆட்சி செய்தன.

20 ஆவது திருத்தம் அவசரப்பட்டு முன்வைக்கப்படவில்லை. ஜனாதிபதியினால் பாதுகாப்பு அமைச்சராக செயற்பட முடியாது. தவறு செய்த பொலிஸ் மாஅதிபரை நீக்க முடியாது. 69 இலட்சம் மக்கள் இதனை மாற்றவே ஆணை வழங்கினர். நாட்டின் பாதுகாப்பிற்கு பாதுகாப்பு அமைச்சு பிரதானமானது. இந்த மாற்றங்களுக்கு 06 மாதம் காத்திருக்க தேவையில்லை. 20 ஆவது திருத்தம் மட்டுப்படுத்தப்பட்ட நோக்கத்திற்காகவே சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. தற்கால பிரச்சினைகளைத் தீர்க்க இந்த மாற்றம் அவசியம். 20 ஆவது திருத்தத்தில் புதிய விடயங்கள் உள்ளடக்கப்படவில்லை. 19 ஆவது திருத்தத்திற்கு முற்பட்ட நிலைமைக்கே மாற்றம் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றார்.

# அமெரிக்காவில் டிக்டொக் தடைக்கு முட்டுக்கட்டை




அமெரிக்காவில் டிக்டொக் செயலிக்கு தடை விதிப்பதை அந்நாட்டு நீதிபதி ஒருவர் இடைநிறுத்தியுள்ளார்.

இந்த வீடியோ பகிர்வுத் தளம் ஆப்பிளின் ஏப்ஸ்டோர் மற்றும் அன்ட்ரோயிட்டின் கூகுள் பிளெயில் இருந்து நீக்கப்படவிருந்த நிலையிலேயே இந்த முட்டுக்கட்டை போடப்பட்டுள்ளது.

இதனால் அமெரிக்காவைத் தளமாகக் கொண்ட பயனர்களுக்கு தொடர்ந்தும் அந்த செயலியை பயன்படுத்த வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. எனினும் இந்த செயலியை அகற்றியவர்களுக்கு அதனை மீண்டும் தரவிறக்கம் செய்ய முடியாது என்பதோடு, மென்பொருள் புதுப்பித்தல்களும் வழங்கப்படுவதில்லை.

டிக் டொக்கின் கோரிக்கையை அடுத்து கொலம்பியா மாவட்டத்தின் அமெரிக்க மாவட்ட நீதிமன்ற நீதிபதி கார்ல் நிகொலஸ் கடந்த ஞாயிறன்று இந்தத் தடையை இடைநிறுத்தி உத்தரவிட்டார்.

டிக் டொக் செயலி நாட்டின் தேசிய பாதுகாப்புக்கு ஆபத்து என்று அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் குற்றம்சாட்டுகிறார்.

சுமார் 100 மில்லியன் அமெரிக்கர்களின் தனிப்பட்ட தகவல்களை அந்தச் செயலி சேகரிப்பதாக அமெரிக்க அதிகாரிகள் கவலை தெரிவித்ததைத் தொடர்ந்து அதனைத் தடை செய்ய முடிவெடுக்கப்பட்டது.

# நிலக்கரி சுரங்கத்தில் சிக்கிய 16 பேர் பலி



தென்மேற்கு சீனாவில் நிலக்கரி சுரங்கம் ஒன்றில் சிக்கிய பதினாறு சுரங்கத் தொழிலாளர்கள் உயிரிழந்திருப்பதோடு மேலும் ஒருவர் உயிரிக்கு ஆபத்தான நிலையில் சிக்கிச்சை பெற்று வருகிறார்.

பொருட்களை எடுத்துச் செல்லும் பட்டை ஒன்றில் கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை ஏற்பட்ட தீயினால் ஆபத்தான அளவில் காபனோரொக்சைட் வெளியானதே இந்த உயிரிழப்புகளுக்குக் காரணம் என்று சீன அரசு குறிப்பிட்டுள்ளது.

இந்த சம்பவத்திற்கான காரணத்தை கண்டறிவது தொடர்பில் தொடர்ந்து விசாரணை நடத்தப்பட்டு வருவதாக கியுஜியாங் மாவட்ட அரசு, சமூக ஊடகமான வெய்போவில் தெரிவித்துள்ளது.

விபத்து இடம்பெற்ற சொங்சோ நிலக்கரிச் சுரங்கம் அரச எரிசக்தி நிறுவனத்திற்கு சொந்தமானதாகும். எனினும் மோசமான பாதுகாப்பு செயற்பாடுகள் மற்றும் ஒழுங்குமுறைகளை கடைப்பிடிப்பதில் உள்ள குறைபாடுகள் காரணமாக சீனாவில் சுரங்க விபத்துகள் அடிக்கடி நிகழ்கின்றன.

தென்மேற்கு குயின்சு மாகாணத்தில் கடந்த டிசம்பர் மாதம் நிலக்கரி மற்றும் எரிவாயு சுரங்கம் ஒன்றில் ஏற்பட்ட வெடிப்பில் குறைந்தது 14 பேர் கொல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

கொவிட்–19 அச்சம்

# பீஜிங்கில் உறைந்த உணவுகளின் இறக்குமதிகளுக்குக் கட்டுப்பாடு



கொவிட்–19 நோய்த் தொற்று கடுமையாக உள்ள நாடுகளிலிருந்து உறையவைக்கப்பட்ட உணவுப் பொருட்களைத் தருவிப்பதைத் தவிர்க்குமாறு சீனத் தலைநகர் பீஜிங் நிர்வாகம் இறக்குமதியாளர்களை வலியுறுத்தியுள்ளது.

இறக்குமதி செய்யப்பட்ட கடலுணவில் வைரஸ் இருப்பது கண்டறியப்பட்ட பல்வேறு சம்பவங்களை அடுத்து பீஜிங் அவ்வாறு தெரிவித்தது.

அதன் மூலம் வைரஸ் பரவும் அபாயம் உள்ளதாக இறக்குமதியாளர்களுக்கு அனுப்பப்பட்ட அறிக்கையில் பீஜிங் நகராட்சி வர்த்தகப் பிரிவு குறிப்பிட்டது.

வெளிநாடுகளின் வைரஸ் தொற்றுச் சூழலைக் கூர்ந்து கண்காணிக்குமாறும் இறக்குமதிகளுக்கு மாற்றுத் திட்டங்களைச் செயல்படுத்துமாறும் அது கூறியது. மேலும், பொருட்களில் வைரஸ் தென்பட்டால் உடனடியாக அதிகாரிகளுக்குத் தகவல் அளிக்கும்படி அது கேட்டுக்கொண்டது.

சீனாவில் சுமார் 1 மாதமாகச் சமூக அளவில் யாருக்கும் வைரஸ் தொற்றியதாகப் பதிவாகவில்லை.

அண்மையில் பிரேசில், இந்தோனேசியா, ரஷ்யா ஆகிய நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் கடலுணவுக்குச் சீனா தற்காலிகமாகத் தடை விதித்தது.

# அசர்பைஜான்–ஆர்மேனியா இடையே இரண்டாவது நாளாக உக்கிர மோதல்



ஆர்மேனியா மற்றும் அசர்பைஜான் படைகள் இரண்டாவது நாளாக நேற்றும் உக்கிர மோதலில் ஈடுபட்டதோடு, கனரக பீரங்கிகளை பயன்படத்தியதாக இரு தரப்பும் பரஸ்பரம் குற்றம்சாட்டுகின்றன.

அசர்பைஜான் நாட்டுக்குள் இருக்கும் ஆனால் 2016 ஆம் ஆண்டு தொடக்கம் ஆர்மேனிய இனத்தினரின் கட்டுப்பாட்டில் உள்ள சர்ச்சைக்குரிய நகொர்னோ–கரபக் பிராந்தியம் தொடர்பிலேயே தற்போதைய மோதல் வெடித்துள்ளது.

இந்த மோதல்களில் மேலும் 15 துருப்புகள் கொல்லப்பட்டதாகவும் கடந்த ஞாயிறன்று இழந்த சில நிலங்களை மீட்டதாகவும் ஆர்மேனியா குறிப்பிட்டுள்ளது. அங்கு அசர்பைஜான் படைகள் கடும் பீரங்கி தாக்குதல் நடத்துவதாக அது குறிப்பிட்டுள்ளது.

டெர்டர் நகரின் மீது ஆர்மேனிய படை கடும் பீரங்கி தாக்குதல் நடத்தியது என்று அசர்பைஜான் பாதுகாப்பு அமைச்சு குறிப்பிட்டுள்ளது. இதனால் 26 பொதுமக்கள் காயமடைந்திருப்பதாக அது குறிப்பிட்டுள்ளது.

அசர்பைஜான் வான் மற்றும் பீராங்கி தாக்குதல்களை நடத்தியதில் தமது 31 படையினர் கொல்லப்பட்டு 100க்கும் அதிகமானவர்கள் காயமடைந்ததாக கொர்னோ–கரபக் ஆர்மேனிய பிரிவினைவாதிகள் குறிப்பிட்டுள்ளனர்.

இந்நிலையில் இரு நாடுகளும் பகுதி அளவான இராணுவக் குவிப்பு மற்றும் சில பகுதிகளில் இராணுவச் சட்டத்தை பிரகடனம் செய்துள்ளன.

இரண்டு முன்னாள் சோவியட் ஒன்றிய நாடுகளுக்கும் இடையே காகசஸ் மலைத் தொடரில் உள்ள இந்த பிராந்தியத்தை ஒட்டிய பிரச்சினை கடந்த மூன்று தசாப்தங்களுக்கும் மேலாக தீர்க்கப்படாமல் இருப்பதோடு அங்கு அடிக்கடி மோதல்களும் இடம்பெற்று வருகின்றன.

கடந்த ஜூலையில் இடம்பெற்ற எல்லை மோதல்களில் குறைந்தது 16 பேர் கொல்லப்பட்டனர். இதனால் அந்தப் பிராந்தியத்தை மீண்டும் கைப்பற்ற அழுத்தம் கொடுத்து அசர்பைஜான் தலைநகரில் மிகப் பெரிய ஆர்ப்பாட்டமும் இடம்பெற்றது.

காஸ்பியன் கடலில் இருந்து உலக சந்தைகளுக்கு எண்ணெய் மற்றும் இயற்கை வாயுவை விநியோகிக்கும் குழாய் பாதை தெற்கு காகசஸ் ஊடாகச் செல்வதால் இந்த பிராந்தியத்தில் ஏற்படும் பதற்றம் அந்த விநியோகத்தில் சிக்கலை ஏற்படுத்தும்.

இதில் அசர்பைஜானுக்கு ஆதரவு வெளியிட்டிருக்கும் துருக்கி ஜனாதிபதி ரிசப் தையிப் எர்துவான், “ஆக்கிரமிப்பு மற்றும் கொடுமைக்கு எதிராக உலகம் நிற்க வேண்டும்” என்று வலியுறுத்தியுள்ளார். முஸ்லிம் பெரும்பான்மை கொண்ட அசர்பைஜான் துருக்கியுடன் நெருக்கமான உறவை கொண்டுள்ளது.

கிறிஸ்தவர்களை பெரும்பான்மையாகக் கொண்ட ஆர்மேனியாவின் நெருங்கிய நட்பு நாடான ரஷ்யா, உடன் போர் நிறுத்தம் ஒன்றை கொண்டுவரவும் பேச்சுவார்த்தை மூலம் ஸ்திரத்தன்மையை ஏற்படுத்தவும் அழைப்பு விடுத்துள்ளது. ரஷ்யா தனது இராணுவத் தளத்தையும் ஆர்மீனியாவில் வைத்துள்ளது.

இரு தரப்பையும் அமைதி காக்கும்படி சீனா வலியுறுத்தியுள்ளது. இந்த வன்முறையை முடிவுக்குக் கொண்டுவர அமெரிக்கா முயற்சிக்கும் என்று அமெரிக்க ஜனாதிபதி டொனால் டிரம்ப் குறிப்பிட்டுள்ளார்.

எனினும் இந்த மோதலில் பிராந்திய சக்திகளும் தலையிடும் அச்சமும் தற்போது அதிகரித்துள்ளது.

# எல்லைகளை கட்டுப்படுத்தும் சுவிஸ் வாக்கெடுப்பு தோல்வி




ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுடனான சுதந்திர நடமாட்டத்தை முடிவுக்குக் கொண்டுவந்து நாட்டின் எல்லைகளை கட்டுப்படுத்துவது குறித்த பரிந்துரையை சுவிட்சர்லாந்து வாக்காளர்கள் நிராகரித்துள்ளனர்.

இது தொடர்பில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற சர்வஜன வாக்கெடுப்பில் 62 வீதமானவர்கள் இந்த சுதந்திர நடமாட்டத்தை தொடர்ந்து தக்கவைத்துக்கொள்ள ஆதரவு அளித்ததோடு 38 வீதமான வாக்காளர்களே அதனை எதிர்த்தனர்.

சுவிட்சர்லாந்து ஐரோப்பிய ஒன்றிய அங்கத்துவ நாடு இல்லாதபோதும் அந்த அமைப்புடன் செய்துகொண்ட உடன்படிக்கையின்படி இந்த சுதந்திர நடமாட்டத்திற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

குடியேற்றவாசிகளை கட்டுப்படுத்தும் வகையில் சுவிஸ் மக்கள் கட்சி இந்தத் தீர்மானத்தை கொண்டுவந்தபோதும் அதனை அந்நாட்டு அரசு எதிர்த்தது. சுவிட்சர்லாந்தில் வாழும் 2.1 மில்லியன் வெளிநாட்டினர்களில் இரண்டில் ஒரு பங்கினர் ஐரோப்பிய ஒன்றிய பிரஜைகளாவர்.

சுவிட்சர்லாந்தின் நேரடி ஜனநாயக அமைப்பின் அடிப்படையில், ஐரோப்பிய ஒன்றியத்துடனான ஒப்பந்தம் ஒன்றை ரத்துச் செய்வதில் உடன்பாடு ஒன்று எட்டப்படாத பட்சத்தில் சர்வஜன வாக்கெடுப்பு ஒன்றை நடத்துவதற்கு அரசு நிர்ப்பந்திக்கப்படுகிறது.

# மெக்சிகோ மதுபான விடுதியில் துப்பாக்கிச் சூடு: 11 பேர் பலி



மக்கோசிகோவில் மதுபான விடுதி ஒன்றில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் நான்கு பெண்கள் உட்பட 11 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

மத்திய மாநிலமான குவானாஜுவாடோவில் கடந்த ஞாயிற்றுக்கிழமை துப்பாக்கி குண்டுகள் துளைத்த உடல்கள் மீட்கப்பட்டதாக அரச வழக்கறிஞர்கள் குறிப்பிட்டுள்ளனர். ஜலிஸ்கோ என்ற குற்றக்கும்பல் ஒன்று ஊடுருவும் பகுதியிலேயே இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

அந்த மதுபான விடுதியில் நடனமாடும் நான்கு பெண்களே கொல்லப்பட்டிருப்பதாக உள்ளூர் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. கொலைகளுக்கான காரணம் தெரியாதபோதும் போதைக் கடத்தலுடன் தொடர்புபட்டிருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது.

மெக்சிகோவில் அதிக வன்முறை கொண்ட மாநிலமாக குவானாஜுவாடோ அண்மைய ஆண்டுகளில் மாறியுள்ளது. எனினும் இங்குள்ள குற்ற கும்பல் தலைவன் ஒருவன் கடந்த ஒகஸ்ட் 2ஆம் திகதி கைது செய்யப்பட்ட நிலையில் இங்கு வன்முறைகள் குறையும் என்று உள்ளூர் நிர்வாகம் நம்பியது.

எனினும் அந்தத் தலைவனின் இடைவெளியை நிரப்புவதில் குற்ற கும்பலுக்குள் ஏற்பட்டிருக்கும் மோதலால் வன்முறை மேலும் அதிகரிக்க வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

# 15 இல் 10 ஆண்டுகள் வரி செலுத்தாத டிரம்ப்



அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் கடந்த 15 ஆண்டுகளில் 10 ஆண்டுகள் வருமான வரி செலுத்தியதில்லை என்று நியூயோர்க் டைம்ஸ் பத்திரிகை தகவல் அளித்துள்ளது. 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் அவர் வெறுமனே 750 டொலர் வரியே செலுத்தி இருப்பதாக வரி வருவாய் தரவுகளை மேற்கோள்காட்டி அந்த செய்தி குறிப்பிட்டுள்ளது.

எனினும் இந்தத் தகவலை டிரம்ப் ‘போலிச் செய்தி’ என்று வர்ணித்துள்ளார். வருமானத்தை விட தமக்கு இழப்பு அதிகம் இருந்ததாக அவர் குறிப்பிட்டிருந்தது, வரி விதிக்கப்படாததற்குக் காரணம் எனக் கூறப்படுகிறது.

அமெரிக்க ஜனாதிபதிகள் தங்கள் தனிப்பட்ட நிதி கணக்குகள் பற்றிய விபரங்களை வெளியிடுவதற்கான சட்டரீதியான தேவை இல்லை. ஆனால், முன்னாள் ஜனாதிபதி ரிச்சர்ட் நிக்சனை அடுத்து அந்தப் பொறுப்பில் இருந்த அனைவரும் தங்கள் நிதி தொடர்பான விபரங்களை வெளியிட்டுள்ளனர். டிரம்ப் மட்டுமே இதுவரை அந்த வழக்கத்துக்கு மாறாகச் செயல்பட்டுள்ளார்.

கொவிட்–19

# உலகளாவிய உயிரிழப்பு 1 மில்லியனை தொட்டது



சீனாவில் தோன்றி ஓர் ஆண்டுக்கும் குறைவான காலத்திற்குள் உலகெங்கும் பரவியுள்ள கொரொனா வைரஸ் தொற்றினால் உயிரிழந்தவர்கள் எண்ணிக்கை ஒரு மில்லியனைத் தாண்டியுள்ளது.

இந்தப் பெருந்தொற்று உலகப் பொருளாதாரத்தை பாதித்து, பூகோள அரசியல் பதற்றத்தை ஏற்படுத்தியதோடு, இந்திய சேறிகள் மற்றும் பிரேசில் காடுகள் தொடக்கம் அமெரிக்காவின் மிகப்பெரிய நகரான நியூயோர்க்கிலும் உயிர்களை காவுகொண்டது.

இந்நிலையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை முடிவின்போது கொரோனா தொற்றுக்கு உள்ளானோர் எண்ணிக்கை 33,018,877 ஆக உயர்ந்ததோடு உயிரிழப்பு 1,000,009 ஆக அதிகாரித்ததாக உத்தியோகபூர்வ தரவுகளை மேற்கோள்காட்டி ஏ.எப்.பி செய்தி வெளியிட்டுள்ளது.

இதில் அமெரிக்காவில் அதிகபட்சமாக 200,000க்கும் அதிகமானோர் உயிரிழந்திருப்பதோடு இதற்கு அடுத்து பிரேசில், இந்தியா, மெக்சிகோ மற்றும் பிரிட்டன் நாடுகளில் அதிக உயிரிழப்புகள் இடம்பெற்றுள்ளன.

இந்த வைரஸ் தொற்றுக்கான தடுப்பு மருந்து ஒன்றை கண்டு பிடிப்பதற்கான முயற்சிகள் உலகெங்கும் தீவிரமாக இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# யெமன் போர் தரப்புகள் கைதிகள் பரிமாற்றம்



யெமனில் தொடரும் உள்நாட்டுப் போரில் சம்பந்தப்பட்டுள்ள இருதரப்பும் அவற்றின் கட்டுப்பாட்டில் இருக்கும் சுமார் 1,000 கைதிகளைப் பரிமாற்றம் செய்ய இணங்கியுள்ளன.

சுவிட்ஸர்லாந்தில் நடைபெற்ற ஒரு வார அமைதிப் பேச்சைத் தொடர்ந்து அந்த முடிவு எட்டப்பட்டது. யெமன் அரசாங்கம், ஹூத்தி கிளர்ச்சி இயக்கத்தை எதிர்த்து கடந்த 5 ஆண்டுகளாகப் போராடி வருகிறது.

உள்நாட்டுப் போர் ஆரம்பித்ததில் இருந்து, கைதிகளின் பரிமாற்றம் பெரிய அளவில் நடைபெறுவது இதுவே முதல் முறையாகும்.

அமைதிக்கான பாதையில் அது மேலும் ஒரு படியாக அமையும் என்று நம்புவதாக, யெமனுக்கான ஐக்கிய நாட்டு நிறுவனத்தின் சிறப்புத் தூதர் மார்ட்டின் கிரிபித்ஸ் கூறினார்.

யெமன் போர் பிராந்திய சக்திகளான சவூதி அரேபியா மற்றும் ஈரானுக்கு இடையிலான மறைமுக மோதலாகவே பார்க்கப்படுகிறது.

# அமெரிக்காவின் உச்ச நீதிமன்ற நீதிபதியை நியமிப்பதில் சர்ச்சை



அமெரிக்க உச்ச நீதிமன்றத்தில் நீதிபதிக்கான வெற்றிடத்தை நிரப்ப ஜனாதிபதி டொனால் டிரம்ப் செய்திருக்கும் நியமனம் குறித்து சர்ச்சை நீடித்து வருகிறது. அதுகுறித்த முடிவு அடுத்த மாதம் 12ஆம் திகதி எடுக்கப்படவுள்ளது.

மேல்முறையீட்டு நீதிமன்ற நீதிபதியான 48 வயது ஏமி கோனி பேரட் என்பவரையே டிரம்ப் அந்தப் பதவிக்கு முன்மொழிந்துள்ளார். கருக்கலைப்புக்கு எதிரான போக்கைக் கொண்ட அவர், துப்பாக்கி தொடர்பான உரிமைகளை ஆதரித்து வருகிறார்.

ஏமியின் உத்தேச நியமனம் பற்றிய செய்தியால் கருக்கலைப்பு உரிமை, கட்டுப்படியான சுகாதாரப் பராமரிப்புச் சட்டம் ஆகியவை பற்றி அதிகம் விவாதிக்கப்படுகிறது. அந்தச் சட்டம் மீட்டுக்கொள்ளப்படுவதை அவர் ஆதரிப்பார் என டிரம்ப்பின் எதிர்ப்பாளர்கள் கூறுகின்றனர்.

அப்படி நடந்தால் சுமார் 20 மில்லியன் அமெரிக்கர்களின் சுகாதாரப் பராமரிப்பு கேள்விக்குறியாகும்.

இதற்கிடையே ஜனாதிபதி தேர்தல் முடிவடையும் வரை காத்திருக்குமாறு ஜனநாயகக் கட்சி ஜனாதிபதி வேட்பாளர் ஜோ பைடல் தெரிவித்துள்ளார்’.

தினகரன் THINAKARAN

35, டி.ஆர்.விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10

தபால் பெட்டி இலக்கம்: 834

தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279

பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சார்வரி வருடம் புரட்டாதி மாதம் 13ஆம் நாள் செவ்வாய்க்கிழமை

ஹிஜ்ரி வருடம் 1442 சபர் பிறை 11

### குறள் தரும் சிந்தனை



அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு

அன்பு இல்லாதவர் எல்லாவற்றாலும் தமக்கே உரிமை உடையவராய் இருப்பர். அன்புள்ளவரோ பொருளால் மட்டும் அன்று; உடம்பாலும் பிறர்க்கு உரியவராய் இருப்பர்.

## வடபகுதி கடற்றொழிலாளர்களின் நீண்ட கால வாழ்வாதார பிரச்சினை

நாட்டின் வடபகுதி கடற்றொழிலாளர்கள் நீண்ட காலமாக எதிர்கொண்டுள்ள பிரச்சினைகள் ஓரிரு தினங்களுக்கு முன்னர் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் நேரடி கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளன. கடற்றொழில் அமைச்சரும் யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான டக்ளஸ் தேவானந்தா, வடமாகாண மீன்பிடித் தொழிலாளர்கள் எதிர்கொண்டுள்ள பிரச்சினைகள் தொடர்பாக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவிடம் அண்மையில் விரிவாக எடுத்துக் கூறி இருந்தார்.

இதனையடுத்து பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ சில தினங்களுக்கு முன்னர் அலரி மாளிகையில் விசேட சந்திப்பொன்றை ஏற்பாடு செய்திருந்தார். பிரதமருடனான இச்சந்திப்பில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் வடமாகாணத்தில் உள்ள கடற்றொழிலாளர்கள் சங்கங்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். இச்சந்திப்பின் போது வடமாகாண மீன்பிடித் தொழிலாளர்களின் பிரச்சினைகளை பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ கேட்டறிந்து கொண்டதுடன், அப்பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் தெரிவித்திருக்கின்றார்.

வடக்கு மீனவர்கள் எதிர்கொள்கின்ற பிரச்சினைகளில் பிரதானமானது இந்திய மீனவர்களின் சட்டவிரோத ஊடுருவல் ஆகும். இலங்கை கடல் எல்லைக்குள் இந்திய மீனவர்கள் தங்களது நாட்டு எல்லையைத் தாண்டி வந்து மீன்பிடிப்பதென்பது நெடுங்காலமாக நிலவி வருகின்ற அத்துமீறல் ஆகும். நாள்தோறும் கண்ணுக்கெட்டிய தூரத்தில் பல நூற்றுக்கணக்கான இந்திய மீன்பிடிப் படகுகளை எமது கடல் எல்லைக்குள் காணக் கூடியதாக இருக்கின்றது.

அவர்கள் வெறுமனே இலங்கைக் கடல் பகுதியில் மீன்களை மட்டும் பிடித்து செல்லவில்லை. அவர்கள் எமது மீனவர்களுக்கு பெரும் பாதிப்புகளை ஏற்படுத்துவதுடன் எமது நாட்டின் கடல் வளங்களையும் அழித்துச் செல்கின்றனர். இலங்கையில் தடை செய்யப்பட்டுள்ள இழுவைப் படகுகள் மற்றும் சிறிய துவாரங்கள் கொண்ட வலைகள் போன்றவற்றையே இந்திய மீனவர்கள் அதிகளவில் பயன்படுத்துகின்றார்கள். இழுவைப் படகுகள் பயன்படுத்தப்படுவதால் எமது கடல் பகுதியில் உள்ள பவளப் பாறைகள் அழிக்கப்பட்டு வருகின்றன. இதனால் மீன்களின் பெருக்கம் பாதிக்கப்படுகின்றது. மீன்களின் பெருக்கத்துக்கு பவளப் பாறைகள் மிகவும் அவசியமாகும்.

அதேநேரம் சிறிய துவாரங்கள் கொண்ட மீன்பிடி வலைகளை இந்திய மீனவர்கள் பயன்படுத்துவதால் சிறிய மீன்குஞ்சுகள் பெருமளவில் அகப்பட்டு இறந்து போகின்றன. இதனால் மீன்குஞ்சுகள் அழிக்கப்பட்டு எமது கடலில் மீன்வளமே குறைவடைந்து கொண்டு செல்கின்றது. இவ்வாறு அவர்கள் எமது கடல் வளத்தையே சூறையாடிச் செல்வது ஒரு புறமிருக்க, இலங்கை மீனவர்களால் நடுக்கடலில் கட்டப்பட்டிருக்கும் வலைகளையும் நாசப்படுத்திச் செல்கின்றனர். பல நூற்றுக்கணக்கான இந்திய மீன்பிடிப் படகுகள் எமது கடல் எல்லைக்குள் பிரவேசித்து பெருமளவு மீன்களைப் பிடித்துச் செல்வதால் இலங்கை மீனவர்களுக்கு போதியளவு மீன்கள் கிடைக்காமல் போகின்றது. எமது மீனவர்கள் வருமானம் இழக்க நேரிடுகின்றது.

இந்திய மீனவர்களின் அத்துமீறிய ஊடுருவல் தொடர்பாக வடபகுதி மீனவர்களால் நீண்ட காலமாக தெரிவிக்கப்பட்டு வரும் முறைப்பாட்டுக்கு இன்னுமே தீர்வு காணப்படவில்லை. இலங்கை_ இந்திய அரசாங்க மட்டத்தில் இது தொடர்பாக பல தடவை பேச்சுகள் நடத்தப்பட்டுள்ளன. எனினும் இந்திய மீனவர்களின் ஊடுருவல் தொடர்ந்து கொண்டே செல்கின்றது. இதற்கான தீர்வு காணப்படாமல் இருப்பதற்கு தமிழ்நாட்டு அரசியல்வாதிகளும் காரணமாவர். தமிழ்நாட்டு மீனவர்கள் இலங்கைக் கடல் எல்லைக்குள் பிரவேசித்து மீன்பிடிப்பதை தமிழக அரசியல்வாதிகளில் பலர் நியாயப் படுத்தவே முற்படுகின்றனர். அவர்கள் இலங்கைக் கடற்படையினர் மீதுதான் குற்றஞ்சாட்டி வருகின்றனர். எனவேதான் இலங்கைக் கடற் பரப்பில் தமிழக மீனவர்களின் அத்துமீறல் முடிவின்றி தொடர்ந்து கொண்டே இருக்கின்றது.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ இந்த விடயம் தொடர்பாக இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியுடன் விரைவில் உரையாட இருக்கின்றார். இரு நாட்டு பிரதமர்களும் இவ்விடயம் தொடர்பாக நேரடியாகத் தொடர்பு கொண்டு கலந்துரையாட இருப்பதால் இந்திய மீனவர்களின் அத்துமீறல்களுக்கு ஓரளவுக்வேனும் தீர்வு கிடைக்கும் என்ற எதிர்பார்ப்பு உள்ளது. ஒரு நாட்டின் மீனவர்கள் மற்றொரு நாட்டின் கடல் எல்லைக்குள் பிரவேசிப்பது என்பது சர்வதேச சட்டங்களை மீறும் செயலாகும். அதனை தமிழக மீனவர்கள் முதலில் புரிந்து கொள்வது அவசியம். நீண்ட காலமாக முடிவின்றித் தொடர்ந்து வருகின்ற இப்பிரச்சினைக்கு தீர்வு காணப்படாது போனால் எமது வடபகுதி மீனவர்கள் தொடர்ந்தும் பாதிக்கப்படவே செய்வர்.

editor.tkn@lakehouse.lk

# உலகில் தமிழர்களுக்கு எங்கு பிரச்சினை ஏற்பட்டாலும் தீர்வு காண பாடுபடுவோம்

## உலகத் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் உறுதிமொழி

உலகத் தமிழ் வம்சாவளி அமைப்பு ஒருங்கிணைப்பில் உலகத் தமிழ் பாராளுமன்றம் உருவாக்கப்பட்டு அதன் முதல் இணையவழி கூட்டம் 'உலக அரசியலில் தமிழர்களின் வளர்ச்சி' என்ற தலைப்பில் கடந்த சனிக்கிழமை மாலை ஆறு மணிக்கு நடைபெற்றது. உலகத் தமிழ் வம்சாவளி அமைப்பின் தலைவர் செல்வகுமார் அனைவரையும் வரவேற்று உரையாற்றினார். ஊடகவியலாளர் ஜோன் தன்ராஜ் இணைப்புரை ஆற்றினார்.

வி.ஐ.டி வேந்தர் டொக்டர் விசுவநாதன் உலக தமிழ் பாராளுமன்றத்தின் இலச்சினையை வெளியிட்டு சிறப்பு பேருரை ஆற்றினார். "நான் 1967 இல் பேறறிஞர் அண்ணாவால் நாடாளுமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டேன், அதேபோல் 1971 இல் கலைஞர் அவர்களால் நாடாளுமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டேன். அப்பொழுது கோலாலம்பூர் உலக தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களை சந்திக்கும் சந்திக்கும் சந்திக்கும் வாய்ப்பு ஏற்பட்டது. அனைத்து நாட்டில் வாழக் கூடிய தமிழர்களை ஒருங்கிணைக்க வேண்டும் என்ற எண்ணமும் ஒருங்கிணைக்க வேண்டும் என்ற எண்ணமும் ஆசை ஏற்பட்டது. இன்றைக்கு உலகம் முழுவதும் 147 தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருக்கிறார்கள். இவர்களெல்லாம் தமிழர்களுடைய நலத்திற்காக ஒன்றிணைய வேண்டும். மூத்த மொழியாக, பழைமை வாய்ந்த மொழியாக, செம்மொழியாக இருப்பது தமிழ்தான். அப்படிப்பட்ட பாரம்பரியம் கொண்ட தமிழர்கள் உலகெங்கும் பரவியிருக்கிர்கள். அவர்களின் நலனுக்காக எந்த நாட்டில் தமிழின மக்களுக்கு ஏதேனும் பிரச்சினை உலகத் தமிழர்கள் ஒன்றாக இணைந்து இணைந்து குரல் கொடுக்க வேண்டும். அதை ஒருங்கிணைக்க வேண்டும்" என்று டொக்டர் விசுவநாதன் கேட்டுக் கொண்டார்.

மலேசியா நாடாளுமன்ற உறுப்பினர் கருப்புசாமி பேசும் போது "சோழன் கடாரம் கொண்டான் ஆட்சி புரிந்த மண்ணிலிருந்து பேசுகிறேன் என்பது பெருமை. மலேசியாவில் தமிழுக்கு எப்பொழுதும் முக்கியத்துவம் தரப்படுகிறது. இன்று மலேசியாவில் 14 தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருக்கிறார்கள். உலக தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இணைந்து ஏதேனும் ஒரு நாட்டில் தமிழர்களுக்கு பிரச்சினை என்றால் ஓங்கி குரல் கொடுக்க வேண்டும்" என்றார்.

இலங்கை நாடா ளுமன்ற உறுப்பினர் இராதாகிருஷ்ணன் பேசும் பொழுது "150 நாடுகளில் தமிழர்கள் வாழ்கிறார்கள். இவற்றுள் இலங்கையிலிருந்து புலம்பெயர்ந்து வாழ்கிற தமிழர்கள்தான் அதிகம். நாங்கள் எல்லாம் வேறு மாவட்டத்தில் பல்வேறு நாடுகளில் வாழ்ந்தாலும் தமிழர்கள் உணர்வோடே வாழ்கிறோம். இலங்கையில் அரசியல் ரீதியாக பிரச்சினை என்றால் இந்தியா_ இலங்கை ஒப்பந்தத்தில் உருவாக்கப்பட்ட 13 ஆவது திருத்தச் சட்டத்தை நீக்க வேண்டும் என இன்றைக்கு உள்ள அதிகாரிகளும் ஆட்சியாளர்களும் விரும்புகிறார்கள். இதை தமிழர்கள் என்ற கருத்தோடு எதிர்க்க வேண்டும், தடுக்க வேண்டும்" என்றார்.

கனடா நாட்டைச் சேர்ந்த ஹரி ஆனந்தசங்கரி பேசும் போது "உலகெங்கும் வாழ்கிற தமிழர்களின் நலனுக்காய் செயல்பட தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒருங்கிணைக்கும் இந்த மாபெரும் முயற்சியை பாராட்டுகிறேன். உலகத் தமிழ் பாராளுமன்றம் உலகத் தமிழர்களின் ஒற்றுமையயை வலுப்படுத்த வேண்டும். பண்டைய தமிழ் மன்னர்கள் சேர, சோழ, பாண்டியர்கள் ஒற்றுமையாக இல்லாத காரணத்தால் நாம் ஆங்காங்கே சிதறிக் கிடக்கிறோம். அவ்வாறு இல்லாமல்

சேர்த்து பயணித்து இருந்தால் ,உலகத்தில் பெரும் பகுதியை ஆட்சி செய்த இனமாக தமிழினம் இருந்திருக்கும்.

எனவே நாம் இனியாவது ஒற்றுமையாக இருப்போம் .தமிழ் மொழி இருந்தால்தான் நாம் தமிழர்களாக இருக்க முடியும்" என்றார்.

என்று பேசினார்.

பப்புவா நியூ கினி நாட்டைச் சார்ந்த சசிதரன் பேசும் போது "உலகிலுள்ள தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒன்றிணைந்து செயல்பட உருவாக்கப்பட்டுள்ள உலக தமிழ் நாடாளுமன்றம் வெற்றி பெற வாழ்த்துக்கள்" என்றார்.

நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன் பேசும் போது "அடுத்த தி.மு.க ஆட்சியில் உலகத் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களை அழைத்து உலகத் தமிழ் மாநாடு சிறப்பாக நடத்துவோம் என உறுதியளிக்கிறேன்" என்று பேசினார்.

விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் தொல் திருமாவளவன் பேசும் பொழுது "உலக தமிழர்களுக்காய் பேசுகிற இந்த வேலையில் இந்தியாவில் தமிழர்கள் ஒற்றுமையாகவும் வலுவாகவும், அரசியல் அதிகாரத்தில் வலுவாகவும் இருந்தால் தான் உலக தமிழர்களை பற்றி நாம் பேசுவது சரியாக இருக்கும். அந்தந்த நாடுகளில் வாழ்கிற தமிழர்கள் ஆட்சி அதிகாரத்தில் பங்கு கொண்டு வாழ்கிற சூழல் ஏற்படும்.

அதற்கு இந்தியாவில் வாழுகின்ற தமிழர்கள் கருத்தியலோடு ஒருங்கிணைந்து செயல்பட வேண்டியது ஒரு வரலாற்றுத் தேவை" என்றார்.

நாடாளுமன்ற உறுப்பினர் ஜோதிமணி பேசுகையில் "உலக மக்கள் தொகையில் தொகையில் பாதிக்கு மேலாக பெண்கள் இருக்கையில் தமிழகத்தில் மட்டுமல்ல இந்தியாவில் 33% இன்றைக்கு கிடைக்காமல் இருப்பது வேதனைக்குரியது" என்றார்.

இலங்கை நாடாளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரன் பேசுகையில் "உலகளாவிய தமிழர்களை இணைக்கும் உலகத் தமிழ் பாராளுமன்றம் உருவாக்கப்பட செய்தியை கேட்டு நான் பெருமகிழ்ச்சி அடைந்தேன். இதை ஒருங்கிணைத்துக் கொண்டு செயற்படும் செல்வக்குமார் உள்ளிட்ட அனைவருக்கும் எனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

உலக நாடுகளில் வாழ்கின்ற தமிழ் மக்கள் சந்திக்கும் பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் வகையில் இந்த உலகத் தமிழ் பாராளுமன்றம் செயல்பட போவதை நினைத்து நான் மகிழ்ச்சி அடைகிறேன்" என்றார்.

உலக தமிழ் வம்சாவளி அமைப்பின் கனடா நாட்டு ஒருங்கிணைப்பாளர் அலன்டின் மணியம் நன்றியுரை கூறினார்.














# யாழ் பல்கலைக்கழக கல்வியியல் துறை தலைவரின் மணிவிழா கொண்டாட்டம்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கல்வியியற்றுறைத் தலைவர் கலாநிதி திருமதி ஜெயலக்சுமி இராசநாயகம் அவர்களின் மணிவிழா கடந்த 27.09.2020 ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு யாழ்ப்பாணம் நீராவியடி இலங்கைவேந்தன் கலைக் கல்லூரி மண்டபத்தில் கொண்டாடப்பட்டது.

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி சு.பரமானந்தம் தலைமையில் நடைபெற்ற இந்த மணிவிழாவின் ஆரம்ப நிகழ்வாக யாழ்நகர் நீராவியடிப் பிள்ளையார் கோயிலில்



இருந்து விழா மண்டபம் வரை ஈழநல்லூர் பி.எஸ். பாலமுருகன் குழுவினரின் மங்கல இசையுடன் வரவேற்பு ஊர்வலம் இடம்பெற்றது. தொடர்ந்து மண்டப நிகழ்வுகள் ஆரம்பமாகின. சமயத் தலைவர்களின் ஆசியுரைகள் இடம்பெற்றதைத் தொடர்ந்து கல்விச் சமூகத்தவரது வாழ்த்துரைகள் இடம்பெற்றன.

விழாநாயகி கலாநிதி ஜெயலக்சுமி இராசநாயகம் எழுதிய 60 கட்டுரைகளின் தொகுப்பு நூலாகிய 'ராஜஜெயம்' மணிவிழா மலராக வெளியீடு செய்யப்பட்டது.

நூலின் வெளியீட்டுரையை கொழும்பு பல்கலைக்கழகக் கல்விப்பீட விரிவுரையாளர் அ.பௌநந்தி ஆற்றினார். யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வாணாள் பேராசிரியர் பொன். பாலசுந்தரம்பிள்ளை நூலை வெளியிட்டு வைத்தார்.

விழாநாயகியின் நூற்றுக்கணக்கான பழைய மாணவர்கள் மற்றும் தற்போது கற்கும் மாணவர்கள் நிகழ்வில் கலந்து கொண்டு விழாநாயகியையும் அவரது துணைவரையும் கௌரவித்தனர்.



யாழ். தேசிய கல்வியியற் கல்லூரி சிரேஷ்ட விரிவுரையாளர் எஸ்.ஆர். சத்தியேந்திரம்பிள்ளை நிகழ்வுகளைத் தொகுத்து வழங்கினார்.

கோப்பாய் ஆசிரிய கலாசாலை ஆசிரிய மாணவர்கள் மற்றும் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் மாணவ ஆசிரியர்கள் பலர் கலந்து நிகழ்வைச் சிறப்பித்தனர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

லலீசன் (பிரதி அதிபர்)

## கொரோனா தாக்கம், காலநிலை மாற்றம்:

# வாழைச்சேனை கடற்றொழிலாளர்களுக்கு நிவாரணம் வழங்குமாறு வேண்டுகோள்

காலநிலை மாற்றம் மற்றும் கொரோனா வைரஸ் தாக்கம் காரணமாக வாழைச்சேனை பிரதேச கடற்றொழிலாளர்கள் முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கான நிவாரண நடவடிக்கைகளை கடற்றொழில் திணைக்கள அதிகாரிகளும் கடற்றொழில் அமைச்சரும் முன்னெடுக்க வேண்டுமென மட்டக்களப்பு மாவட்ட கடற்றொழிலாளர் சம்மேளனத் தலைவரும் பொதுஜன பெரமுன கட்சியின் கல்குடா செயற்பாட்டாளருமான ஏ.சீ.எம்.முனவ்வர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

காலநிலையில் ஏற்பட்டுள்ள மாற்றம் காரணமாக மறுஅறிவித்தல் வரை மீனவர்களை கடலுக்குச் செல்ல வேண்டாமென மட்டக்களப்பு மாவட்ட கடற்றொழில் திணைக்களம் வேண்டுகோள் விடுத்துள்ளது. இதன் காரணமாக மீனுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதுடன், மீன்களின் விலையும் அதிகரித்துள்ளது.

மேற்படி அறிவித்தலை கவனத்திற்கொண்டு முன்னூற்றுக்கும் அதிகமான ஆழ்கடல் மீன்பிடிப் படகுகள் மீன்பிடியில் ஈடுபடவில்லை. இதன் காரணமாக, மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது. கடந்த கொரோனா காலங்களில் மீன்பிடித் தொழில் முற்றாக நிறுத்தப்பட்டு மீனவர்கள் பாதிக்கப்பட்டிருந்த நிலையில், அண்மைக் காலமாகவே தொழிலில் ஈடுபடும் நிலை உருவானது.

இருந்தும், தற்போது காலநிலையில் ஏற்பட்டுள்ள மாற்றம் காரணமாக கடலுக்குச் செல்ல முடியாத நிலை காணப்படுவதுடன், அதன் காரணமாக அவர்களின் வாழ்வாதாரமும் முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளது. கொரோனா காலத்திலும் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு நிவாரண கொடுப்பனவுகள் வழங்கப்படவில்லை.

ஆகவே, பாதிக்கப்பட்டுள்ள மீனவர்களுக்கு நிவாரணக் கொடுப்பனவுகளை வழங்கி அவர்களின் வாழ்வாதாரத்தை முன்னேற்றவும் மீன்பிடித் தொழிலை சீராக முன்னெடுக்கவும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளும் கடற்றொழில் அமைச்சரும் முன்வர வேண்டும் என்று கடற்றொழிலாளர் சம்மேளனத் தலைவர் முனவ்வர் கேட்டுக் கொண்டுள்ளார்.



அத்துடன், இப்பிரதேசத்தில் பாதிக்கப்பட்டுள்ள மீனவர்களின் பிரச்சினைகள் மற்றும் மட்டக்களப்பு மாவட்டத்தில் குறிப்பாக வாழைச்சேனையில் கடற்றொழில் துறை எதிர்நோக்கியுள்ள பின்னடைவு தொடர்பில் நேரடியாகக் கண்டறியும் பொருட்டு நேரடி விஜயமொன்றை மேற்கொள்ளுமாறு கடற்றொழில்அமைச்சர்டக்ளஸ்தேவானந்தாவுக்கு அழைப்பு விடுத்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

யு.எல்.எம்.ஹரீஸ்...
(வாழைச்சேனை விசேட நிருபர்)

# போதைப் பொருள் கடத்தலை முறியடிக்க விமானப் படையினர் தீவிர நடவடிக்கை

பரந்த அளவில் இதுவரை தெரிந்திராத இலங்கை விமானப் படையின் செயற்பாடுகள் பற்றி விமானப் படை தளபதி எயார் மார்ஷல் சுமங்கள டயஸ் எமக்கு அண்மையில் வழங்கிய பேட்டியின் போது கூறியிருந்தார்.

**கேள்வி: விமானப் படையில் சேர வேண்டுமென்று எப்போது தீர்மானித்தீர்கள்?**

**பதில்:** நான் லலித் அத்துலத் முதலி கல்லூரியில் படித்தேன். அங்கு 5 ஆம் வகுப்பு புலமைப் பரீட்சையில் சித்தியடைந்த பின்னர், கொழும்பு நாலந்தா கல்லூரியில் சேர்ந்தேன். விளையாட்டு, கல்வி என்ற இரண்டிலும் அக்கறை செலுத்தினேன். எனது பெற்றோரின் வழிகாட்டலில் நான் மாணவ கடெட் அணியில் 1977 இல் சேர்ந்தேன். அங்குதான் நான் படையினரைப் பற்றி ஓரளவு தெரிந்து கொண்டேன். 1982 இல் நான் பாடசாலையை விட்டு விலகிய போது கனிஷ்ட மற்றும் சிரேஷ்ட கெடெட் அணியில் பிரதிநிதித்துவம் வகித்திருந்தேன். இராணுவம், கடற்படை மற்றும் விமானப்படை ஆகிய மூன்று படைகளுக்கும் நான் விண்ணப்பம் அனுப்பியிருந்தேன். இறுதியில் விமானப் படையில் இருந்து எனக்கு அழைப்பு வந்தது. நான் விமானப் படையில் சேர்ந்தேன்.

**கேள்வி: விமானப் படையில் சேர்ந்த பின்னர் ஆரம்பம் முதல் உச்சம் வரையிலான பயணம் எப்படியிருந்தது?**

**பதில்:** எந்தவொரு படையிலும் செய்யும் பயணம் இலகுவானதாக இருக்காது. அதில் பல ஏற்றத் தாழ்வுகள் இருக்கும். ஆனால் எனது பயணம் ஓரளவு இலகுவானதாகவே இருந்தது என்றுதான் சொல்ல வேண்டும். ஹெலிகொப்டர் மற்றும் நிலையான இறக்கை கொண்ட போக்குவரத்து விமானி என்ற வகையில் நான் பல சவால்களுக்கு முகம் கொடுத்துள்ளேன். ஆனால் எனது பயணம் சௌகரியமாகவே அமைந்தது. ஆனால் எனது மகன் பிறந்த போது இரண்டு நாட்களுக்குப் பின்னரே அவனை என்னால் பார்க்க முடிந்தது. ஆனால் படையில் இருப்பவருக்கு இது ஒன்றும் புதிய விடயமல்ல.

**கேள்வி: யுத்த காலத்தில் இடம் பெற்ற மறக்க முடியாத சம்பவம் எதுவும் உள்ளதா?**

**பதில்:** ஆம் ஒருசில சம்பவங்கள் உள்ளன. அவற்றில் ஒன்றைச் சொல்கிறேன். 1992 இல் முகாம் ஒன்றில் யுத்தம் இடம்பெற்றுக் கொண்டிருந்த போது அங்கு மீள்விநியோகப் பொருட்ளை நான் கொண்டு செல்ல வேண்டியிருந்தது. அடிப்படை விநியோகப் பொருட்களையும் மருந்து வகைகளையும் கொண்டு செல்ல இரண்டு ஹெலிகொப்டர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டன. அச்சமயம் முகாம் முற்றுகையிடப் பட்டது. இரண்டு ஹெலிகொப்டர்களில் ஒன்று அநுராதபுரத்திலும் மற்றையது கட்டுநாயக்காவில் இருந்தும் செல்லவிருந்தன. கட்டுநாயக்கவில் இருந்து சென்ற ஹெலிகொப்டருக்கு நான் பொறுப்பாக இருந்தேன். திட்டப்படி நாம் கொழும்பு சென்று விநியோகப் பொருட்களை இறக்கி விட்டு காயமுற்றவர்களை ஏற்றி வர வேண்டியிருந்தது. அநுராதபுரத்தில் இருந்து ஹெலிகொப்டரை ஓட்டி வந்தவருக்கு அந்நிலப் பகுதி பரிச்சயமாக இருந்ததால் அவரை முதலில் தரையிறங்குமாறு கூறப்பட்டது. அவர் அங்கு சென்று திரும்பும் போது வானில் அவருடன் தொடர்பு கொள்ள முடிந்தது. முகாமின் நிலை பற்றி அவரிடம் கேட்ட போது தீவரவாதிகள் துப்பாக்கிகளுடன் அங்கு சுற்றிக் கொண்டிருப்பதாக அவர் கூறினார். ஆனால் அவரது ஹெலிகொப்டர் மீது தாக்குதல் நடத்தப்பட்ட போதும் அவர் தெய்வாதீனமாக தப்பி விட்டதாக கூறினார். ஆகவே நான் தொடர்ந்து பயணித்தேன். ஆனால் இறக்கவிருந்த போது எனது ஹெலிகொப்டர் மீதும் தாக்குதல் நடந்தது. இருந்தும் என்னால் பாதுகாப்பாக அநுராதபுரத்துக்கு திரும்ப முடிந்தது. இந்தச் சம்பவத்தை என்னால் மறக்க முடியாது.

**கேள்வி: நாட்டில் மாபெரும் போதைவஸ்து ஒழிப்பு செயற்பாட்டை அரசாங்கம் முன்னெடுத்து வருகிறது. இந்த செயற்பாட்டில் விமானப் படை எவ்வாறு பங்குபற்றும் என்பதை விளக்க முடியுமா?**

**பதில்:** போதைவஸ்து ஒழிப்புக்கு பல வழிமுறைகள் உள்ளன. போதைவஸ்து பாவனையாளர்கள் ஊடாக போதைவஸ்து கடத்தல்காரர்களை கண்டுபிடிப்பது நாம் பின்பற்றும் ஒருமுறையாகும். அத்துடன் காட்டுப் பகுதிகளில் சந்தேகத்துக்குரிய இடங்கள் தெளிவாகத் தெரியும். அந்த இடங்களை எளிதில் கண்டுபிடிக்க முடியும். ஆனால் கீழே தரையில் இருந்து பார்த்தால் அந்த இடங்களை ஒருபோதும் கண்டுபிடிக்க முடியாது.



**கேள்வி: நாட்டில் நடைமுறைப்படுத்தப்படும் போதை ஒழிப்பு செயற்பாடுகளுக்கு புறம்பாக, தளபதி என்ற ரீதியில் விமானப்படையினரிடையே போதைப்பழக்கத்துக்கு எந்த இடமும் அளிக்கப் போவதில்லை என்று கூறியிருக்கிறீர்களே?**

**பதில்:** ஆம், விமானப் படையினரிடையே எந்த வகையிலும் போதைப் பாவனை இடம்பெறக் கூடாது என்பது தொடர்பாக அனைத்து விமானப் படையினரையும் ஒன்று திரட்டி மூன்று நாள் சந்திப்பு ஒன்றை நாம் அண்மையில் நடத்தினோம். அத்துடன் எந்த வகையிலும் சட்டவிரோத போதைவஸ்து பாவனையில் ஈடுபடப் போவதில்லையென்று அவர்களிடம் எழுத்துமூல உத்தரவாதத்தையும் பெற்றுக் கொண்டோம். எனவே இதுபற்றி தனக்கு எதுவும் தெரியாது என்று விமானப் படையில் உள்ள எவரும் கூற முடியாது.

**கேள்வி: யுத்த காலத்தில் வெடி பொருட்களைக் கண்டுபிடிப்பதில் விமானப்படையின் நாய்கள் பிரிவு பெரும் பங்களிப்பை வழங்கியது. அதேபோன்று விமான நிலையம் மற்றும் துறைமுகங்களில் போதை வஸ்துக்களை கண்டுபிடிக்க விமானப்படையின் நாய்கள் பிரிவை பயன்படுத்துவீர்களா?**

**பதில்:** முக்கியமான பெரும் புள்ளிகள் பங்குபற்றும் நிகழ்ச்சிகளில் காவல் கடமைகளில் ஈடுபட நாம் மோப்ப நாய்களை பயன்படுத்தியுள்ளோம். புதிதாக நாம் இறக்குமதி செய்துள்ள நாய்கள் தற்போது பொலிஸ் பிரிவினரால் பயிற்றுவிக்கப்பட்டு வருகின்றன. இவை போதைவஸ்துகளை கண்டுபிடிப்பதற்கு பழக்கப்படுகின்றன. அவை விமான நிலையங்களில் போதைவஸ்துகளை கண்டுபிடிப்பதற்கு பயன்படுத்தப்படும். அவ்வாறான எட்டு முதல் 10 மோப்ப நாய்கள் இப்போது எம்மிடம் உள்ளன. விமான நிலையங்களின் பாதுகாப்புக்கு இப்போது விமானப்படையினரே பொறுப்பாக உள்ளனர். எனவே இந்த மோப்ப நாய்ப் பிரிவு சட்டவிரோத போதைவஸ்து கடத்தலை கண்டுபிடிப்பதில் முக்கிய பங்கு வகிக்கும்.

**கேள்வி: யுத்த காலத்தில் வான்வெளி பாதுகாப்பு வழங்கிய விமானப் படை தற்போது எந்த வகையில் பங்களிப்பு செய்கிறது?**

**பதில்:** யுத்தம் முடிவடைந்ததையடுத்து விமானப்படை தற்போது கண்காணிப்பு மற்றும் இடர்காலத்தில் உதவிகள் போன்ற பணிகளில் ஈடுபட்டு வருகிறது. எனவே நாம் இப்போது நாட்டை சுற்றியுள்ள கடற்பரப்பை கடற்படையுடன் சேர்ந்து கண்காணித்து வருகிறோம். கடல் வழியே சட்டவிரோதமாக போதைவஸ்து மற்றும் பொருட்களை கடத்தும் மீன்பிடி வள்ளங்களை கண்டுபிடித்தலில் நாம் ஈடுபட்டுள்ளோம். அத்துடன் கடல் வழியே நாட்டுக்குள் நுழைய முயலும். குறிப்பாக இந்தியாவில் இருந்து வரும் நபர்களை கண்டுபிடிக்கும் நடவடிக்கைகளிலும் விமானப்படை ஈடுபட்டுள்ளது. இந்த கண்காணிப்பு நடவடிக்கைகள் நாளாந்தம் இடம்பெறுகின்றன.

**கேள்வி: கொவிட் 19 நோய்த் தொற்றுக்கு எதிரான நடவடிக்கையில் விமானப் படையினர் குறிப்பிடத்தக்க பங்களிப்பினை வழங்கியுள்ளனர். அதுபற்றி விளக்கிக்கூற முடியுமா?**

**பதில்:** கட்டுநாயக்க விமான நிலையத்தின் ஊடாக நாட்டுக்குள் நுழைபவர்களை ஆய்வு செய்வதில் விமானப்படையினரே முன்னணியில் உள்ளனர். அவர்களை சோதனை செய்வதற்கான அனைத்து உபகரணங்களும் எம்மிடம் உள்ளன. சீனாவில் இருந்து முதல் தொகுதி மாணவர்கள் இலங்கை வந்த போது அவர்களை விமான நிலையத்தில் பரிசோதனை செய்து தனிமைப்படுத்தல் வரை கொண்டு சென்றது விமானப் படையினரே, இந்த திட்டத்தை நாம் வெற்றிகரமாக செயற்படுத்தினோம். அதன் பின் சுமார் 28 ஆயிரம் பேர் நாட்டுக்குள் வந்துள்ளனர். அவர்களை நாம் வழிகாட்டி, பேச்சு நடத்தி கிருமிநாசினி தெளித்து தனிமைப்படுத்த உதவியுள்ளோம். இந்த அனைத்துக்கும் தேவையான உபகரணங்கள் எமக்கு உரிய நேரத்தில் கிடைத்திருந்ததால் நமக்கு எந்தப் பிரச்சினையும் எழவில்லை.

**கேள்வி: காடுகளை மீளவளர்த்தல் மற்றும் சூழல் பாதுகாப்பு முயற்சிகளில் விமானப்படை தீவிரமாக ஈடுபட்டுள்ளது. இந்த முயற்சிகள் பற்றி கூற முடியுமா?**

**பதில்:** ஆம். இது எனக்கு மிகவும் பிடித்தமான விடயம். குப்பைகளை மீள்சுழற்சி செய்வதில் விமானப் படையினர் ஈடுபட்டுள்ளனர் என்பது நிறையப் பேருக்கு தெரியாது. ஆனால் அதனை நாம் செய்து வருகிறோம். அதே நேரம் காடுகளில் உள்ள வெற்றிடங்களை இனங்கண்டு, மழைக் காலங்களில் அந்த இடங்களில் விதை குண்டுகளை பயன்படுத்தி காடு வளர்ப்புக்கு உதவுகிறோம். விதைகளை களிமண்ணில் குழைத்து அந்த வெற்றிடங்களில் வீசினால் அவை அந்த இடங்களில் முளைக்கும். இந்த செயற்பாடு 50 முதல் 60 சதவீதம் வெற்றியளித்துள்ளதாக எமக்கு கிடைக்கும் தகவல்கள் கூறுகின்றன.



**கேள்வி: நியு டயமன்ட் கப்பலில் ஏற்பட்ட தீயை அணைப்பதில் உங்கள் பங்களிப்பு எவ்வாறு அமைந்தது?**

**பதில்:** விமானப் படையினர் நியு டயமன்ட் கப்பலின் தீயை அனைத்து 176 செயற்பாடுகளில் ஈடுபட்டனர். 4 லடசத்து 40 ஆயிரம் தண்ணீர் வாளிகளை நியு டயமன்ட் எண்ணெய்க் கப்பலின் மீது வீசியுள்ளனர்.

அத்துடன் பல கண்காணிப்பு செயற்பாடுகளிலும் ஈடுபட்டனர். அத்துடன் தீயின் மீது இரசாயன மூடைகளையம் வீசியுள்ளனர். இதனால் பெரும் சூழல் பேரழிவு ஏற்படுவதை தவிர்க்க முடிந்துள்ளது.

**கேள்வி: தற்போது உயர்ந்த கட்டடங்கள் பெருமளவில் கட்டப்பட்டு வருகின்றன. இந்த உயர்ந்த கட்டடங்களில் தீப்பிடித்தால் அதனை அணைக்கும் செயற்பாடுகளில் விமானப் படை தயாராக உள்ளதா?**

**பதில்:** இது ஒரு விசேட செயற்பாடாகும். இதனை எதிர்கொள்ள நாம் தயாராகவே உள்ளோம். எனினும் இதுபற்றி நாம் மேலும் தெரிந்து கொள்ள வேண்டும். அபிவிருத்தியடைந்த நாடுகளில் இந்த தொழில்நுட்பம் உள்ளது அதனைப் பெறுவதற்கு நாம் முயற்சித்து வருகிறோம். ஆனால் மிகுந்த செலவுள்ள விடயமாகும்.

**கேள்வி: ஒழுங்கை விதிகளை நடைமுறைப்படுத்த விமானப் படையினர் பொலிஸாருடன் இணைந்து செயற்படுகின்றனரா?**

**பதில்:** ஆம். போக்குவரத்து செயற்பாடுகளை நாம் டிரோன் மூலம் படம் பிடித்து பொலிஸார் கேட்கும் போது அவர்களுக்கு கொடுத்துதவுகிறோம். இதற்கென ஆளற்ற விமானங்கள் பயன்படுத்தப்படுகின்றன. தற்போதைய ஜனாதிபதி பாதுகாப்பு செயலாளராக இருந்த போது இந்த திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இதற்காக மேலும் டிரோன்களை கொள்வனவு செய்ய உத்தேசித்துள்ளோம்.

## பொலிசாருடனும், கடற்படையினருடனும் இணைந்து செயற்படுகிறோம் – விமானப் படை தளபதி பேட்டி

கமெலியா நெத்தனியல்...
தமிழில்: என். ராமலிங்கம்

# சுனாமியில் ஐந்து வயதில் காணாமல் போன குழந்தை

சுனாமியில் பாதிக்கப்பட்டு அன்றைய தினம் ஐந்து வயதில் காணாமல் போன அக்ரம் ரிஸ்கான் எனும் இளைஞர் 21 வயது நிரம்பிய நிலையில் மாளிகைக் காட்டில் வசிக்கும் அபுசாலி சித்தி கமாலியா எனும் தனது தாயைத் தேடி வந்து சேர்ந்துள்ளார். இச்சம்பவம் இப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

காரைதீவு பிரதேச செயலக நிர்வாகத்தின் கீழுள்ள மாளிகைக்காடு கிழக்கில் வசிக்கும் அபுசாலி சித்தி கமாலியா எனும் தாய் தன்னுடைய ஒரே மகனான அக்ரம் ரிஸ்கானை சுனாமி அலையில் தொலைத்து விட்டு நெடுநாளாக செய்வதறியாது துயரத்தில் வாழ்ந்தார். தன்னுடைய சக்திக்கும் அப்பாற்பட்ட பல முயற்சிகளை செய்து மகனை கண்டுபிடித்த மகிழ்வு மேலோங்க இவ்வாறு கூறுகிறார் அவர்.

"அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலை ஊழியரான நான் சுனாமியன்று வைத்தியசாலைக்கு கடமைக்கு சென்றிருந்தேன். அன்றைய தினம் சுனாமியினால் ஐந்து வயதில் காணாமல் போன என்னுடைய மகன் இன்று என்னிடம் வந்தடைந்திருப்பது உச்சகட்ட மகிழ்ச்சியை தருகிறது. என்னுடைய மகன் உயிருடன் இருக்கிறார் என்று சிலரும், மரணித்து விட்டார் என்று பலரும் என்னிடம் நேரடியாகவே கூறியிருந்த போதிலும் நான் என்னுடைய முயற்சியை தளரவிடாமல் 16 வருடங்களாக ஏக்கத்துடன் போராடினேன். இன்று என்னுடைய போராட்டம் வெற்றியடைந்துள்ளது.

சுனாமி தாக்கி மூன்று நாட்களின் பின்னர் என்னுடைய சகோதரியின் கணவரான ஓய்வு பெற்ற பிரதேச செயலாளரிடம் ஒருவர் வந்து எனது மகன் வைத்தியசாலையில் இருப்பதாகக் கூறினார். நாங்கள் அங்கு சென்று பார்த்தபோது என்னுடைய மகனை அங்கிருந்து யாரோ அழைத்துச் சென்றுள்ளார்கள் என்பதை அறிந்தோம். அது எங்களுக்கு பெரிய ஏமாற்றமாக இருந்தது. நான் யாரை சந்தித்தாலும் என்னுடைய மகனின் புகைப்படத்தை காட்டி விளக்கம் சொல்வேன். எங்கு என்னுடைய மகன் இருக்கிறான் என்று கேள்விப்பட்டாலும் அங்கு சென்று தேடுவதை பழக்கமாக கொண்டிருந்தேன்.

என்னுடைய போராட்டத்தில் என்னுடைய உறவுகள் பலரும் பலவகையான உதவிகளையும் செய்தார்கள்.

## 16 வருடங்களில் 21 வயது இளைஞனாக தாயை தேடி வந்து அளித்த இன்ப அதிர்ச்சி

ஆனால் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கல்முனை காரியாலயம் எனக்கு எவ்விதமான உதவிகளையும் செய்யவில்லை. பொலிஸாரும் கூட என்னை கடும் தொனியில் மிரட்டினார்கள். உயர் பொலிஸ் அதிகாரி ஒருவர் என்னை கடுமையாக மிரட்டி சிறையில் அடைக்கப் போவதாக எச்சரித்த அந்த நாள் இப்போதும் எனக்கு நன்றாக நினைவிருக்கிறது. அவருக்கு என்னுடைய ஏக்கங்களை வார்த்தைகளில் சொல்லி விட்டு வந்தேன். கொழுப்பில் உள்ள மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைமையகத்தில் முறையிட்டேன். அதுவும் கைகூடவில்லை. வசந்தம் தொலைக்காட்சி முதல் நிறைய ஊடகங்களில் இது பற்றி பேசியுள்ளேன்.



கடந்த 2016 ஆம் ஆண்டு என்னுடைய மகன் ஒரு சிங்களப் பாடசாலையில் கல்வி கற்பதாக என்னுடைய சிங்கள நண்பி ஒருவர் எனக்கு தெரியப்படுத்தினார். அவரின் உதவியுடன் அந்த பாடசாலைக்குச் சென்று என்னுடைய மகனை காண பல வகையான முயற்சிகளை செய்தேன். அந்த பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் அவரை எனக்கு காட்ட மறுத்து இன்று பாடசாலைக்கு வரவில்லை என்று மறுத்து விட்டார்கள்.

பல நாட்களாக சிங்களப் பெண்மணி போல ஆடையுடுத்து என்னுடைய வேலைகளையும் விட்டுவிட்டு ஏக்கத்துடன் அந்த வீதிகளில் மகனை காண அலைந்து திரிந்தேன்.

விற்பனை பிரதிநிதி போல, தொழில் வழங்குனர் போல, பிச்சைக்காரி போல பல வேஷங்கள் போட்டு அலைந்திருக்கிறேன். எனக்கு நம்பிக்கை இருந்தது என்னுடைய மகன் என்னிடம் வந்து சேரும் நாள் வரும் என்று. பல கஷ்டங்களையும் அவமானங்களையும் இதற்காக நான் சந்தித்துள்ளேன். என்னுடைய கணவர் என்னுடன் இல்லை, அவர் வேறு திருமணம் செய்து கொண்டு சென்று விட்டார். அதனால் தனியாகவே என்னுடைய தேடும் படலம் தொடர்ந்தது.

அன்று அரசியல்வாதிகள் முதல் ஜனாதிபதி வரை என்னுடைய பிரச்சினைகளை தெரியப்படுத்தினேன். பயன் இல்லை. நிறுவனம் ஒன்றின் மூலம் மகனின் இருப்பிடத்தை அறிந்து கொண்ட நான் அங்கு வேறு ஒருவர் போல சென்று என்னுடைய மகனை சந்தித்தேன். அவருடன் தொழில்வழங்குவர் போல பேசி மகனின் தகவல்களை பெற்றுக் கொண்டேன். மகனும் என்னை அடையாளம் கண்டு கொண்டார்.

## மாளிகைக்காடு தாயார் சித்தி கமாலியா தனது கடந்த கால வேதனைகளையும், இன்று கிடைத்துள்ள மகிழ்வையும் தினகரனுடன் பகிர்ந்து கொள்கின்றார்

பின்னர் தொலைபேசியில் நாங்கள் பேசிக் கொண்டோம். எனக்குத் தெரிந்த அவருடைய அங்க அடையாளங்களை பற்றி விரிவாக பேசி என்னுடைய மகன்தான் என்பதை உறுதிப்படுத்தி கொண்டேன். பின்னர் அவரை வளர்த்த அந்த சிங்கள சகோதரியிடம் கொழும்புக்கு வேலைக்கு போகப் போவதாக கூறி விட்டு அவர் என்னை தேடி வந்துள்ளார். அழகான என்னுடைய மகன் எனக்கு திருப்பி கிடைத்துள்ளான்.

மக்காவுக்கு சென்று பிராத்தித்த என்னுடைய பிரார்த்தனை வீண் போகவில்லை. விரைவில் நான் அவரை இஸ்லாமிய சடங்குகள் செய்து மக்காவுக்கு அழைத்துச் செல்ல தயாராக உள்ளேன். எனது மகனை வளர்த்த அந்த தாய்க்கு எதிர்காலத்தில் என்னால் முடியுமான உதவிகளை செய்யத் தயாராக உள்ளேன்."

இவ்வாறு அந்த தாயார் தெரிவித்தார்.

மகனிடம் பேச எத்தனித்த போது அவர் மிகப்பெரும் சங்கடத்தில் உள்ளதாலும் தமிழை பேச முடியாமல் திணறுவதாலும் ஒழுங்காக பேச முடியாமல் தவித்தார். இருந்தாலும் சிங்கள மொழியில் என்னால் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு பதிலளித்தார். தனது தாயை வந்தடைந்தது சந்தோசமாளிப்பதாக கூறினார். அவர் அழும் நிலையில் இருப்பதால் அவரிடம் தொடந்து எதுவும் கேட்க முடியவில்லை.

எம்.எம்.ஜெஸ்மின்...

# ஜனாதிபதியின் 'சௌபாக்கிய தெக்ம' சுற்றுலாத்துறையில் ஏழு மில்லியன் பேரை உள்ளீர்க்கத் திட்டம்

(எம்.ஏ.அமீனுல்லா)



ஜனாதிபதியின் 'சௌபாக்கிய தெக்ம' (செழிப்பின் பார்வை) செயற்திட்டத்தின் கீழ், அடுத்த இரண்டு வருடங்களில் சுற்றுலாத் துறையில் 7 மில்லியன் பயணிகளை உள்வாங்க திட்டமிடப்பட்டுள்ளதாக,சுற்றுலா அபிவிருத்தி அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார். உலக சுற்றுலாதினத்தின் தேசிய வைபவம் சுற்றுலா அபிவிருத்தி அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தலைமையில் நேற்று முன்தினம் (27) காலை கண்டி சிட்டி சென்றர் பல்கூட்டு வர்த்தக தொகுதியில் மிக விமர்சையாக நடைபெற்றது .இதில் உரையாற்றிய அமைச்சர் மேலும் தெரிவித்ததாவது:ஜனாதிபதியின் "சௌபாக்ய தெக்ம" திட்டத்தில், சுற்றலா வளர்ச்சி பற்றி முக்கியமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

சுறற்றுலாத் துறையைக் கவர்வதனூடாக பத்து பில்லியன் யூ.எஸ் டொலரை வருமானமாகப் பெறவும் அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

அடுத்தடுத்து ஏற்பட்ட இரண்டு நிகழ்வுகளால் இலங்கையின் சுற்றுலாத்துறை பாரிய வீழ்ச்சியை சந்தித்தது. இதன் காரணமாக சுற்றுலாவுடன் இணைந்துள்ள சகல துறைகளும் பாதிக்கப்பட்டன. எனவே அவ்வாறான பாதிப்பில் இருந்து மீட்சி பெற எம்மால் இயன்ற அனைத்து சலுகைகளையும் சுற்றுலாத்துறையுடன் தொடர்புடையவர்களுக்கு வழங்க நடவடிக்கை எடுத்துள்ளோம்.

சுற்றுலாத் துறை என்றதும் ஹோட்டல் துறையும், சுற்றலாத் தளங்களும் மட்டும்தான் எனச் சிலர் தப்புக்கணக்கு போட்டுள்ளனர். நடை பாதையில் செவ்விளனி (தெம்பிலி) விற்பவன் முதல் ஐந்து நட்சத்திர ஹோட்டல் உரிமையாளர் அடங்கலாக முச்சக்கர வண்டிச் சாரதி சுற்றுலா வழிகாட்டி, சாதாரண மீன் முட்டை வியபாரி வரை சகலரும் சுற்றுலாத் துறைக்குப் பங்களிக்கின்றனர்.

இவர்கள் அனைவரும் தங்களது உற்பத்தியை அல்லது சேவையை சுற்றலாப் பயணிகளுக்கே வழங்குகின்றனர். இத்துறை பாதிக்கப்படும் போது இவர்களும் பாதிக்கப்படுகின்றனர்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலால் முதலில் எமது சுற்றுலா பாதிப்படைந்தது. அதிலிருந்து மீட்சி பெற்று தலை தூக்க முற்படும் போது கொவிட் 19 பிரச்சினை உருவானது. இன்று எம்மில் பலருக்கு கொவிட் பிரச்சினை மறந்து விட்டது. ஆனால் சர்வதேச நாடுகளில் அது மேலும் கடுமையாகிச் செல்கிறது. குறிப்பாக எமது அயல் நாடான இந்தியாவில் இது, பாரிய சவாலை ஏற்படுத்தியுள்ளது.

ஆனால் இலங்கையில் நிலைமை சாதாகமாகி வருவதால் சர்வதேச நாடுகள் மற்றும் சுற்றலா பயணிகளின் கவனம் இலங்கை மீதே திரும்பியுள்ளது.

விமான நிலையங்களைத் திறந்தால், எமது சுற்றுலாத் துறையும் வளர்ச்சியடையும். ஆனால் கொவிட் 19 கட்டுப்படுத்தப்பட்டு சுகாதார துறை அதனை அனுமதித்த பிறகே விமான நிலையம் திறக்கப்படும். அதன் பின் எமது இலக்கை அடைவோம். சுற்றுலா துறை பாதிப்பால் பொருளாதார பாதிப்பை சந்தித்த அனைத்து தரப்பிற்கும் சலுகைகள் கிடைக்கும் என்றார்.

இவ்வைபவத்தில். அமைச்சர்களான பிரசன்ன ரணதுங்க, திலும் அமுனுகம, ஆளுநர்களான லலித் யூ கமகே, டிகிரி கொப்பேக்கடுவை பாராளுமன்ற உறுப்பினர்கள், வெளிநாட்டு அதிகாரிகள் என்பன பலர் கலந்து கொண்டனர்.

சுற்றுலா அமைச்சின் வழிகாட்டலின் கீழ், இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை, மத்திய மாகாண சபையின் வர்த்தக மற்றும் சுற்றுலா திணைக்களம் ஆகியன இணைந்து, மூன்று நாள் விசேட நிகழ்வாக இதை ஏற்பாடு செய்திருந்தன.

இரத்தினபுரி மாவட்டத்தில்:

## இலவச மரக்கன்றுகள் விநியோகம்

(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)

எம்பிலிப்பிட்டிய துங்கம கிராம சேவகர் பிரிவின் வை.எஸ். எஸ் கிராமத்தின் விவசாயிகளுக்கு இலவசமாக மரக்கன்றுகள் விநியோகிக்கப்பட்டன.இவ்வேலைத் திட்டம்

நேற்று முன்தினம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

ஏற்றுமதி விவசாய அபிவிருத்தி அமைச்சர் ஜானக வக் கும்புர நிகழ்வில் கலந்து கொண்டு விவசாயிகளுக்கு மரக்கன்றுகளை வழங்கினார்.விவசாயிகளுக்கு இலவசமாக மரக்கன்றுகளை வ ழங்கும் திட்டத்துக்கிணங்க ஏற்கனவே இரத்தினபுரி மாவட்டத்தின் பிரதேச செயலக கிராம சேவகர் மட்டத்தில் இது வரை ஒரு இலட்சத்து 35 ஆயிரம் கருவா மரக்கன்றுகள் விவசாயிகளுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளன.

இதே போன்று விவசாயிகளுக்கு அவசியமான அனைத்து மரக்கன்றுகளும் இலவசமாக கட்டம் கட்டமாக நியோகிக்கப்படுமென நிகழ்வில் கலந்து கொண்ட அமைச்சர் தெரிவித்தார்.



உலகச் சுற்றுலா தினத்தை முன்னிட்டு நுவரெலியா பிரதான தபாலகத்திற்கு அருகில் விஷேட நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டன. நுவரெலியா சுற்றுலா துறை சங்கத்தினர் இதனை நேற்று (28) ஏற்பாடு செய்திருந்தனர். இந்நிகழ்வில் நுவரெலியா மாநகர முதல்வர் சந்தணலால் கருணாரத்ன, நுவரெலியா பிரதேச சபை தலைவர் வேலு யோகராஜா, உப தலைவர் சரத் குமார, நுவரெலியா மாநகர சபை உறுப்பினர் அஜித் குமார, உட்பட பலரும் கலந்து கொண்டனர்.அங்கு இடம்பெற்ற நிகழ்வுகளை படங்களில் காணலாம்.

(நுவரெலியா தினகரன் நிருபர்)

# குளவி கொட்டி ஏழு தொழிலாளர்கள் சிகிச்சை

குமஸ்கெலியா தினகரன் விஷேட நிருபர்



நல்லதண்ணி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட லக்ஷபான தோட்டத்தில் ஏழு தொழிலாளிகள் குளவி கொட்டுக்கு இலக்காகினர். உடனடியாக மஸ்கெலியா மாவட்ட வைத்தியசாலையில் இவர்கள் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர்.

ஏனையோர் வெளி நோயாளர் பிரிவில் சிகிச்சை பெற்று சென்றமை குறிப்பிடத்தக்கது.

இது பற்றி தோட்ட தொழிலாளர் தெரிவித்ததாவது. எமக்கு பல இன்னல்களுக்கு மத்தியில் தொழிலுக்கு செல்ல வேண்டி உள்ளது.அதிலும் இவ்வாறான குளவி கொட்டுக்கு இலக்காகியே, நாம் எமது வாழ்க்கையை நடாத்தி வருகின்றோம். இவ்வாறு குளவி கொட்டியதில் பலர் மரணித்தும் உள்ளனர்.இப்பிரச்சினைக்கு உடன் தீர்வு காண வேண்டுமென்றும் அவர்கள் குறிப்பிட்டனர்.

# பஸ்ஸிலிருந்து விழுந்து பெண் மரணம்

( பலாங்கொடை தினகரன் நிருபர்)

பஸ்ஸிலிருந்து இறங்குவதற்கு முயற்சித்த பெண்ணொருவர்,அதிலிருந்து விழுந்து படுகாயங்களுக்கு உள்ளாகி மரணமடைந்தார்.

பலாங்கொடை கல்தொட்ட பாதையில் முதலாம் கட்டை பிரதேசத்தில் இச்சம்பவம் இடம் பெற்றது.விபத்துக்குள்ளான இப் பெண்,பலாங்கொடை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்தபோதும் சிகிச்சைப் பலனின்றி உயிரிழந்தார்.

பலாங்கொடை வெலிகேபொல பகுதியில் வசிக்கும் 40 வயதுடைய திருமணமான பெண்ணே இவ்வாறு மரணமடைந்தார். இவர் கடந்த (24) இலுக்கும்புர பிரதேசத்திலிருந்து பலாங்கொடை நகர்வரை பயணிக்கும் இலங்கை போக்குவரத்து பஸ் வண்டியில் பயணித்துள்ளார்.

இப் பெண்மணியின் தலைப்பகுதியில் அதிக அளவு காயம் ஏற்பட்டு பலாங்கொடை ஆதார வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டார். சிகிச்சை பெற்று வந்த நிலையில் மூன்று தினங்களின் பின்னர் இந்த பெண்மணி மரணமடைந்துள்ளார். பஸ் சாரதியை பலாங்கொடை பொலீஸார் கைது செய்துள்ளனர். மரண விசாரணை கடந்த 27 ஆம் திகதி பலாங்கொடை ஆதார வைத்தியசாலையில் இடம்பெற்றது.இது தொடர்பான விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# நூல் நிலையத்திற்கு புத்தகங்கள் கையளிப்பு

களுத்துறை சுழற்சி நிருபர்



"டார்டன்பீல்ட்" தோட்ட ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்தின் கணபதி அறநெறிப் பாடசாலை நிர்வாகத்தின் கீழ் நிர்மாணிக்கப்படவுள்ள புதிய நூல் நிலையத்திற்கு அகலவத்தை பிரதேச செயலாளர் 50,000 ரூபா பெறுமதியான நூல்களை கையளித்தார். கணபதி அறநெறிப் பாடசாலை பொறுப்பாளர் சதாசிவம் உதய சாந்தனிடம் அகலவத்தை பிரதேச செயலாளர் நிரஞ்சலா உலுகல்ல மேற்படி நூல்களை நேற்றுமுன்தினம் (27) கையளித்தார். இதனடிப்படையில் அகலவத்தை கணபதி அறநெறிப் பாடசாலை இப் பிரதேசத்தில் மேற்கொண்டு வரும் சமூக பணிகள், நிர்வாகத் திறமை மற்றும் அறநெறி பாடசாலை மாணவமாணவிகளின் போற்றத்தக்க வளர்ச்சி என்பவற்றால் ஈர்க்கப்பட்ட பிரதேச செயலாளர் மேலும் பல்வேறு உதவிகளை எதிர் வரும் காலப்பகுதிகளில் பெற்றுத் தருவதாகவும் உறுதியளித்தார்.



சிலோன் தௌஹீத் ஜமாத்தின் பண்டாரவளை கிளையினர் நடாத்திய பதினோராவது இரத்ததான நிகழ்வு நேற்று முன்தினம் (27) மாநகர சபை மண்டபத்தில் இடம் பெற்றது. இதன் போது மாநகர சபை உறுப்பினர் நௌஸாத் மற்றும் தமிழ்,முஸ்லிம்,சிங்கள மூவினத்தையும் சேர்ந்த நூற்றுக்கு மேற்பட்டோர் கலந்து கொண்டு இரத்த தானம் வழங்கினர்.எழுபத்தி இரண்டாவது முறையாகவும் இரத்ததானம் வழங்கிய விசாக்கா மாவத்த ஏ.ஆர்.எப்.பாஸிக்கு டாக்டர்.கே.பீ.சீ.லக்மாலி நற்சான்றிதழையும் வழங்கினார். (படம். ஊவா சுழற்சி நிருபர்)

# நோர்வூட்டில் மின் தகன நிலையம் உத்தியோகபூர்வமாக திறப்பு



நோர்வூட் பகுதியில் அமைக்கப்பட்ட மின் தகன நிலையம் கடந்த ஞாயிற்றுக் கிழமை (27/) ) உத்தியோகபூர்வமாக திறந்துவைக்கப்பட்டது. இதுவரை தலவாக்கலை அல்லது கொட்டக்கலை பகுதியை நோக்கிச் சென்ற மக்கள்,இனி மேல்

இந்த மின் தகன நிலையத்தை பயன்படுத்த முடியுமென நோர்வூட் பிரதேச சபை தவிசாளர் ரவி குழந்தைவேலு குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் குறிப்பிட்டதாவது: அமரர் ஆறுமுகன் தொண்டமானின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் கடந்த 2014 ம் ஆண்டு நோர்வூட் பிரதேசத்தில் மின் தகன நிலையம் அமைப்பதற்காக 12,000,000 பணம் ஒதுக்கப்பட்டு கட்டிட வேலைகள் நிறைவுசெய்யப்பட்டன.

இந்த வேலைத் திட்டமானது அம்பகமுவ பிரதேச சபையின் மூலமாக முன்னெடுக்கப்பட்டது. எனினும் நல்லாட்சிக் காலத்தில் இதைப் பூர்த்தி செய்வதற்கு உபகரண தேவைக்கு நிதி ஒதுக்கப்படவில்லை . ஆனால் தற்போது நோர்வூட் பிரதேச சபையின் ஊடாகவும் தவிசாளர் என்ற ரீதியிலும் ஐந்து லட்சம் பணம் ஒதுக்கி, மக்கள் பாவனைக்காக இதைத் திறந்து வைத்ததாக அவர் குறிப்பிட்டார்.



கொரோனா தொற்று காலப்பகுதியில் மீரிகம வைத்தியசாலையின் கிளினிக் மூலம் தபாலில் அனுப்பி வைக்கப்பட்ட மருந்தொன்றால் ஒவ்வாமைக்கு உள்ளான மீரிகம வெவஹேனவில் வசிக்கும் 16 வயதுடைய லெனின் நிரோஷனின் மேலதிக சிகிச்சைக்காக ஒரு இலட்சம் ரூபா நிதியுதவி வழங்கப்பட்டது. மருந்துபொருட்கள் உற்பத்தி, விநியோகம் மற்றும் ஒழுங்குபடுத்தல் இராஜாங்க அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமனவின் ஏற்பாட்டில் திலீப் ஹேரத் மற்றும் டொக்டர் பிசன்ன ரத்நாயக்க ஆகியோரின் பங்களிப்பில் இந் நிதியுதவி இராஜாங்க அமைச்சு அலுவலகத்தில் வைத்து வழங்கப்பட்டது.

# கொழும்பு வாழ் மலையக மாணவர்களுக்கு இலவச புலமைப்பரிசில் கருத்தரங்கு

மலையக கலாசார ஒன்றியம் மற்றும் ஐடியல் எக்கடமி என்பன இணைந்து ஏற்பாடு செய்த இவ்விலவசக் கருத்தரங்கு கொழும்பு வெள்ளவத்தையில் இடம்பெற்றது.

மலையக கலாசார ஒன்றியத்தின் செயலாளர் ரகு இந்திரக்குமார் இதுபற்றிக் குறிப்பிட்டதாவது :மலையகத்திலிருந்து கொழும்பு நோக்கி இடம்பெயர்ந்த குடும்பங்களை சார்ந்தவர்கள் பல இன்னல்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர். அவர்களுக்கு உதவும் பொருட்டு, அக்குடும்பங்களின் பிள்ளைகளுக்கு தரம் ஐந்து புலமைப்பரிசீல்கள் நடத்தப்பட்டன. இக்கருத்தரங்குகள் கொழும்பில் மட்டுமன்றி மலையகத்தின் பல பகுதிகளிலும் தொடர்ச்சியாக நடத்தப்படும் என்றார்.

# ஓய்ந்தது காந்தக் குரல்



வைகறை முதல் வான் நிலவு மறையும் வரை இசை ரசிகர்களின் இல்லங்களிலும், உள்ளங்களிலும் ஒலிக்கும் காந்தக் குரலுக்குச் சொந்தக்காரர் எஸ்.பி.பாலசுப்ரமணியம்.

காதல், பிரிவு, நட்பு, சோகம், தாபம் என தனி மனித வாழ்வின் எல்லா தருணங்களிலும் ஏதோ ஒரு பாடல் மூலம் நமக்குத் துணை நிற்கும் எஸ்பிபியின் குரல். அதனால் தான் எத்தனையோ பாடகர்கள் வந்தாலும், எஸ்பிபிக்கு மட்டும் மக்கள் மனதில் எப்போதும் நீங்கா இடம் இருப்பதாகக் கூறுகின்றனர் திரை விமர்சகர்கள்.ஸ்ரீபதி பண்டிதாரத்யுல பாலசுப்ரமணியம் என்ற இயற்பெயர் கொண்ட எஸ்.பி.பாலசுப்ரமணியம், எஸ்.பி. சாம்பமூர்த்தி சகுந்தலம்மா தம்பதியினருக்கு ஆந்திர மாநிலம் நெல்லூர் மாவட்டத்தில் உள்ள கொணடம்மாபேட்டை கிராமத்தில் 1946ஆம் ஆண்டு பிறந்தவராவார்.

இவரது தந்தை எஸ். பி. சாம்பமூர்த்தி இசைக் கலைஞர் ஆவார். இதனால் எஸ்பிபிக்கு இளம் வயதில் இருந்தே இசை ஆர்வம் இருந்தது. தந்தையின் ஹரிகதாவை கவனித்து இசைக் கருவிகளை வாசிக்கக் கற்றுக் கொண்டார். இசை ஆர்வம் ஒருபுறம் இருக்க, பொறியியலாளராக வேண்டும் என்பதுதான் எஸ்பிபியின் ஆசையாக இருந்தது.

சென்னையில் கல்லூரிப் படிப்பை அவர் பயின்று கொண்டிருந்த காலத்தில் பல இசைப் போட்டிகளில் கலந்து கொண்டார். அப்போது இசையமைப்பாளர்கள் இளைய ராஜா, பாஸ்கர், கங்கை அமரன் உள்ளிட்டவர்களின் நட்பு கிடைத்தது. அவர்களோடு சேர்ந்து தொடர்ச்சியாக பல இசை நிகழ்ச்சிகளில் பங்கேற்றார்.

அப்போது ஓர் இசைப் போட்டியில் எஸ்.பி.பி. கலந்துகொண்ட போது பிரபல இசையமைப்பாளர் கண்டசாலா நடுவராக வந்திருந்தார். பி.பி.ஸ்ரீனிவாஸ் பாடிய 'நிலவே என்னிடம் நெருங்காதே...' என்ற பாடலை எஸ்பிபி வெகு சிறப்பாகப் பாடியதுடன் அப்போட்டியில் வெற்றியும் பெற்றார். அந்தத் தருணத்தில் கண்டசாலாவின் தனிப்பட்ட பாராட்டை எஸ்பிபி பெற்றார். அதுதான் அவர் திரைத் துறைக்கு வருவதற்கான திருப்புமுனையாக அமைந்தது.



**முதல் சினிமா பாடல்:**

இதைத் தொடர்ந்து சினிமா வாய்ப்புகள் பல எஸ்.பி.பி. யை தேடி வந்தன. அதில் கோதண்டபாணி இசையில் 1966ஆம் ஆண்டு தெலுங்கில் உருவான 'ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ மரியாத ரமணா' படத்தில் 'ராவே காவ்ய சுமபாலா ஜவராலா...' என்ற பாடலை பி. சுசீலா மற்றும் பி. பி. ஸ்ரீனிவாஸோடு இணைந்து பாடினார்.

இதைத் தொடர்ந்து கன்னடத்திலும் வாய்ப்புக் கிடைத்தது. 1969 ஆம் ஆண்டு தமிழில் 'ஹோட்டல் ரம்பா' படத்தில் எம்.எஸ்.விஸ்வநாதன் இசையில் எல்.ஆர். ஈஸ்வரியோடு இணைந்து பாடினார். எதிர்பாராவிதமாக அந்தப் படம் திரைக்கு வரவில்லை. அதன் பின் ஜெமினி நடித்த 'சாந்தி நிலையம்' படத்தில் கண்ணதாசன் இயற்றிய பாடலை எம். எஸ். விஸ்வநாதன் இசையில் 'இயற்கையெனும் இளைய கன்னி...' என்ற பாடலைப் பாடினார். எம்.ஜி.ஆரின் 'அடிமைப் பெண்' படத்தில் இவர் பாடிய 'ஆயிரம் நிலவே வா...' எஸ்பிபியை எல்லோருக்கும் வெளிச்சம் போட்டுக் காட்டியது.

1970களில் இசையமைப்பாளர் எம். எஸ். விஸ்வநாதன் இசையில் தமிழ் மற்றும் மலையாள மொழிகளில் ஏராளமான பாடல்களைப் பாடியுள்ளார். எம். ஜி.ஆர்., சிவாஜி, ஜெமினி, ஜெய்சங்கர், ரவிச்சந்திரன் என அக்கால முன்னணி நடிகர்களுக்குப் பின்னணி பாடி பிரபலமானார். பி. சுசீலா, எஸ். ஜானகி, வாணி ஜெயராம் மற்றும் எல்.ஆர். ஈஸ்வரி உள்ளிட்டவர்களுடன் இவர் பாடிய டூயட் பாடல்கள் பட்டி தொட்டியெங்கும் எதிரொலித்தன.

1979ஆம் ஆண்டு வெளிவந்த 'சங்கராபரணம்' படப் பாடல்களை பாடியதன் மூலம் உலகளவில் பிரபலமானார். 'சங்கராபரணம்' இன்றளவும் சிறந்த சங்கீதப் படமாகத் திகழ்கிறது. இப்படத்தின் பாடல்கள் கே.வி. மகாதேவனால் கர்நாடக சங்கீதத்தை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்டது. இப்படத்துக்காக இவர் முதல் தேசிய விருதைப் பெற்றார். ஹிந்தியில் வெளியான 'ஏக் தூஜே கே லியே' படத்துக்காக இரண்டாவது தேசிய விருதைப் பெற்றார்.

**இளையராஜாவுடனான இசைப் பயணம்:**

அதன் தொடர்ச்சியாக, இளையராஜாவின் இசையில் எஸ். ஜானகியோடு இணைந்து இவர் பாடிய டூயட் பாடல்கள் தமிழ் இசை ரசிகர்களால் பெரிதும் கொண்டாடப்பட்டன.

1983 ஆம் ஆண்டு தெலுங்கில் வெளிவந்த 'சகார சங்கமம்' இளையராஜா எஸ்.பி.பி. இருவருக்கும் தேசிய விருதைப் பெற்றுத் தந்தது.

1988 ஆம் ஆண்டு தெலுங்கில் வெளிவந்த 'ருத்ரவீணா' படத்துக்காக மீண்டும் இவ்விருவருக்கும் தேசிய விருது கிடைத்தது. இளையராஜா மட்டுமல்லாது அவர் காலத்தில் இசையமைத்த எல்லா இசையமைப்பாளர்களின் இசையிலும் பின்னணி பாடியிருக்கிறார் எஸ்.பி.பி. இசையமைப்பாளர்கள் ஏ.ஆர்.ரஹ்மான், தேவா, வித்யாசாகர், கீரவாணி , எஸ். ஏ. ராஜ்குமார், பரத்வாஜ் போன்றோரின் இசையிலும் ஏராளமான பாடல்களைப் பாடியுள்ளார். இளையராஜாவுக்குப் பின் ஏ.ஆர்.ரஹ்மான் எஸ்.பி.பி. கூட்டணியும் பெரும் வரவேற்பை பெற்றது. ஏ.ஆர். ரஹ்மான் அறிமுகமான 'ரோஜா' படத்தில் இவர் பாடிய மூன்று பாடல்களும் பெரும் ஹிட்.'புதிய முகம்' படத்துக்காக 'ஜூலை மாதம் வந்தால்...', 'கிழக்குச் சீமையிலே' படத்துக்காக 'மானூத்து மந்தையிலே...,' 'டூயட்' படத்துக்காக 'என் காதலே...', 'மின்சார கனவு' படத்தில் வந்த 'தங்கத் தாமரை மகளே...' எனப் பல பாடல்கள் தமிழர்களின் இரவு நேரப் பாடல்களாகத் திகழ்கின்றன.

**உச்ச நட்சத்திரங்களுக்கு பின்னணி**

நடிகர் கமல்ஹாசனுக்கு 120 தெலுங்கு திரைப்படங்களில் பின்னணிக் குரல் கொடுத்துள்ளார் எஸ்.பி.பி. கமல்ஹாசன், ரஜினிகாந்த், சல்மான் கான், பாக்யராஜ், மோகன், அனில்கபூர், கிரீஷ் கர்னாட், ஜெமினி கணேசன், அர்ஜுன் சர்சா, நாகேஷ், கார்த்திக் மற்றும் ரகுவரன் ஆகியோருக்கு பல்வேறு மொழிப்படங்களில் பின்னணிக் குரல் கொடுத்துள்ளார்.

**சாதனைகள்...; விருதுகள்....**

40 ஆயிரம் பாடல்களைப் பாடி கின்னஸ் உலக சாதனைப் புத்தகத்தில் இடம் பிடித்திருக்கிறார் எஸ்.பி.பி. அதுமட்டுமல்லாது 6 முறை சிறந்த பின்னணிப் பாடகருக்கான தேசிய விருதினைப் பெற்றுள்ளார். இதுவரை தேசிய விருதினை தென்னிந்தியாவின் நான்கு மொழிகளிலும் பெற்ற ஒரே பின்னணிப் பாடகர் என்ற பெருமையும் இவருக்கு உண்டு.

பிலிம்பேர் விருதுகள், தமிழக, கர்நாடக அரசு விருதுகளை பல முறை பெற்றுள்ள இவர், ஆந்திர அரசின் நந்தி விருதினை 25 முறை பெற்றுள்ளார்.

1981ஆம் ஆண்டு பெப்ரவரி 8ஆம் திகதி பெங்களூரில் உள்ள பதிவரங்கில் காலை 9 மணியில் இருந்து இரவு 9 மணி வரை ஒரே நாளில் 21 பாடல்களை கன்னட மொழி இசையமைப்பாளர் உபேந்திர குமாருக்காக பாடி சாதனை செய்துள்ளார். மேலும், தமிழ் மொழியில் 19 பாடல்களையும் (ஒரே நாளில்), ஹிந்தி மொழியில் 16 பாடல்களையும் (6 மணி நேரத்தில்) பாடி சாதனை செய்திருக்கிறார்

கமல் நடித்த 'தசாவதாரம்' திரைப் படத்தை தெலுங்கில் மாற்றியபோது மொத்தமுள்ள பத்து கதாபாத்திரங்களில் ஏழு கதாபாத்திரங்களுக்கு (பெண் கதாபாத்திரம் உள்பட) பின்னணி கொடுத்துள்ளார். இவர் சிறந்த பின்னணிக்குரல் கொடுப்பவருக்கான நந்தி விருதினை 'அன்னமயா' மற்றும் 'ஸ்ரீ சாய் மகிமா' திரைப்படத்திற்கும் பெற்றுள்ளார். தென்னிந்திய மொழிகளில் எழுபதுக்கும் அதிகமான திரைப்படங்களில் நடித்துள்ளார். தமிழ், தெலுங்கு, கன்னடம், ஹிந்தி ஆகிய மொழிகளில் சுமார் 50 படங்களுக்கு இசையமைத்துள்ளார்.

**ரஜினிக்கு பாடினால் ஹிட்...**

ரஜினியின் படங்களில் ஒலிக்கும் அறிமுகப் பாடலை எஸ்பிபி பாடினால் அது கட்டாயம் ரசிகர்களை கவரும் என்ற நம்பிக்கை அதிகம்.

அதனாலேயே, ரஜினியின் அறிமுகப் பாடலை பாடியவர்களின் பட்டியலில் முதலிடம் பிடிப்பது எஸ்.பி.பி.யே. இந்த தொடர்ச்சி கபாலி படத்தில் அறுந்து போனது. இது ரசிகர்களை அதிர்ச்சிக்குள்ளாக்கியது. ஏனெனில் அதற்கு முன்னர் அவர் நடித்த லிங்கா அறிமுக பாடலை எஸ்.பி.பி. தான் பாடியிருப்பார். மீண்டும் அந்த வெற்றி இணை எப்போது இணையும் என்று ரசிகர்கள் ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருந்த சமயத்தில், கார்த்திக் சுப்புராஜ் இயக்கத்தில் பேட்ட படத்தில் எஸ்.பி.பி.யின் மாஸ் பாடல் ஒலித்தது. அதனைத் தொடர்ந்து கடைசியாக வெளியான தர்பார் திரைப்படத்திலும் நான் தான்டா இனிமேலு என்ற சூப்பர் ஹிட் பாடலையும் பாடினார் எஸ்.பி.பி.




27.09.2020 - தேசிய லொத்தர் சபை உருவாக்கிய மொத்த வெற்றியாளர்கள் எண்ணிக்கை 591,364
பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்த பரிசுத்தொகை 23,003,310.00
ரூ. 2,000,000.00 பரிசு 01 ரூ. 1,000,000.00 பரிசு 01 ரூ. 100,000.00 பரிசுகள் 26
www.nlb.lk
NLB NATIONAL LOTTERIES

செவண
திகதி 2020/09/27
சீட்டிழுப்பு இலக்கம் 299
C 22 23 27 39

| | பரிசுகள் | |
|---|---|---|
| 1ம் பரிசு | ரூ.1,000,000/- | - |
| 2ம் பரிசு | ரூ.100,000/- | 03 |
| 3ம் பரிசு | ரூ.1,000/- | 68 |
| 4ம் பரிசு | ரூ.200/- | 136 |
| 5ம் பரிசு | ரூ.100/- | 3,350 |
| 6ம் பரிசு | ரூ.50/- | 1,885 |
| 7ம் பரிசு | ரூ.20/- | 46,883 |
| 8ம் பரிசு | ரூ.20/- | 7,235 |

14,000,000/- 1,907,010/-

Mega POWER
சீட்டிழுப்பு இலக்கம்: 625
உத்தியோகபூர்வ முடிவுகள்
திகதி: 27/09/2020
E 16 32 61 65 66

| | பரிசுத் தொகை ரூ. | |
|---|---|---|
| 1 ஆம் பரிசு | 1,000,000.00 | - |
| 2 ஆம் பரிசு | 100,000.00 | 05 |
| 3 ஆம் பரிசு | 1,000.00 | 100 |
| 4 ஆம் பரிசு | 500.00 | 240 |
| 5 ஆம் பரிசு | 100.00 | 6,080 |
| 6 ஆம் பரிசு | 40.00 | 4,023 |
| 7 ஆம் பரிசு | 20.00 | 99,779 |
| 8 ஆம் பரிசு | 20.00 | 18,417 |

அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ.50,904,340.40
ரூ.10,174,780.00 ரூ.17,635,901.60
ரூ. 3,852,840.00

தன நிதானய
உத்தியோகபூர்வ முடிவுகள்
திகதி - 2020/09/27
சீட்டிழுப்பு இலக்கம் - 321
N 17 20 53 62

| | கட்டமைப்பு | பரிசுகள் | |
|---|---|---|---|
| 1 ஆம் பரிசு | | 1,000,000.00 | - |
| 2 ஆம் பரிசு | | 100,000.00 | 01 |
| 3 ஆம் பரிசு | | 3,000.00 | 59 |
| 4 ஆம் பரிசு | | 1,000.00 | 122 |
| 5 ஆம் பரிசு | | 100.00 | 3,153 |
| 6 ஆம் பரிசு | | 60.00 | 2,123 |
| 7 ஆம் பரிசு | | 20.00 | 53,007 |
| 8 ஆம் பரிசு | | 20.00 | 9,793 |

2,097,680.00 68,258
117,643,934.64

கொவிசெத
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு இலக்கம் 2553 சீட்டிழுப்பு திகதி 27.09.2020
ஆங்கில எழுத்து P வெற்றி இலக்கங்கள் 14 38 55 73

| | பரிசு கட்டமைப்பு | பரிசுத்தொகை | வெற்றியாளரர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 பரிசு | 4 இலக்கங்கள் சரியாயின் | ரூ.1,000,000.00 | - |
| 2 பரிசு | ஆங்கில எழுத்துடன் 3 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 100,000.00 | 08 |
| 3 பரிசு | 3 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 2,000.00 | 149 |
| 4 பரிசு | ஆங்கில எழுத்துடன் 2 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 1,000.00 | 342 |
| 5 பரிசு | 2 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 100.00 | 8518 |
| 6 பரிசு | ஆங்கில எழுத்துடன் 1 இலக்கம் சரியாயின் | ரூ. 40.00 | 5637 |
| 7 பரிசு | 1 இலக்கம் சரியாயின் | ரூ. 20.00 | 140300 |
| 8 பரிசு | ஆங்கில எழுத்து மாத்திரம் சரியாயின் | ரூ. 20.00 | 25501 |

இந்த சீட்டிழுப்பில் உருவாகிய வெற்றயாளர்களின் எண்ணிக்கை 180,455
இம்முறை வெற்றியீட்டிய பரிசுகளின் மொத்தத்தொகை ரூ. 5,833,300.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 65,289,129.20
வெற்றி பெறும் சீட்டுகள் சீட்டிழுக்கப்பட்ட திகதியிலிருந்து 6 மாதங்களுக்கு மாத்திரமே செல்லுபடியாகும். ஐந்து இலட்சமோ அதற்கு கூடிய தொகைக்கான பரிசு அரசாங்க வரி சட்டத்திட்டங்களுக்கு உட்பட்டது. பரிசை பெறுவதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.
தேசிய லொத்தர் சபை NATIONAL LOTTERIES BOARD
இல 32 தேசமான்ய N. W. J. முதலிகே மாவத்தை கொழும்பு 01
தொலைபேசி : 0114 607 000, 0112 324 324
Fax: 0114 663 416 Web: www.nlb.lk

சீட்டிழுப்பு இலக்கம் : 4268
மஹஜன சம்பத
திகதி: 27-09-2020
0 6 7 4 9 6 3

| | | | |
|---|---|---|---|
| 1ஆம் பரிசு | 6 7 4 9 6 3 | ரூ. 2,000,000/- | 01 |
| 2ஆம் பரிசு | 7 4 9 6 3 | ரூ. 100,000/- | 10 |
| 3ஆம் பரிசு | 4 9 6 3 | ரூ. 10,000/- | 97 |
| 4ஆம் பரிசு | 9 6 3 | ரூ. 1,000/- | 954 |
| 5ஆம் பரிசு | 6 3 | ரூ. 100/- | 9,586 |
| 6ஆம் பரிசு | 3 | ரூ. 20/- | 95,159 |
| 7ஆம் பரிசு | 6 7 4 9 6 | ரூ. 10,000/- | 09 |
| 8ஆம் பரிசு | 6 7 4 9 | ரூ. 1,000/- | 104 |
| 9ஆம் பரிசு | 6 7 4 | ரூ. 100/- | 949 |
| 10ஆம் பரிசு | 6 7 | ரூ. 50/- | 9,544 |
| 11ஆம் பரிசு | 0 | ரூ. 20/- | 38,030 |

ரூ. 9,312,480.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.16,187,247.00
தேசிய லொத்தர் சபை
www.nlb.lk

## வ/ப சுயாதீன தொலைக்காட்சிச் சேவை

# மாதாந்த வாடகை அடிப்படையில் வாகனங்களை சேவையில் ஈடுபடுத்துவதற்காக விலை மனுக்கோரல்

வ/ப சுயாதீன தொலைக்காட்சிச் சேவைக்கான பின்வரும் இடங்களில் காணப்படுகின்ற போக்குவரத்துத் தேவைகளுக்காக மாதாந்த வாடகை அடிப்படையில் 2 வருட ஒப்பந்த காலத்திற்கு சாரதி மற்றும் எரிபொருளுடன்கூடிய வாகனங்களை சேவையில் ஈடுபடுத்துவதற்காக முத்திரையிடப்பட்ட விலை மனுக்கள் கோரப்படுகின்றன.

| தொடர் இலக்கம் | விபரம் | விலை கோரல் இலக்கம் | வாகன வகை | விலை கேட்புப் பத்திரங்கள் விநியோகிக்கப்படும் இறுதித் திகதி மற்றும் நேரம் | விலை கேட்புகள் பொறுப்பேற்கப்படும் இறுதித் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|---|
| 01 | பத்தரமுல்லை தலைமை யகத்தின் போக்குவரத்துத் தேவை களுக்காக | ITN/Q/103/ 2019-1 | இரட்டை குளிரூட்டி வசதியுடனான 15 ஆசன High Roof பயணிகள் வரை போக்குவரத்து வேன் வண்டிகள் - 2005 அல்லது அதற்குப் பின்னர் உற்பத்தி செய்யப்பட்ட (மாதமொன்றுக்கு எதிர்பார்க்கப்படும் கி.மீ. அளவு 3000 கி.மீ.) | 2020.10.12ஆம் திகதி பி.ப. 3.00 வரை | 2020.10.13ஆம் திகதி பி.ப. 2.00 |
| 02 | கரகஹதென்ன ஒளிபரப்புக்கூடம், கரகஹகின்ன ஊடாக, கம்மடுவ, மாத்தளை | ITN/Q/ 59/2020 | 4 WD கதவுகள் 04 டபிள் கெப் குளிரூட்டப்படாத - 2010 அல்லது அதற்குப் பின்னர் உற்பத்தி செய்யப்பட்ட (மாதமொன்றுக்கு எதிர்பார்க்கப்படும் கி.மீ. அளவு 1750 கி.மீ.) | 2020.10.13ஆம் திகதி பி.ப. 3.00 வரை | 2020.10.14ஆம் திகதி பி.ப. 2.00 |

உரிய விலை கேட்புப் பத்திரங்களை, மேற்படி ஒவ்வொரு கேள்விப்பத்திரத்திற்காகவும் 1,080.00 ரூபாவிலான (8% வற் வரியுடன்) மீள் செலுத்தப்படாத கட்டணம் மற்றும் 5,000.00 ரூபாவிலான மீள் செலுத்தப்படுகின்ற விலை கேட்பு வைப்பு என்பவற்றை பத்தரமுல்லை, விக்கிரமசிங்கபுரயில் அமைந்துள்ள வ/ப சுயாதீன தொலைக்காட்சிச் சேவையின் முகாமையாளர் (வழங்கல்)க்கு பணத்தின் மூலம் செலுத்துவதனூடாக மேற்படி ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விலை கேட்புப் பத்திரங்கள் விநியோகிக்கப்படும் இறுதித் திகதி மற்றும் நேரம் வரை வாரத்தின் சாதாரண வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி தொடக்கம் பி.ப. 3.00 மணி வரை பெற்றுக்கொள்ள முடியும். விலை கேட்புப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளும்போது விலை மனுக்களைச் சமர்ப்பிப்பதற்கு எதிர்பார்க்கும் வாகனத்திற்கான பதிவுச் சான்றிதழின் பிரதியொன்றும் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

மேலதிக விபரங்களுக்காக வ/ப சுயாதீன தொலைக்காட்சிச் சேவையின் **www.itn.lk** வலைத்தளத்திற்குப் பிரவேசிக்கவும்.

**தலைவர், பெறுகைக்குழு,**
**வ/ப சுயாதீன தொலைக்காட்சிச் சேவை,**
**விக்கிரமசிங்கபுர,**
**பத்தரமுல்லை.**

## வ/ப சுயாதீன தொலைக்காட்சிச் சேவை

### ஊழியர்களின் உத்தியோகபூர்வ போக்குவரத்து நடவடிக்கைகளுக்காக பயண அடிப்படையில் பேருந்துகளை சேவையில் ஈடுபடுத்துவதற்காக விலை மனுக்கோரல்

வ/ப சுயாதீன தொலைக்காட்சிச் சேவையின் பத்தரமுல்லை, விக்கிரமசிங்கபுரயில் அமைந்துள்ள தலைமையகத்தைச் சேர்ந்த ஊழியர்களுக்கு பின்வரும் இடங்களிலிருந்து போக்குவரத்து வசதிகளை வழங்குவதற்காக பயண அடிப்படையில் சாரதி மற்றும் எரிபொருளுடன் கூடிய குளிரூட்டப்படாத மற்றும் கீழே குறிப்பிடப்பட்டுள்ள இருக்கைகளுடனான போக்குவரத்துப் பேருந்துகளை 2 வருட ஒப்பந்த காலத்திற்குச் சேவையில் ஈடுபடுத்துவதற்காக முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

உற்பத்தி வருடம் 2015 அல்லது அதற்குப் பிந்தியதாக உற்பத்தி செய்யப்பட்ட பேருந்துகளுக்காக மட்டும் விலை மனுக்களைச் சமர்ப்பிக்க முடியும்.

| தொடர் இலக்கம் | விபரம் | விலை கோரல் இலக்கம் | வாகன வகை | விலை கேட்புகள் திறக்கப்படும் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|
| 01 | பியகம பண்டாரவத்த சந்தியிலிருந்து பத்தரமுல்லை, பெலவத்த ஊடாக விக்கிரமசிங்கபுர தலைமையகம் வரை ஊழியர்களை ஏற்றிவருதல் மற்றும் ஏற்றிச் செல்லல். (ஒரு தடவை பயணத்திற்கு 15 கி.மீ) | ITN/Q/60/2020 | 32 இருக்கைகளுடனான பயணிகள் போக்குவரத்துப் பேருந்து | 2020.10.15ஆம் திகதி பி.ப. 2.15 |
| 02 | தெஹிவளை சந்தியிலிருந்து நுகேகொடை, பிற்றகோட்டே, தலவத்துகொடை ஊடாக விக்கிரமசிங்கபுர தலைமையகம் வரை ஊழியர்களை ஏற்றிவருதல் மற்றும் ஏற்றிச் செல்லல். (ஒரு தடவை பயணத்திற்கு 15 கி.மீ | ITN/Q/61/2020 | 32 இருக்கைகளுடனான பயணிகள் போக்குவரத்துப் பேருந்து | 2020.10.15ஆம் திகதி பி.ப. 2.30 |
| 03 | கொழும்பு சுகததாச உள்ளக விளையாட்டரங்கு அருகிலிருந்து மருதானை, பொரளை ஊடாக விக்கிரமசிங்கபுர தலைமையகம் வரை ஊழியர்களை ஏற்றிவருதல் மற்றும் ஏற்றிச் செல்லல். (ஒரு தடவை பயணத்திற்கு 15 கி.மீ) | ITN/Q/62/2020 | 54 இருக்கைகளுடனான பயணிகள் போக்குவரத்துப் பேருந்து | 2020.10.15ஆம் திகதி பி.ப. 2.45 |

உரிய விலை கேட்புப் பத்திரங்களை, மேற்படி ஒவ்வொரு கேள்விப்பத்திரத்திற்காகவும் 1,080.00 ரூபாவிலான (8% வட் வரியுடன்) மீள் செலுத்தப்படாத கட்டணம் மற்றும் 5,000.00 ரூபாவிலான மீள் செலுத்தப்படுகின்ற விலை கேட்பு வைப்பு என்பவற்றை பத்தரமுல்லை, விக்கிரமசிங்கபுரயில் அமைந்துள்ள வ/ப சுயாதீன தொலைக்காட்சிச் சேவையின் முகாமையாளர் (வழங்கல்)க்கு பணத்தின் மூலம் செலுத்துவதனூடாக 2020.10.14ஆம் திகதி பி.ப 3.00 மணி வரை வாரத்தின் சாதாரண வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி தொடக்கம் பி.ப.3.00 மணி வரை பெற்றுக்கொள்ள முடியும். அவ்வாறு பெற்றுக்கொள்ளப்படும் விலை கேட்புப் பத்திரங்கள் மூலம் மட்டும் விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்பதோடு விலை கேட்புப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளும்போது விலை மனுக்களைச் சமர்ப்பிப்பதற்கு எதிர்பார்க்கும் வாகனத்திற்கான பதிவுச் சான்றிதழின் பிரதியொன்றும் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

2020.10.15ஆம் திகதி பி.ப 2.00 மணி வரை விலை கேட்புகள் பொறுப்பேற்கப்படுவதோடு மேலதிக விபரங்களுக்காக வ/ப சுயாதீன தொலைக்காட்சிச் சேவையின் **www.itn.lk** வலைத்தளத்திற்குப் பிரவேசிக்கவும்.

**தலைவர், பெறுகைக்குழு,**
**வ/ப சுயாதீன தொலைக்காட்சிச் சேவை,**
**விக்கிரமசிங்கபுர,**
**பத்தரமுல்லை.**

## ஆயுர்வேத திணைக்களம் - சபரகமுவ மாகாணம்

# 2021ஆம் ஆண்டிற்கான பாதுகாப்பு, துப்புரவேற்பாட்டு, அழுக்குத் துணிகள் கழுவும் சேவைகள் மற்றும் உலர்ந்த விறகு, உலர்ந்த மருந்துகளை வழங்குவதற்கான கேள்விக் கோரல்

சபரகமுவ மாகாணம் ஆயுர்வேத திணைக்களத்திற்குச் சொந்தமான கீழ்க்காணும் ஆயுர்வேத வைத்தியசாலைகளுக்கு 2021ஆம் ஆண்டிற்கு மேற்படி வழங்கல்கள் மற்றும் சேவைகளை வழங்குவதற்காக இலங்கைப் பிரஜைகளிடமிருந்து மற்றும் நிறுவனங்களிடமிருந்து சபரகமுவ மாகாண ஆயுர்வேத திணைக்களத்தின் பெறுகைக்குழுவின் தலைவரால் கேள்விகள் கோரப்படுகின்றன.

| | வழங்கல்கள் மற்றும் சேவைகள் | நிறுவனங்கள் | மீளளிக்கப்படாத கேள்விப் படிவக் கட்டணம் | கேள்விப் பிணைக் கட்டணம் ரூபா | சொத்துச் சான்றிதழ் பெறுமதி |
|---|---|---|---|---|---|
| 01. | பாதுகாப்புச் சேவை வழங்கல் | ஆணையாளர் பணிமனை, இரத்தினபுரி, கேகாலை, புஸ்ஸெல்ல, ரக்வான, வரக்காபொல, எம்பிலிபிட்டிய, வல்கம, மொல்லிகொட, மகுத்தல, மல்வத்த, மெதபெத்த, பனாவல மற்றும் பின்னவல பஞ்சகர்ம அலகு ஆகிய நிறுவனங்களுக்கானது | 3000.00 | 58,000.00 | 500,000.00 |
| 02 | துப்புரவேற்பாட்டு சேவை வழங்குதல் | ஆணையாளர் அலுவலகம், இரத்தினபுரி, கேகாலை, புஸ்ஸெல்ல, எம்பிலிபிட்டிய, பனாவல, வரக்காபொல, ரக்வான, மகுத்தல, வல்கம, மெதபெத்த, மல்வத்த, ஆகிய வைத்தியசாலைகள் மற்றும் பின்னவல பஞ்சகர்ம அலகு ஆகிய நிறுவனங்களுக்கானது | 3000.00 | 60,000.00 | 600,000.00 |
| 03 | மருந்து உற்பத்தி மற்றும் உணவு சமைப்பதற்கான உலர்ந்த விறகு வழங்குதல் | இரத்தினபுரி, கேகாலை, ரக்வான, புஸ்ஸெல்ல, எம்பிலிப்பிட்டிய, பனாவல, மகுத்தல, மல்வத்த, வரக்காபொல, மொல்லிகொட, மெதபெத்த வைத்தியசாலைகளுக்கு | 1000.00 (ஒரு நிறுவனத்திற்கு | 5000.00 (ஒரு நிறுவனத்திற்கு | 20,000.00 (ஒரு நிறுவனத்திற்கு |
| 04 | உலர் மருந்துகள் வழங்குதல் | திணைக்கள மத்திய களஞ்சியம் - இரத்தினபுரி | 3000.00 | 120,000.00 | 300,000.00 |
| 05 | அழுக்குத் துணி கழுவுதல் | இரத்தினபுரி, கேகாலை, ரக்வான, புஸ்ஸெல்ல, எம்பிலிபிட்டிய, பனாவல, மகுத்தல, மல்வத்த, வரக்காபொல, வல்கம, மெதபெத்த ஆகிய வைத்தியசாலைகளுக்கு | 500.00 (ஒரு நிறுவனத்திற்கு | 1500.00 (ஒரு நிறுவனத்திற்கு | - |

01. கேள்விப் படிவங்கள் 2020.09.28 முதல் 2020.10.22 வரை அரச வேலை நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை மாகாண ஆயுர்வேத ஆணையாளர் பணிமனையில் பெற்றுக்கொள்ளலாம்.

02. கீழ்க்காணும் ஆவணங்களைச் சமர்ப்பிக்கும் ஒப்பந்தக்காரர்களுக்கு மாத்திரம் கேள்விப் படிவங்கள் விநியோகிக்கப்படும்.
    - தேசிய அடையாள அட்டை
    - 2020.09.20 அல்லது அதற்குப் பின் பெற்றுக்கொண்ட பிரதேச செயலாளரின் மேல் ஒப்பந்தத்துடனான பொது 170 மாதிரிப் படிவத்தின் சொத்துச் சான்றிதழ்.
    - அரசு அனுமதித்த சங்கங்களினால் கேள்விப் படிவங்களை பெற்றுக்கொள்வதற்காக குறித்த நிறுவனம் தமது அதிகாரப் பிரதேசத்திற்குள் அமைந்துள்ளதாகவும் மற்றும் ஒப்படைக்கப்படின் அதனை குறித்தவாறு தொடர்ந்தும் நடத்திச் செல்வதற்கு தகைமை உண்டு எனவும் குறித்த பிரதேசத்தின் பிரதேச செயலாளரிடம் பெற்றுக்கொண்ட சான்றிதழ்.
    - மேற்கண்டவாறு கேள்விப் படிவக் கட்டணம் மாகாண ஆயுர்வேத ஆணையாளரிடம் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டு.

03. கேள்விகளை சமர்ப்பிக்கும் போது எம்மால் வழங்கப்படும் கேள்விப் படிவங்களை சரியாக வாசித்துப் பார்த்து அதற்கு அமைவாக கேள்விகளைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

04. பொறியிடப்பட்ட கேள்விகள் ஆவணங்கள் இரு பிரதிகளுடன் 2020.10.23 மு.ப. 10.00 இற்கு முன் கிடைக்குமாறு கீழ்க்காணும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம். அல்லது திணைக்கள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம். தாமதமாகக் கிடைக்கும் கேள்விப் பத்திரங்கள் நிராகரிக்கப்படும். கேள்விகள் திறத்தல் அன்றே மு.ப. 10.30 இற்கு இடம்பெறுவதுடன், அதற்காக கேள்விதாரர் அல்லது அவரது பிரதிநிதியொருவருக்கு சமுகமளிக்கலாம்.

**தலைவர்,**
**விசேட மருத்துவர் டக்ளஸ் பத்திரகே**
**திணைக்கள பெறுகைக்குழு,**
**மாகாண ஆயுர்வேத திணைக்களம் - சபரகமுவ,**
**பண்டாரநாயக்க மாவத்த,**
**இரத்தினபுரி.**
**தொலைபேசி இலக்கம்: 045-2223147**

**The Housewives' companion**
**Classifieds on**
**Daily News**

# வாகனங்கள் விற்பனைக்கு

## THALAWATHUGODA VEHICLE YARD

### CAR

| VEHICLE NO | MAKE | MODEL | YEAR | VEHICLE NO | MAKE | MODEL | YEAR |
|---|---|---|---|---|---|---|---|
| 12-82XX | DAIHATSU | OTHER | 1983 | 65-66XX | LAND ROVER | FREELANDER | 1999 |
| 14 SRI 73XX | NISSAN | PRAIRIE | 1983 | 18-37XX | MAZDA | MR-90 | 1992 |
| KR-97XX | LEXUS | DAA-ANF10 | 2009 | 14 SRI 22XX | MITSUBISHI | GALANT | 1986 |
| 15 SRI 637XX | TOYOTA | CARINA KA67 V | 1985 | CAP-22XX | NISSAN | DAA-HT32 X-TRAIL | 2015 |
| 14 SRI 50XX | NISSAN | SUNNY | 1983 | CAX-58XX | HONDA | DAA-GP2 FIT SHUTTLE | 2014 |
| 17-99XX | HYUNDAI | EXCEL 1.5 LS | 1991 | KU-37XX | MARUTI | ZEN-ESTILO VXI | 2012 |
| KX-26XX | MICRO | MX7 MARK!! | 2013 | CAI-69XX | TATA | INDIGO MARINA GLX | 2015 |
| 12 SRI 14XX | MITSUBISHI | LANCER | 1981 | CAF-77XX | NISSAN | ZAA-AZE0 LEAF | 2013 |
| HO-44XX | KIA | SORANTO JEEP | 2003 | GO-59XX | TOYOTA | HARRIER JEEP | 1999 |
| CAB-27XX | HONDA | DAA-GP2 FIT SHUTTLE | 2013 | CAW-03XX | HONDA | DAA-GP2 FIT | 2014 |
| CAD-81XX | HONDA | DAA-RU3 VEZEL | 2015 | 13 SRI 44XX | NISSAN | SUNNY | 1984 |
| KJ-84XX | HYUNDAI | SANTA FE | 2008 | FZ-01XX | PERODUA | 306 XR | 2001 |
| CAN-22XX | MICRO | KORANDO | 2015 | JD-92XX | NISSAN | TA K11 | 2000 |
| KQ-48XX | MICRO | PANDA L.C 1.3 | 2011 | CBE-43XX | SUZUKI | DAA-MH55S WAGON R | 2018 |
| CAC-56XX | TOYOTA | DAA-ZVW30 PRIUS | 2012 | KY-98XX | MICRO | PANDA LC 1.0 | 2014 |
| KB-60XX | TATA | INDIGO MARINA GLX | 2006 | 17-56XX | TOYOTA | E-AT150 CARINA | 1989 |
| 13 SRI 82XX | NISSAN | SUNNY | 1985 | KE-32XX | MITSUBISHI | GF-N64WG | 2001 |
| 16-31XX | TOYOTA | CORONA - AT150 | 1986 | 14 SRI 17XX | TOYOTA | COROLLA KE 72 | 1982 |
| 14 SRI 20XX | MITSUBISHI | - | 1984 | GO-12XX | MAZDA | FAMILIA | 1998 |
| CAF-12XX | NISSAN | ZAA-AZE0 | 2013 | KI-65XX | FIAT | PANDA | 2006 |
| HJ-12XX | MITSUBISHI | MONTERO | 2003 | CBB-94XX | SUZUKI | DAA-MH55S WAGON R | 2018 |
| CAZ-35XX | MAZDA | DAA-MK42S | 2017 | 16-79XX | NISSAN | E-K10 MARCH | 1987 |
| CAG-36XX | NISSAN | ZAA-AZE0 | 2012 | CBD-42XX | SUZUKI | DAA-MH55S WAGON R | 2017 |
| KU-16XX | MICRO | PANDA LC 1.0 | 2012 | 13 SRI 58XX | MITSUBISHI | LANCER | 1983 |
| 14 SRI 81XX | TOYOTA | CORONA | 1984 | JJ-82XX | NISSAN | SUNNY | 2001 |
| CAN-98XX | NISSAN | ZAA-AZE0-LEAF | 2014 | CAN-39XX | MICRO | PANDA LC 1.0 | 2015 |
| KH-20XX | MICRO | REXTON 270 XDI | 2008 | KB-69XX | TOYOTA | VIOS | 2003 |
| 15 SRI 07XX | TOYOTA | CORONA | 1984 | JY-14XX | HONDA | ACTY-VHH3 | 1999 |
| 15 SRI 37XX | TOYOTA | CORONA - AT150 | 1987 | 13-75XX | MITSUBISHI | LANCER | 1985 |
| 19-84XX | FLAT | TEMPRA | 1996 | CAE-90XX | TOYOTA | DAA-ZVW30 | 2013 |
| 65-40XX | TOYOTA | LADN CRUSIER | 1999 | HK-50XX | MAZDA | FAMILIA | 2000 |
| HB-66XX | MITSUBISHI | PAJERO | 2000 | CAW-22XX | TOYOTA | DAA-NHP10 AQUA | 2015 |
| KV-83XX | MICRO | PANDA LC 1.0 | 2013 | KV-24XX | MARUTI | 800 | 2012 |
| CAH-89XX | HONDA | DAA-GP2 FIT SHUTTLE | 2013 | KU-95XX | MICRO | MX7 II | 2012 |
| CAX-92XX | SUZUKI | DAA-MH55S WAGON R | 2018 | CAX-74XX | HONDA | DBA-JF1 N-BOX | 2015 |
| CAI-25XX | NISSAN | ZAA-AZE0 LEAF | 2013 | KB-33XX | TATA | INDIGO GLX | 2004 |
| CAQ-89XX | HONDA | DAA-GM4 GRACE | 2015 | HC-28XX | HONDA | GF-GH3(JEEP) | 1999 |
| KW-16XX | MICRO | PANDA CROSS | 2013 | GV-04XX | NISSAN | SUNNY | 1999 |

### OTHER VEHICLES

| VEHICLE NO | MAKE | MODEL | YEAR | VEHICLE NO | MAKE | MODEL | YEAR |
|---|---|---|---|---|---|---|---|
| ND-11XX | NISSAN | PA-AHW41 | 2005 | 52-58XX | TOYOTA | HIACE | 1987 |
| 60-43XX | NISSAN | CARAVAN | 1982 | 30 SRI 73XX | TOYOTA | HIACE LH30V | 1980 |
| 57-72XX | TOYOTA | LH102 | 1991 | GL-44XX | TOYOTA | TOWNACE | 1996 |
| PD-58XX | TOYOTA | KR-KDH205V | 2007 | 58-61XX | MAZDA | SS28M | 1992 |
| 252-52XX | MAZDA | - | 1993 | PC-86XX | NISSAN | NAVARA | 2007 |
| 53-65XX | TOYOTA | TOWNACE | 1987 | 251-58XX | NISSAN | - | 1993 |
| PB-14XX | MAZDA | KC-SR59 V | 1997 | 253-43XX | MITSUBISHI | - | 1996 |
| PG-21XX | TOYOTA | EBD-8321 M | 2012 | PE-90XX | TOYOTA | KR-KDH200V HIACE | 2005 |
| PB-80XX | MICRO | MPV JUNIOR !! | 2009 | PF-44XX | TOYOTA | HIACE-280 D-4D | 2008 |
| PC-10XX | MICRO | MPV JUNIOR !!! | 2011 | 252-07XX | MAZDA | OTHER | 1994 |
| HY-71XX | DAIHATSU | HIJET | 1999 | LJ-58XX | FOTON | BJ1069VDJEA-RA | 2011 |
| 56-32XX | TOYOTA | HIACE | 1989 | GM-10XX | NISSAN DIESEL | CW536 | 1997 |
| JG-77XX | HYUNDAI | GRACE H100 | 2000 | PF-35XX | MAZDA | KO-SKF2V | 2007 |

## KADAWATHA VEHICLE YARD

### CAR

| VEHICLE NO | MAKE | MODEL | YEAR | VEHICLE NO | MAKE | MODEL | YEAR |
|---|---|---|---|---|---|---|---|
| CAH-15XX | TOYOTA | DAA-NHP10 AQUA | 2013 | HG-09XX | TOYOTA | HARRIER | 2000 |
| KL-16XX | PERODUA | AMIEZG | 2011 | JB-40XX | NISSAN | GJ-VY11 | 2000 |
| CAH-02XX | TOYOTA | DAA-NHP10 AQUA | 2012 | CAO-93XX | SUZUKI | DAA-MH44S WAGON R | 2014 |
| CAR-40XX | DFSK | DFSK GLORY 330 | 2016 | 13 SRI 74XX | NISSAN | SUNNY | 1983 |
| CAX-45XX | SUZUKI | DAA-MR41S HUSTLER | 2016 | CBB-77XX | SUZUKI | DAA-MH55S WAGON R | 2017 |
| CAT-90XX | HONDA | DAA-GP5 FIT | 2015 | CAL-29XX | MICRO | PANDA LC 1.0 | 2015 |
| KF-07XX | SUZUKI | DBA-ZC11S | 2004 | CBG-47XX | SUZUKI | DAA-MH55S WAGON R | 2018 |
| 300-21XX | DAIHATSU | L501RS-GMJJS | 1997 | CBI-09XX | SUZUKI | DAA-MH55S WAGON R | 2017 |

### OTHER VEHICLES

| VEHICLE NO | MAKE | MODEL | YEAR | VEHICLE NO | MAKE | MODEL | YEAR |
|---|---|---|---|---|---|---|---|
| PI-62XX | SUZUKI | HBD-DA17V EVERY | 2015 | PJ-62XX | SUZUKI | HBD-DA17V EVERY | 2018 |

மேற்படி வாகனங்கள் எதிர்வரும் 2020 செப்டம்பர் 28 ஆம் 29 ஆம் 30 ஆக்டோபர் 02 ஆம் திகதிகளில் மு.ப 08.30 முதல் பி.ப 4.30 வரை பார்வையிடலாம். (கேள்வி 2020 ஆக்டோபர் 02 ஆம் திகதி பி.ப 4.30 க்கு முடிவடையும்)

மீள செலுத்தப்படாத ரூபா.250.00 செலுத்தி கேள்விப்பத்திரங்களை தலவதுகொட **CDB** கிளைகளில் பெற்றுக்கொள்ளலாம்.

விண்ணப்பதாரிகள் வாகனங்களை அந்த நேரத்தில் காணப்படும் நிலையிலேயே ஏற்றுக் கொள்ள வேண்டும். தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகள் தொலைபேசி மூலம் அறிவிக்கப்படுவார்கள். அறிவிக்கப்பட்டு 07 நாட்களுக்குள் வாகனத்தின் முழுக் கட்டணத்தையும் செலுத்திக் கொண்டு செல்ல வேண்டும். மேலும் வாகனங்களின் நிலுவையாக உள்ள அரசாங்க வரி மற்றும் வருமான வரி என்பவற்றை விண்ணப்பதாரியின் பொறுப்பிற்கு வேண்டும்.

**VEHICLE INSPECTION**
Thalawathugoda Vehicle Yard: No. 175, School Lane, Thalawathugoda.
Mahara Vehicle Yard: No. 125/F, Ragama Road, Kadawatha.

**CONTACT:** Dilsha / Pasan: 011 2744977

**CITIZENS DEVELOPMENT BUSINESS FINANCE PLC**
No. 175, School Lane, Thalawathugoda. Tel: 0112744977

** The Company reserves the right to withdraw any vehicle from the sale without prior notice.*

# வடமாகாணத்தில் ஹர்த்தால்

## யாழில் அத்தியாவசிய சேவைகள் வழமைபோல் இயங்கின








**கொக்குவில் குறுப், முள்ளியவளை விசேட,யாழ்ப்பாணம் குறுப் நிருபர்கள்**

ஒன்றிணைந்த தமிழ்க்கட்சிகள் வடக்கில் பூரண ஹர்த்தாலுக்கு அழைப்பு விட்டிருந்த நிலையில் நேற்று யாழ்ப்பாணத்தில் கடைகள் வர்த்தக நிலையங்கள் கதவடைப்புக்கு ஆதரவு வழங்கிருந்தது. ஆனால் போக்குவரத்து சேவைகள் அனைத்தும் வழமைபோன்று இயங்கியதை அவதானிக்க முடிந்தது.

திலீபனின் நினைவேந்தலுக்கு நீதிமன்ற தடை உத்தரவு விதிக்கப்பட்டதைத்தொடர்ந்து வடக்கில் உள்ள தமிழ்கட்சிகள் ஒன்றிணைந்து தடை உத்தரவை மீள் பரிசீலனை செய்ய கோரியதுடன் நினைவேந்தல் எமது உரிமை அதற்கான நெருக்கடியை தளர்த்துமாறு ஜனாதிபதிக்கும் கடிதம் மூலம் கேரிரக்கை விடுத்திருந்தனர்.

இந்த இரண்டு கோரிக்கைகளுக்கும் சாதகமான பதில் ஏதும் கிடைக்காத நிலையில் உரிமைகள் மறுக்கப்பட்டு அடக்குமுறைகள் இடம்பெறுவதை ஏற்கமுடியாது என்று தெரிவித்த ஒன்றிணைந்த தமிழ் கட்சிகள் கடந்த 26ஆம் திகதி இடம்பெற்ற அடையாள உண்ணாவிரதத்திற்கும் நேற்று பூரண ஹர்த்தாலுக்கும் அழைப்பு விடுத்திருந்தது.

இந்நிலையில் நேற்றைய தினம் யாழ். நகர் மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் வர்த்தக நிலையங்கள் மற்றும் பொதுச் சந்தைகள் அனைத்தும் இயக்கம் இன்றி வெறிச்சோடிக் காணப்பட்டன. ஆனால் இலங்கை போக்குவரத்துச் சபை மற்றும் தனியார் போக்குவரத்து துறை இரண்டும் வழமையான போக்குவரத்து சேவையில் ஈடுபட்டன. இதுமட்டுமல்லாது பாடசாலைகளில் கணிசமான மாணவர்கள் வரவுகளும் பதிவாகியிருந்தன.

இந்நிலையில் முல்லைத்தீவு மாவட்டத்தின் முல்லைத்தீவு, முள்ளியவளை, ஒட்டுசுட்டான், மாங்குளம், மல்லாவி, புதுக்குடியிருப்பு உள்ளிட்ட நகரங்களில் உள்ள பொது சந்தைகள், வர்த்தக நிலையங்கள் என்பன இயங்கவில்லை. பாடசாலைகள் சில இயங்கிய போதிலும் மாணவர்களின் வருகை குறைவாகவே காணப்பட்டது. வங்கிகள், அரச ஸ்தாபனங்கள் தவிர்ந்த ஏனைய சேவைகள் எவையும் இடம்பெறவில்லை.

மல்லாவி நகரில் உள்ள வர்த்தக நிலையங்கள் சிலவற்றின் பெயர் பலகையில் உள்ள தொலைபேசி இலக்கங்களுக்கு அழைப்பை மேற்கொண்ட பொலிஸார் மற்றும் புலனாய்வு பிரிவினர் கடைகளை திறக்க வேண்டும் என அச்சுறுத்திய சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன.

தமிழ் மக்களின் வர்த்தக நிலையங்கள் தவிர்ந்த முஸ்லிம் மக்களுக்கு சொந்தமான வர்த்தக நிலையங்களும் மூடப்பட்டு கதவடைப்பு ஆதரவு வழங்கப்பட்டுள்ளதை காண முடிந்தது. நீதிமன்றம் இடம்பெறுகின்ற போதிலும் சட்டதரணிகள் எவரும் மன்றில் முன்னிலையாகாததால் நீதிமன்ற நடவடிக்கைகளும் முடங்கின.

# யாழ்.தெல்லிப்பழை புற்றுநோய் வைத்தியசாலை கதிரியக்க தொழில்நுட்பவியலாளர்கள் அடாவடி

### பொதுமக்கள் விசனம்



யாழ்ப்பாணம் தெல்லிப்பழை புற்றுநோய் வைத்தியசாலை கதிரியக்க சிகிச்சை தொழில்நுட்பவியலாளர்கள் நோயாளிகளுடன் அடாவடியில் ஈடுபடுவதாக பாதிக்கப்பட்டவர்கள் குற்றம்சாட்டுகின்றனர்.

தெல்லிப்பழை புற்றுநோய் வைத்தியசாலையின் சிகிச்சை பிரிவில் கடமைபுரியும் எட்டு கதிரியக்க சிகிச்சை தொழில்நுட்பவியலாளர்கள் சிகிச்சைக்கு வரும் புற்றுநோயாளிகளுடன் அடாவடியில் ஈடுபட்டு வருவதாக பாதிக்கப்பட்ட நோயாளர்கள் நேற்று யாழ்ப்பாண போதனா வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளர் சிறீ பவானந்தராஜாவை சந்தித்து முறையிட்டுள்ளனர்

கடந்த இரண்டு மாதங்களுக்கு மேலாக கதிரியக்க சிகிச்சை தொழில்நுட்பவியலாளர்கள் நாடு பூராகவும் தொழிற்சங்க போராட்டத்தில் ஈடுபட்டு வருவதன் காரணமாக கடந்த இரண்டு மாதங்களாக குறித்த உத்தியோகத்தர்கள் கடமை புரிவது இல்லை, எனினும் புற்று நோய் இனங்காணப்பட்ட நோயாளிக்கு குறித்த கதிரியக்க சிகிச்சை அளிக்காவிடில் மீண்டும் புற்றுநோய் பரவும் நிலை காணப்படுகின்ற நிலையில் கடந்த 2 மாதங்களுக்கும் மேலாக புற்றுநோய் சிகிச்சைக்கு வரும் நோயாளிகளை குறித்த உத்தியோகத்தர்கள் அடாவடியில் ஈடுபட்டு திருப்பி அனுப்புகின்றனர்.

குறிப்பாக வடக்கு மாகாணத்தில் தெல்லிப்பழை புற்றுநோய் வைத்தியசாலை மட்டுமே புற்றுநோய்க்கு சிகிச்சை வழங்கும் நிலையமாக காணப்படுகின்றது மட்டக்களப்பு, திருகோணமலை, வவுனியா, மன்னார் மற்றும் ஏனைய மாவட்டங்களில் இருந்தும் புற்றுநோய் சிகிச்சைக்காக வருகைதரும் நோயாளர்களை குறித்த உத்தியோகத்தர்கள் தங்களால் சிகிச்சை வழங்க முடியாது நாங்கள் தொழிற்சங்க போராட்டத்தில் ஈடுபடுகிறோம் எனக் கூறி அடாவடியாக திருப்பி அனுப்புகின்ற நிலை காணப்படுகிறது. எனினும் குறித்த உத்தியோகத்தர்கள் நோயாளிகளுக்கு சிகிச்சை வழங்காது மேலதிக நேர கொடுப்பனவினை கடந்த இரண்டு மாதங்களாக பெற்றிருப்பதாக வைத்திய சாலை நிர்வாகத்தினரால் சுட்டிக்காட்டப்படுகிறது.

எனவே நேற்று புற்றுநோய் சிகிச்சைக்கு சென்று திருப்பி அனுப்பப்பட்ட 5 நோயாளிகள் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை பிரதிப் பணிப்பாளர் ஸ்ரீ பவானந்தராஜாவைச் சந்தித்து தமது குற்றச்சாட்டை முன்வைத்திருந்தார்கள்

இது தொடர்பில் வைத்தியசாலை பிரதிப் பணிப்பாளர் கருத்து தெரிவிக்கையில்,

குறித்த விடயம் தொடர்பில் தமக்கு பல்வேறுபட்ட முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாகவும் இது தொடர்பில் சுகாதார அமைச்சு மட்டத்திலும் தெரிவித்திருக்கிறோம். நேற்றைய தினம் கூட குறித்த தொழிற்சங்கத்தினருடன் கொழும்பில் பேச்சுவார்த்தை நடத்தியிருந்தோம்.

எனினும் அவர்கள் உடன்படுவதாக இல்லை எனினும் விரைவில் உத்தியோகத்தர்கள் 8 பேருக்கும் உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

# போலித் தேனை விற்பனை செய்த சிறுவர்கள்; எச்சரித்து விடுவிப்பு



**தலைமன்னார் விசேட நிருபர்**

வவுனியா பகுதியிலிருந்து போலியான தேன் உற்பத்தியை மேற்கொண்டு மன்னார் பகுதியில் தேன் வியாபாரத்தில் ஈடுபட்டு வந்த சிறுவர்களை மடு பிரதேச பொது சுகாதார சேவைகள் உத்தியோகத்தர்கள் கைது செய்து போலித் தேன்களை அழித்தொழித்ததுடன் பெற்றோர்களுக்கு முன் இவர்களை எச்சரித்து விடுவித்துள்ளனர். இச் சம்பவம் ஞாயிற்றுக்கிழமை மடு றோட்டிலிருந்து மடு ஆலயம் செல்லும் வழியிலேயே இடம்பெற்றுள்ளது. இச் சம்பவம் தொடர்பாக தெரியவருவதாவது,

மன்னார் மடு றோட்டிலிருந்து மடு தேவாலயத்துக்கு செல்லும் பாதை எங்கும் சிறுவர்களை பயன்படுத்தி போலியான தேன் போத்தல் வியாபாரங்கள் இடம்பெற்று வருவதையிட்டு முறைப்பாடுகள் தெரிவிக்கப்பட்டு வந்தது.

இதை முன்னிட்டு மடு பிரதேச பொது சௌக்கிய சுகாதார சேவைகள் அதிகாரி ஐ.பி. றெக்சன் றொட்ரிக்கோ மற்றும் சக பொது சுகாதார பரிசோதகர்கள், பொலிஸ் உதவியுடன் இணைந்து சிறுவர்களை கைது செய்ததுடன் எச்சரித்து விடுவித்துள்ளனர்.

இவர்கள் வவுனியா மெனிக்பாம் பகுதியைச் சேர்ந்தவர்கள் எனவும் கோதுமை மா, சிற்றிக் அசிட், சீனி மற்றும் தேன் இவற்றைக் கலந்து குறித்த பதத்தில் பதனிட்டு போத்தல்களில் அடைக்கப்பட்டே இவ் வியாபாரத்தில் ஈடுபட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர்களது வயதினை கவனத்துக்கு எடுத்து மனிதாபிமான அடிப்படையில் வழக்கு தொடராது எச்சரிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டதுடன் போலியான அனைத்து தேனும் அழிக்கப்பட்டுள்ளன.

# தனுமீது வாள்வெட்டு; 5 சந்தேக நபர்கள் கைது

**யாழ்ப்பாணம் குறுப் நிருபர்**

'தனுறொக்' வாள்வெட்டுக் குழுவின் தலைவர் தனுமீது வாள்வெட்டு நடத்திய சந்தேகத்தின் பேரில் 5 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்ட 5 பேரும், கைதடி மற்றும் அச்சுவேலிப் பகுதியைச் சேர்ந்தவர்கள் ஆவர். சுமார் 23,24 மற்றும் 25 வயதுடைய ஆவா குழுவைச் சேர்ந்தவர்களே பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வாள்வெட்டை மேற்கொள்ள காரணமாக இருந்த பிரதான நபர்கள் எவரும் யாழ்ப்பாணம் பொலிஸாரால் கைதுசெய்யப்படவில்லை.

இவர்கள் கொண்டு வந்த கார் வாடகைக்கு எடுக்கப்பட்டுள்ளதாகவும், பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவர்களிடம் விசாரணைகள் முன்னெடுத்து வருகின்றதாகவும், விசாரணையின் பின்னர் நீதிமன்றில் ஆஜர்ப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுமென்றும் யாழ்ப்பாணம் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

# மாந்தை சன்னார் கிராம மக்கள் போராட்டம்

**மன்னார் குறுப் நிருபர்**

மாந்தை மேற்கு பிரதேசச் செயலாளர் பிரிவில் உள்ள சன்னார் கிராம மக்கள் நேற்று திங்கட்கிழமை (28) காலை கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றை முன்னெடுத்துள்ளனர்.

அரச அதிகாரிகள் சிலர் சன்னார் பகுதியில் உள்ள அரச காணிகளை தனியாருக்கு உரிய அனுமதிப்பத்திரம் இன்றி வழங்குவதாக கூறியும், குறித்த காணி வழங்கும் நடவடிக்கைகளை நிறுத்துமாறு கோரி குறித்த போராட்டத்தை மேற்கொண்டனர்.

சன்னார் கிராமத்தில் தாங்கள் குடியேற்றம் செய்யப்பட்டு பல வருடங்களை கடக்கின்ற போதும் தமது குடியேற்றத்திற்கு ஏக்கர் காணி மாத்திரமே வழங்கப்பட்டுள்ளது.

ஆனால் இன்று வரை தமக்கு விவசாய காணி வழங்கப்படவில்லை. நாங்கள் குடியேற்றம் செய்யப்பட்ட போது 2 ஏக்கர் விவசாய காணி தருவதாக அதிகாரிகள் கூறிய போதும் இன்று வரை விவசாய காணி வழங்கப்படவில்லை.

ஆனால் அரச அதிகாரிகள் வேறு இடங்களை சேர்ந்தவர்களுக்கும் வேறு இனத்தைச் சேர்ந்தவர்களுக்கும் பல ஏக்கர் காணிகளை காடு அழித்து விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்ள வழங்கி வருகின்றனர்.

குறித்த நடவடிக்கைகளை உடனடியாக நிறுத்த கோரி சன்னார் கிராம மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த நிலையில் சம்பவ இடத்திற்கு வருகை தந்த தமிழ் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் போராட்டத்தில் ஈடுபட்ட மக்களுடன் கலந்துரையாடினார்.

இதன் போது காணி பிரச்சினை தொடர்பாக வடமாகாண ஆளுநருடன் உரையாடிய விடையங்கள் தொடர்பாக மக்களிடம் தெரியப்படுத்தினர்.

குறிப்பாக அரச காணிகளை மக்களுக்கு விவசாய செய்கைக்கு பகிர்ந்து வழங்குமாறும், தானியாருக்கான காணிகள் காணப்பட்டால் உறுதி பத்திரத்தின் அடிப்படையில் தனியாருக்கு வழங்குமாறு வடக்கு மாகாண ஆளுனர் பிரதேசச் செயலாளர்களுக்கு உத்தரவிட்டுள்ளார் என்ற தகவலை பாராளுமன்ற உறுப்பினர் மக்களுக்கு தெரியப்படுத்தினார்.

இந்த நிலையில் போராட்டம் இடம்பெற்ற பகுதிக்கு வருகை தந்த அடம்பன் பொலிஸார் காணி துப்பரவு செய்யும் பணியை தற்காலிகமாக இடை நிறுத்தினர். அதனைத்தொடர்ந்து போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் அங்கிருந்து சென்றனர்.

# கிளிநொச்சியில் ரி56 துப்பாக்கி மீட்பு

**கிளிநொச்சி குறுப் நிருபர்**

கிளிநொச்சி பொலிஸ் புலனாய்வு பிரிவுக்கு கிடைத்த இரகசிய தகவலுக்கு அமைவாக நேற்று கிளிநொச்சி பொலிஸாரினால் ரி 56 ரக துப்பாக்கி ஒன்று மீட்கப்பட்டுள்ளது.

பரந்தன் பூநகரி வீதியில் ஐந்தாவது மைல்கல் பகுதியில் நிலத்தில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் இந்த துப்பாக்கி மீட்கப்பட்டுள்ளன. மீள பயன்படுத்த முடியாத நிலையில் துப்பாக்கி காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கிளிநொச்சி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# ஹர்த்தாலுக்கு எதிர்ப்பு தெரிவித்து வாழைச்சேனையில் ஆர்ப்பாட்டம்

பதாதைகளுடன் கோஷம் எழுப்பி மக்கள் ஆவேசம்





கல்குடா தினகரன் நிருபர்

ஒன்றிணைந்த தமிழ் கட்சிகளின் ஏற்பாட்டில் வடக்கு, கிழக்கில் ஹர்த்தால் அனுஷ்டிக்குமாறு கோரியதற்கு எதிர்ப்பு தெரிவித்து, கோறளைப்பற்று பிரதேச மக்களால் நேற்று திங்கட்கிழமை வாழைச்சேனையில் போராட்டம் இடம்பெற்றது.

இதன்போது வாழ விடு வாழ விடு நிம்மதியாக வாழ விடு, குழப்பாதே குழப்பாதே நாட்டை குழப்பாதே, அரசியல் சுயநலத்திற்கு தமிழ் மக்கள் பகடைக்காய்களா?, மேட்டுக்குடி அரசியல்வாதிகளே எம் மக்களை நிம்மதியாக வாழ விடு, நாம் ஹர்த்தாலை எதிர்க்கின்றோம், நாம் ஒரே நாடு ஒரே தேசம் என்று ஒன்றுபட்டு வாழ்வோம், தேர்தலில் மக்கள் கற்பித்த பாடத்தினை மறந்து விட்டீர்களா என்ற வாசகங்கள் அடங்கிய பதாதைகளுடன் மக்கள் கலந்து கொண்டனர்.

அரசாங்கத்தின் செயற்பாடுகளுக்கு எதிர்ப்பு தெரிவித்தும், தமிழர்களின் உரிமை மறுப்பு மற்றும் நினைவேந்தல்களுக்கான தடை ஆகியவற்றை கண்டித்து தமிழ் கட்சிகளினால் நேற்று திங்கட்கிழமை பூரண ஹர்த்தாலை அனுஷ்டிக்குமாறு அழைப்பு விடுக்கப்பட்ட நிலையில், மட்டக்களப்பு மாவட்டத்தின் கோறளைப் பற்று பிரதேச மக்களால் எதிர்ப்பு தெரிவித்து போராட்டம் நடைபெற்றது.

அத்தோடு பூரண ஹர்த்தாலை அனுஷ்டிக்குமாறு அழைப்பு விடுத்த பத்து தமிழ் கட்சிகளுக்கு எதிர்ப்பு தெரிவித்தும், தற்போது ஆட்சி அமைக்கும் அரசாங்கத்திற்கு ஆதரவு வழங்கியும் தாம் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளதாக ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட மக்கள் தெரிவித்தனர்.

தமிழ் அரசியல்வாதிகள் தங்களுடைய அரசியல் இலாபங்களுக்காகவே ஹர்த்தாலை அனுஷ்டிக்குமாறு கோரியுள்ளனர்.

ஆனால் மக்களின் தேவைகள் அதிகம் உள்ளது. இதற்கு முகம் கொடுக்காமல் மக்கள் மத்தியில் நிம்மதியினை குழப்புவதற்கு நடவடிக்கை மேற்கொள்கின்றனர்.

எனவே நாங்கள் அன்றாட தொழில் செய்து வரும் நிலையில் இவ்வாறு ஹர்த்தாலை போட்டு எங்களின் வயிற்றில் அடிக்காதீர்கள்.

இந்த அரசாங்கத்தின் மூலம் தாம் நிம்மதியாக வா ழ்வதாகவும், எங்களுக்கு இந்த அரசாங்கம் பூரண ஆதரவாக உள்ளதாகவும் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட மக்கள் தெரிவித்தனர்.

குறித்த பூரண ஹர்த்தால் எதிர்ப்பு போராட்டத்தில் வாழைச்சேனை பிரதேச சபை உறுப்பினர் எஸ்.தர்மலிங்கம் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# பாலமுனையில் பசுமை சுற்றுச் சூழல் திட்டம்



(பாலமுனை கிழக்கு தினகரன் நிருபர்)

பாலமுனை வை.எம்.எம்.ஏ கிளையின் ஏற்பாட்டில் பசுமையான சுற்றுச் சூழலை உருவாக்கும் திட்டத்தின் கீழ், பாலமுனை பிரதேசத்திலுள்ள பாடசாலைகள், மதஸ்தாபனங்கள், அரச மற்றும் தனியார் நிறுவனங்கள் வீதியோரங்கள் வீடுகள் என்பவற்றில் நிழல் தரும் மரங்கள், பழ மரக் கன்றுகள் மற்றும் மூலிகைக் கன்றுகளை நடும் வேலைத் திட்டம் அமுல்படுத்தி வருகின்றது.

பாலமுனை புதுநகர் ஹைமா பள்ளிவாசலில் மரம் நடும் நிகழ்வு ஞாயிற்றுக்கிழமை (27) பாலமுனை வை.எம்.எம்.ஏ.கிளையின் செயலாளர் எஸ்.எச்.ஏ.முபீத் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பாலமுனை பிரதேச வைத்திய சாலை வைத்தியர் கே.எல்.மாஹிறூன், பாலமுனை மஹாசினுல் உலூம் பெண்கள் இஸ்லாமிய கல்லூரியின் அதிபர் மௌலவி ரி.நிஸ்தார், கிராம சேவகர் எம்.ஐ.எம்.றியாழ் பள்ளிவாசல் தலைவர் இஸ்ஸதீன் ஏ.ஸிறாஜ் ஆகியோர் அதிதிகளாக கலந்து கொண்டு மரக் கன்றுகளை நாட்டி வைத்தனர்.

இதன் போது பள்ளிவாசல் வளாகத்தில் மரக்கன்றுகள் நடப்பட்டது.

# கோட்டைக் கல்லாறு வெதுப்பக வீதி புனரமைப்பு

மண்டூர் குறூப் நிருபர்

கோட்டைக்கல்லாறு கிழக்கு மாதர் கிராம அபிவிருத்தி சங்கத்தின் தலைமையில் சப்ரிகம திட்டத்தின் கீழ் கோட்டைக் கல்லாறு வெதுப்பக வீதியின் புனரமைப்பு ஞாயிற்றுக் கிழமை (27) இடம்பெற்றது. தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் மண்முனை தென் எருவில் பற்று பிரதேச சபை உறுப்பினர் த.சுதாகரன் புனரமைப்பு பணிகளை ஆரம்பித்து வைத்தார்.

# முஸ்லிம்கள் விடயத்தில் சுமந்திரன் இரட்டை முகம்

பாராளுமன்ற உறுப்பினர் ஹரீஸ்

(கல்முனை மத்திய தினகரன் நிருபர்)



முஸ்லிங்கள் விடயத்தில் சுமந்திரன் இரட்டை முகத்தை கொண்டவராக இருக்கிறார் என பாராளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம் ஹரீஸ் தெரிவித்தார்.

சாய்ந்தமருது சஹிரியன் விளையாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் கழகத்தின் முகாமையாளர் றியாத் ஏ.மஜீத், பிரதித் தலைவர் ஷரீப் ஹக்கீம் ஆகியோர் கௌரவ கலாநிதி பட்டம் பெற்றதை பாராட்டும் நிகழ்வு ஞாயிற்றுக்கிழமை (27) சாய்ந்தமருது "சீ பிறீஸ்" மண்டபத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் அவர் மேலும் தெரிவிக்கையில், முஸ்லிம் சமூகத்தினை சில அரசியல்வாதிகள் தெற்கிலுள்ள பெரும்பான்மை மக்களோடு மோத விடுகின்ற ஒரு கருவியாக பயன்படுத்துகின்றனர்.

கிழக்கு மாகாண முஸ்லிம் சமூகம் பாக்குவெட்டியில் அகப்பட்ட பாக்கு போல தேசிய ரீதியான அரசியலில் முகம் கொடுக்கவேண்டி உள்ளது. அதேநேரம் எமது பிராந்திய முஸ்லிம் சமூகத்தின் அரசியல் உரிமையை எங்களுடைய அதிகாரமையத்தினை தக்கவைக்க வேண்டிய நிலையில் நாங்கள் இருந்து கொண்டு இருக்கின்றோம்.

சம்மாந்துறையில் மறைந்த தலைவரின் நினைவேந்தல் நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ சுமந்திரன் பேசும்போது, முஸ்லிம் சமூகம் இந்த நாட்டில் சுயநிர்ணய போராட்டத்தை நடத்த வேண்டும் என்று அறைகூவல் விட்டு சென்றுள்ளார். அதே சுமந்திரன் முஸ்லிம் சமூகத்தின் முகவெற்றிலையாக இருக்கின்ற கல்முனை நகரினை முஸ்லிம்களுக்கு விட்டுக்கொடுக்க முடியாது என்று கடந்த வருடம் குறிப்பிட்டிருந்தார்.

தெற்கில் உள்ள பெரும்பான்மை மக்களோடு மோதவிடுவதற்கான ஒரு கருவியாக முஸ்லிம் சமூகத்தை மாட்டிவிடக்கூடாது என்பதில் நாங்கள் மிகவும் கவனமாக இருக்க வேண்டிய காலமாகும். அண்மையில் இந்திய பிரதமர் மோடியினுடைய உரை கூட தமிழ் தலைமைகளுடைய 13வது திருத்தச் சட்டம் தொடர்பாக பேசி இருக்கின்றார் ஆனால் முஸ்லிம் சமூகத்தின் ஜனாஸா எரிக்கப்பட்ட விடயத்தில் கூட எந்தவொரு வடகிழக்கில் உள்ள தலைமைகளோ, வல்லரசுகளோ! குரல் கொடுக்கவில்லை என்பதன் மூலம் நாங்கள் புரிந்து கொள்ளவேண்டும்.

# ஆசிரியர் சமூகமே மாணவர்களின் பிரச்சினையை அணுகக் கூடிய தரப்பு

சட்டத்தரணி மயூரி ஜனன்

(பெரியபோரதீவு தினகரன் நிருபர்)



மாணவர்களின் அனைத்துப் பிரச்சினைகளையும் அணுகக் கூடிய ஒரு தரப்பாக ஆசிரியர் சமூகம் இருப்பதாக மட்டக்களப்பு மாவட்ட 'அருவி' பெண்கள் வலையமைப்பின் பணிப்பாளர் சட்டத்தரணி மயூரி ஜனன் தெரிவித்தார்.

'சிறுவர் துஷ்பிரயோகமற்ற கல்விச் சூழலை உருவாக்குவதில் ஆசிரியர்களின் பொறுப்புக்கள்' எனும் தொனிப் பொருளில் ஏற்பாடு செய்யப்பட்ட கருத்தரங்கு செட்டிபாளையம் மகா வித்தியாலயத்தில் சனிக்கிழமை (25) இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பட்டிருப்பு கல்வி வலயத்தைச் சேர்ந்த துறைசார்ந்த சுமார் 100 ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.

தொடர்ந்து உரையாற்றிய அவர் தெரிவித்ததாவது,

கள விஜயங்களில் மேற்கொள்ளப்படுகின்ற ஆய்வுகள். பொலிஸ் நிலையங்களில் இருந்து கிடைக்கின்ற தகவல்கள், மனித உரிமைகள் ஆணைக்குழவிற்குக் கிடைக்கின்ற முறைப்பாடுகள் என்பனவற்றிலிருந்து பெறப்பட்ட தரவுகளை அடிப்படையாகக் கொண்டு சிறுவர் துஷ்பிரயோகமற்ற கல்விச் சூழலை உருவாக்குவதில் ஆசிரியர்களின் பொறுப்புக்கள் பற்றிய விழிப்பூட்டலைச் செய்ய திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் இருக்கின்ற 10 பிரதேச செயலகப் பிரிவுகளில் மட்டக்களப்பு மாவட்ட அருவி பெண்கள் வலையமைப்பு பணியில் ஈடுபட்டு வருகின்றது.

இந்தப் பிரதேச செயலகப் பிரிவுகளிலுள்ள கிராம மக்களிடம் கள ஆய்வுகளைச் செய்ததன் அடிப்படையில் மாணவர்கள் மீது பல்வேறு வகைப்பட்ட பாலியல் துன்புறுத்தல்கள் தொடர்பான கருத்தரங்குகளை மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள கல்வி வலயங்களில் நடாத்த ஏற்பாடுகளைச் செய்து வருகின்றோம்.

மாணவர் சமுதாயத்தைப் பாதுகாக்க வேண்டிய முழு பொறுப்பு ஆசிரியர் சமூகத்துக்கே உண்டு.

எமது நடைமுறைச் சிக்கல்களை மனித உரிமைகள், நீதிமன்ற நடவடிக்கைகள் மூலம் எவ்வாறு கையாளலாம் என்பது பற்றிய விழிப்புணர்களை ஆசிரியர்கள் பெற்றிருப்பது அவசியமாகும் என்றார்.

# கோமாரியில் மினிசூறாவளி; வீடுகள், கடைகள் சேதம்

திருக்கோவில் தினகரன் நிருபர்

பொத்துவில் பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட கோமாரி ஹளுகொல பகுதியில் கடந்த சனிக்கிழமை மாலை வீசிய மினி சூறாவளி காரணமாக வீடுகள், கடைகள் மற்றும் வீதியில் இருந்த பாரிய மரங்கள் சரிந்து விழுந்துள்ளன.

பொத்துவில் பிரதேசங்களில் சனிக்கிழமை மாலை வீசிய மழையுடனான மினி சூறாவளி காரணமாக இவ் அனர்த்தம் ஏற்பட்டு இருந்ததுடன் கோமாரி ஹளுகொல சந்தியில் பிரதான வீதியில் இருந்த மரங்கள் சரிந்து விழுந்ததில் உயர்மின்



அழுத்த மின்சார கம்பிகள் அறுந்து பிரதேசத்திற்கான மின்சாரம் முற்றாக தடைப்பட்டுள்ளது. இவ் அனர்த்தம் காரணமாக ஹளுகொல கிராமத்தில் மூன்று வீடுகளின் கூரைகள் காற்று காரணமாக வீதிகளில் தூக்கி விசப்பட்டு, வீடுகள் சேதடைந்துள்ளதுடன் ஒரு கடையும் சேதடைந்து காணப்படுகின்றன.

இவ் அனர்த்தத்தை தொடர்ந்து பொத்துவில் பிரதேச சபை தவிசாளர் எம்.எஸ்.அப்துல் வாசீத், உதவிப் தவிசாளர் பி.பார்த்திபன், சபை உறுப்பினர் ரி.சுபோதரன் மற்றும் கோமாரி இராணுவ முகாம் படையினர் இருந்த மரங்களை வெட்டி துப்புரவு செய்து பொத்துவில் அக்கரைப்பற்று பிரதான வீதியின் போக்குவரத்தினை சீர்செய்து இருந்தனர்.

# நிந்தவூரில் நடைபெற்ற வர்த்தக கண்காட்சி

(நிந்தவூர் குறூப் நிருபர்)

கேப்சோ அமைப்பின் ஏற்பாட்டில் மாபெரும் வர்த்தக கண்காட்சியும் விற்பனையும் கடந்த இரண்டு நாட்களாக (26, 27) நிந்தவூர் அஸ்ரப் சதுக்கத்தில் இடம்பெற்றது.

கெப்சோ அமைப்பின் திட்டப் பணிப்பாளர் ஏ.ஜே.காமில் இம்தாத் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் டீ.எம்.எல்.பண்டாரநாயக்க பிரதம அதிதியாக கலந்துகொண்டு கண்காட்சிக் கூடங்களை திறந்து வைத்தார்.



இந்நிகழ்வில் அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ஏ.எல்.அப்துல் லத்தீப், அம்பாறை மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜெயந்த ரத்நாயக்க ஆகியோர் கௌரவ அதிதிகளாகவும், காரைதீவு பிரதேச சபை தவிசாளர் கி.ஜெயசிறில், நிந்தவூர் ஆயுர்வேத தொற்றாநோய் ஆராய்ச்சி வைத்தியசாலையின் பணிப்பாளர் கே.எல்.எம்.நக்பர் விசேட அதிதிகளாகவும் கொண்டனர்.

அம்பாறை மாவட்ட சகல பிரதேசங்களிலிருந்தும் சிங்கள, தமிழ், முஸ்லிம் வர்த்தகர்களின் சகல துறை சார்ந்த வர்த்தகக்காட்சி கூடங்களும் அங்கு அமைக்கப்பட்டிருந்தன. இக்கண்காட்சியின் மூலம் மூவின மக்களின் வர்த்தகத்தை முன்னேற்றுவது மட்டுமின்றி இதனூடாக இன ஒற்றுமையை வலுப்படுத்தும் திட்டமாக அமைந்திருந்தது.



சர்வதேச கடற்கரையோரங்கள் சுத்தப்படுத்தும் தினத்திற்கு இணையாக கிழக்கு மாகாண உப்புவெளி கடற்கரை சுத்தப்படுத்தல் வேலைத் திட்டங்கள் கிழக்கு மாகாண ஆளுநர் திருமதி.அனுராத யஹம்பத்தின் தலைமையில் முப்படை இராணுவம், அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் அதிகாரிகள், சூழலியலாளர்கள், பாடசாலை மாணவர்கள் மற்றும் பிரதேசவாசிகள் உட்பட்ட குழுவினரின் பங்குபற்றலுடன் அண்மையில் நடைபெற்றபோது பிடிக்கப்பட்ட படம்.

# கிழக்கில் பூரண ஹர்த்தால்







## தமிழர்கள் செறிந்து வாழும் பிரதேசங்களில் கடையடைப்பு

**(பெரியபோரதீவு தினகரன், மட்டக்களப்பு குறூப், புதிய காத்தான்குடி தினகரன், ஆரையம்பதி தினகரன்,ரொட்டவெவ குறூப் நிருபர் நிருபர்கள்)**

கிழக்கு மாகாணத்தில் நேற்று (28) பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது. இதனை இலங்கை தமிழ் அரசுக்கட்சி உட்பட பல தமிழ் அமைப்புக்கள் இணைந்து ஏற்பாடு செய்திருந்தன.

ஹர்த்தால் காரணமாக மட்டக்களப்பு நகரம், வாழைச்சேனை, செங்கலடி, களுவாஞ்சிக்குடி உட்பட பல தமிழ் பகுதிகளில் வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டிருந்தன. ஆனாலும், உள்ளூர் மற்றும் வெளியூர் போக்குவரத்துச் சேவைகள் இடம்பெற்றன.

உண்ணாவிரதமிருந்து உயிர்நீத்த முன்னாள் விடுதலைப்புலிகள் முக்கியஸ்தர் திலீபனின் நினைவு தினத்தை அனுஷ்டிக்க அரசாங்கம் மறுத்தமையைக் கண்டித்தே இந்த ஹர்த்தால் அனுஷ்டிக்கப்படுவதாக தமிழ் அரசியல் கட்சிகள் தெரிவித்துள்ளன.

இது தொடர்காக தமிழரசுக் கட்சி விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

“ஜனாதிபதி கோட்டாபய அரசு ஆட்சிக்கு வந்த பின்பு இதுவரை காலமும் யுத்தத்தினால் உயிர் நீத்த எமது உறவுகளை நினைவு கூரும் உரிமை நிர்வாக ரீதியாவும் நீதிமன்ற உத்தரவுகள் மூலமாகவும் தடை விதிக்கப்பட்டுள்ளமை மிகவும் கவலைக்குரியதாகும்.

ஐக்கிய நாடுகள் சாசனம் மற்றும் சர்வதேச சமவாயங்களின்படி மரணித்தவர்களை தனியாகவும் கூட்டாகவும் நினைவுகூருவது அடிப்படை உரிமையாகப் பிரகடனப்படுத்தியுள்ள நிலையில், அவற்றை மீறும் வகையில் இந்த அரசாங்கம் ஜனநாயக விரோதமாக இவற்றை தடை செய்கிறது.

மரணித்த எமது உறவுகளை நினைவு கூரும் உரிமைகளுக்கு ஏற்படுத்தப்படும் தடைகளை நீக்கக் கோரி ஜனாதிபதிக்கு நாம் எழுதிய கடிதத்திற்கு பதில் எதுவும் கிடைக்கவில்லை.

இந்த நிலையில் தமிழ் தேசிய பரப்பில் ஒன்றிணைந்த பத்து அரசியல் கட்சிகளின் சார்பில் பொலிஸாரின் நீதிமன்ற தடை உத்தரவு உள்ளிட்ட பல்வேறு இடையூறுகளுக்கு மத்தியிலும் எமது கோரிக்கையை வலியுறுத்திய உண்ணாவிரதம் ஒன்று கடந்த 26ஆம் திகதி சனிக்கிழமை முழுமையாக மேற்கொள்ளப்பட்டது.

இதைத்தொடர்ந்து இந்தக் கோரிக்கை தமிழ் இனம் சார்ந்தது என்பதை நிரூபிக்கும் வகையிலான முழுமையான ஹர்த்தால் பொதுவேலை நிறுத்தத்துக்கு ஒன்றிணைந்த பத்து அரசியல் கட்சி சார்பிலும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது யாவரும் அறிந்ததே.

தமிழ் மக்களின் இனத்துவ அடையாளம், நில உரிமை, சமய மற்றும் கலாசார உரிமைகள் தீவிரமாக மறுக்கப்பட்டு வரும் நிலையில் மரணித்த எமது உறவுகளை நினைவு கூரல் உரிமையை வலியுறுத்தியும் இதன் மறுதலிப்பு தீவிரமாக அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்படுவதற்கு எதிராகவும் தமிழ் இனம் தனது ஆட்சேபனையை வெளிக்காட்டும் முகமாக நேற்று திங்கட்கிழமை வடக்கு, கிழக்கு தழுவிய பூரண ஹர்த்தாலுக்கு அழைப்பு விடுத்துள்ளோம் என குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, திருகோணலை மாவட்டத்தில் சில இடங்களில் இராணுவத்தினர் மற்றும் பொலிஸார் பாதுகாப்பு கடமைகளில் ஈடுபட்டுள்ளதையும் காணக்கூடியதாக இருந்தது.

தமிழ் மக்கள் செறிந்து வாழும் சில இடங்களில் கடைகள் மூடப்பட்டுள்ளதையும் அவதானிக்கக்கூடியதாக இருந்தது.





## மண் சோதனைக்கான மாதிரிகள் சேகரிப்பு

**பாண்டிருப்பு தினகரன் நிருபர்**

விவசாய ஊக்குவிப்பு வாரத்தின் இறுதிநாள் நிகழ்வையிட்டு கிழக்கு மாகாண விவசாயத் திணைக்களத்தின் கீழ்வரும் விவசாயக் கண்டங்கள் மற்றும் மேட்டு நிலப்பயிர்ச் செய்கையாளர்களின் விளை நிலங்களில் மண் பரிசோதனைக்காக மண் மாதிரிகள் சேகரிக்கும் நிகழ்வுகள் அம்பாறை மாவட்டத்தில் தொடர்ச்சியாக நடைபெற்று வருகின்றன.

இதற்கமைய சம்மாந்துறை விவசாய போதனாசிரியர் பிரிவிலுள்ள மல்வத்தை வயல் நிலங்களில் மண் பரிசோதனைக்காக மண் சேகரிக்கப்பட்டன. இதன் போது சம்மாந்துறை வலய உதவி விவசாய பணிப்பாளர், தலைமை பீட விவசாய போதனாசிரியர், பாடவிதான உத்தியோகத்தர்கள், விவசாய போதனாசிரியர்கள், தொழில்நுட்ப உதவியாளர்கள் உட்பட விவசாயிகள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

இங்கு சேகரிக்கப்படும் மண்ணின் தன்மை அதிலுள்ள போசனைக்கூறுகள் தொடர்பான மேலதிக பரிசோதனைக்காக மண் ஆராய்ச்சி திணைக்களத்திற்கு அனுப்பிவைக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மட்டு. தாளங்குடாவில் கைக்குண்டு மீட்பு

**மட்டக்களப்பு குறூப் நிருபர்**

மட்டக்களப்பு காத்தான்குடி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட தாளங்குடாவில் சத்தி வாய்ந்த கைக்குண்டொன்று மீட்கப்பட்டுள்ளதாக காத்தான்குடி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி துமிந்த நயணசிறி தெரிவித்தார்.

தாளங்குடா இந்து மயானத்திலிருந்து குறித்த கைக்குண்டு மீட்கப்பட்டதாக அவர் மேலும் தெரிவித்தார்.

கிடைக்கப்பெற்ற தகவலொன்றையடுத்து காத்தான்குடி பொலிஸ் நிலைய விசேட குற்றத்தடுப்பு பொறுப்பதிகாரி கயான் ராஜகருண தலைமையிலான பொலிஸ் குழுவினர் இக்கைக்குண்டைக் கைப்பற்றியதுடன் குண்டு செயலிழக்கும் படையினரால் செயலிழக்கச் செய்யப்பட்டது.

## டெங்கிலிருந்து மக்களை பாதுகாக்க சிரேஷ்ட பிரஜைகளின் பங்களிப்பு அவசியம்

### கல்முனை பிராந்திய பிரதி சுகாதார பணிப்பாளர்

**(அக்கரைப்பற்று தினகரன் சுழற்சி நிருபர்)**

டெங்கிலிருந்து மக்களைப் பாதுகாப்பதற்கு சிரேஷ்ட பிரஜைகளின் பங்களிப்பு அவசியமானது என கல்முனைப் பிராந்திய பிரதி சுகாதாரப் பணிப்பாளர் டொக்டர் றஹீம் றஜாப் தெரிவித்தார்.

பகிரங்க சேவை ஓய்வூதியர்களின் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் அக்கரைப்பற்று பிரதேச செயலகப் பிரிவுச் சங்கத்தினால் நடாத்தப்பட்ட டெங்கு ஒழிப்பு செயற்பாட்டில் சிரேஷ்ட பிரஜைகளின் பங்களிப்பு என்ற தொனிப் பொருளிலான விழிப்புணர்வுக் கருத்தரங்கு ஞாயிற்றுக்கிழமை (27) அக்கரைப்பற்று முனவ்வறா கனிஷ்ட கல்லூரியில் இடம்பெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே மேற் கண்டவாறு தெரிவித்தார்.



பகிரங்க சேவை ஓய்வூதியர்களின் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் அக்கரைப்பற்று பிரதேச செயலகப் பிரிவுச் சங்கத்தின் தலைவர் ஓய்வு பெற்ற அதிபர் ஏ. அப்துல் அஸீஸ் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில், கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டொக்டர் ஜீ.சுகுணன் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு சிறப்புரையாற்றியதோடு, கல்முனை பிராந்திய தொற்று நோய்த் தடுப்பியலாளர் டொக்டர் என். ஆரிப் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

கருத்தரங்கு ஆரம்பிப்பதற்கு முன்னர் கலந்துகொண்ட சங்க உறுப்பினர்கள் அனைவருக்கும் குருதியில் சீனியின் அளவு, கொலஸ்ட்ரோல், பிரஸர், கண் பரிசோதனை என்பன இலவசமாக நடாத்தப்பட்டன.

## மான் இறைச்சியுடன் ஒருவர் கைது

**கந்தளாய் தினகரன் நிருபர்**

திருகோணமலை சேருநுவர பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் 32 கிலோ மான் இறைச்சியுடன் ஒருவரை ஞாயிற்றுக்கிழமை (27) கைது செய்துள்ளதாக சேருநுவர பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

கங்குவேலி, தெஹிவத்தை பகுதியைச் சேர்ந்த 20 வயதுடைய இளைஞர் ஒருவரே கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சந்தேக நபர் சேருவில கல்லாறு காட்டுப் பகுதியிலிருந்து தெஹிவத்தை பகுதிக்கு மோட்டார் சைக்கிளில் சென்றபோதே பாதுகாப்பு கடமையில் நின்ற பொலிஸார் பரிசோதனை மேற்கொண்டபோதே சந்தேக நபர் 32 கிலோ மான் இறைச்சி கொண்டு சென்றது கண்டுபிடிக்கப்பட்டதாகவும், சந்தேக நபரை கைது செய்து சேருநுவர பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சந்தேக நபரிடம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருவதோடு, நீதிமன்றில் ஆஜர்படுத்த உள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

## மருத்துவ தாவரங்கள் வழங்கும் நிகழ்வு



**(அம்பாறை சுழற்சி நிருபர்)**

'ஹெல ஒசு உயன' எனும் மருத்துவ தாவரங்களை பாதுகாக்கும் தேசிய வேலைத்திட்டத் திற்கமைய அம்பாறை மாவட்டத்தில், நிந்தவூர் ஆயுர்வேத ஆராய்ச்சி வைத்தியசாலையினால் பல்வேறு வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இத்திட்டத்தின் ஓர் அங்கமாக, திருக்கோவில் கல்வி வலயம் மற்றும் அப்பிரதேச பாடசாலைகளுக்கான மருத்துவ தாவரங்களை வழங்கி வைக்கும் நிகழ்வும், மர நடுகையும் புதன்கிழமை(23) இடம்பெற்றது.

நிந்தவூர் ஆயுர்வேத ஆராய்ச்சி வைத்திய சாலையின் பணிப்பாளர் டொக்டர் கே.எல். நக்பர் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையின் சத்திர சிகிச்சை நிபுணர் பி.ரவீந்திரன் பிரதம அதிதியாகக் கலந்து சிறப்பித்தார். இந்நிகழ்வுகளில், திருக்கோவில் வலயக் கல்வி அலுவலகத்தின் உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.சூரநுதன், வைத்தியர்களான எம்.புர்கான், ஏ.சி.டில்சாத், எம்முபாறக், எஸ்.தொகுதார் மற்றும் விநாயகபுர மகா வித்தியாலய அதிபர் ரீ.புஸ்பராஜா, பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள் கலந்து கொண்டனர்.

திருக்கோவில் வலயக் கல்வி அலுவலகத்தில் பல்வேறுபட்ட மரக்கறி தோட்டங்கள், பழப்பயிர்ச் செய்கைகள் மற்றும் மரவெள்ளி கிழங்குச் செய்கை என்பன வலயக் கல்விப் பணிப்பாளரின் முயற்சியினால் முன்னெடுக்கப்பட்டுள்ளதனை அங்கு சென்றிருந்த சத்திர சிகிச்சை நிபுணர் தலைமையிலான மருத்துவக் குழுவினர் பார்வையிட்டதுடன், தமது பாராட்டுக்களையும் தெரிவித்தனர்.

## 55 பவுண் நகையுடன் மூவர் கைது கார், மோட்டார் சைக்கிள் மீட்பு



**மட்டக்களப்பு குறூப் நிருபர்**

12 வீடுகளை உடைத்து 55 பவுண் தங்க நகைகளைக் கொள்ளையிட்ட மூன்று சந்தேக நபர்களை காத்தான்குடி பொலிசார் கைது செய்துள்ளதாக பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி துமிந்த நயணசிறி தெரிவித்தார்.

காத்தான்குடி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ஆரையம்பதி, நாவற்குடா ஆகிய இடங்களிலேயே இவ்வீடுகள் உடைக்கப்பட்டு கொள்ளையிடப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் எல. ஆர்.குமாரசிறியின் பணிப்புரையின் கீழ் காத்தான்குடி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி துமிந்த நயணசிறியின் வழிகாட்டலில் பொலிஸ் நிலைய விசேட குற்றத்தடுப்பு பொறுப்பதிகாரி கயான் ராஜகருண தலைமையிலான பொலிஸ் குழுவினர் இவர்களைக் கைது செய்தனர்.

இவர்களிடமிருந்து கொள்ளைக்குப் பயன்பத்திய கார் மற்றும் மோட்டார் சைக்கிள் என்பனவும் கைப்பற்றப்பட்டுள்ளன.

சந்தேக நபர்கள் மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளதுடன் காத்தான்குடி பொலிசார் மேலதிக விசாரணைகளையும் மேற்கொண்டுள்ளனர்.

## மட்டக்களப்பில் இடம்பெற்ற '2020 சுற்றுலா நடைபவனி'

**புளியந்தீவுகுறூப் நிருபர்**

மட்டக்களப்பு உயர் தொழில்நுட்ப நிறுவனமும் கிழக்கு மாகாண உல்லாசப் பயணத்துறைச் சபையும் உல்லாசப் பயண தினத்தை நினைவு கூரும் முகமாக விழிப்பூட்டல் நடைபவனி ஞாயிற்றுக்கிழமை (27) கல்லடிப் பாலத்தருகே ஆரம்பமாகி கல்லடி கடற்கரையின் பொதுக் கூட்டம் மேடைவரை சென்றது.

இந் நிகழ்வுக்கு மட்டக்களப்பு உயர் தொழில்நுட்ப நிறுவனத்தின் அதிபர் எஸ்.ஜெயபாலன் தலைமை தாங்கினார். பிரதம விருந்தினராக மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி கலாமதி பத்மராஜாவும் சிறப்பு விருந்தினர்களாக மட்டக்களப்பு மாநகர மேயர் தி.சரவணபவன், கிழக்கு மாகாண உல்லாசப் பயணத்துறைச் சபையின் தலைவர் ஹரிதாஸன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினர் திருமதி கலாமதி பத்மராஜா உரையாற்றுகையில், மட்டக்களப்பு மாவட்டத்தில் விவசாயம், மீன்பிடி ஆகிய துறைகளுக்கு அடுத்ததாக அபிவிருத்தி செய்யப்பட வேண்டியது உல்லாசப் பயணத்துறையாகும்.

மாவட்டத்தின் கிராம மட்டத்திற்கு கொண்டுவந்த சுற்றுலா அபிவிருத்திச் சபையையும் உயர் தொழில்நுட்ப நிறுவனத்தையும் பாராட்டுகிறேன் என்றார்.

## மூதூர் பிரதேசத்தில் நஞ்சற்ற மரக்கறி உற்பத்தி

**(மூதூர் தினகரன் நிருபர்)**

மூதூர் பிரதேச தோட்டச் செய்கையாளர்கள் நஞ்சற்ற மரக்கறி செய்கையை பெருமளவில் உற்பத்தி செய்து வருவதையிட்டு உள்ளூர் மரக்கறிகளை மக்கள் பெருமளவில் கொள்வனவு செய்து வருகின்றனர்.

அரசினால் ‘சௌபாக்கிய’ வீட்டுத்தோட்ட பயிர்ச் செய்கைக்கெனவும் கமநலசேவை நிலையங்கள் ஊடாக விதைகள், பயிர்க் கன்றுகள், நாற்றுச்சாடிகள் உள்ளிட்ட பல்வேறு உதவிகளும் தேவையான வழிகாட்டல்களும் மேற்கொள்ளப்பட்டன.

இதேவேளை, சம்பூர், வேதத்தீவு, இறால்குழி, உப்புக்காச்சிமடு மற்றும் சந்தனவெட்டை போன்ற எல்லைப்புற கிராமங்களிலும் மிக அதிகளவில் கத்தரி, வெண்டி, கறிமிளகாய், புடோல், அவரை, தக்காளி போன்ற பல்வேறு வகையான மரக்கறிகளை உற்பத்தி செய்து இருந்தனர்.

# கொழும்பு திம்பிரிகஸ்யாய புனித திரேசாள் ஆலய திருவிழா

கொழும்பு திம்பிரிகஸ்யாய புனித திரேசாள் ஆலயத்தின் வருடாந்த திருவிழாஎதிர்வரும் ஒக்டோபர் 4ம் திகதி ஞாயிற்றுக்கிழமை சிறப்பாக கொண்டாடப்பட வுள்ளது.

கடந்த சனிக்கிழமை கொடியேற்றத்துடன் திருவிழா நிகழ்வுகள் ஆரம்பமாயின.

தினமும் மாலை ஆறு மணிக்கு நவநாள் ஆராதனைகளுடன் திருப்பலியும் இடம் பெற்று வருகின்றன.

எதிர்வரும் அக்டோபர் மூன்றாம் திகதி சனிக்கிழமை மாலை 6 மணிக்கு வெஸ்பர்ஸ் ஆராதனை இடம்பெற்று அதனைத்தொடர்ந்து திருச்சுருப பவனியும் இடம்பெறவுள்ளது. அதனைத் தொடர்ந்து மறுநாள் ஆறாம் திகதி ஞாயிற்றுக்கிழமை திருவிழா திருப்பலி நடைபெற உள்ளது.



புனித திரேசாள் 1873 ஆம் ஆண்டு ஜனவரி 2 ஆம் திகதி பிரான்ஸ் நாட்டில் உள்ள அலேன்கோன் என்ற இடத்தில் பிறந்தார். இவருடைய தந்தை லூயிஸ் மார்டின், தாய் செலி. திரேசாவின் குடும்பத்தில் அவர் தான் கடைக்குட்டி.

அவரோடு பிறந்தவர்கள் எட்டு சகோதரிகள் ஆனால் அதில் நான்கு சகோதரிகள் மட்டுமே உயிரோடு இருந்தார்கள். திரேசாவின் பெற்றோர் இருவருமே தங்களுடைய இளமைக் காலத்தில் துறவியாப்க போகவேண்டும் என்ற எண்ணம் கொண்டிருந்தார்கள். ஆனால் அது முடியாமல் போகவே தங்களுடைய பிள்ளைகளை கடவுளுக்கு உகந்தவர்களாய் வளர்த்து அதன்மூலமாக அவர்களைத் துறவிகளாக மாற்றினார்கள். தெரசா நான்கு வயதானபோது அவருடைய தாய் அவரை விட்டுப் பிரிந்தார். அவருடைய அன்னையின் இழப்பு அவரை மீளாத் துயரில் ஆழ்த்தியது. அந்த நேரத்தில் தெரசாவின் மூத்த சகோதரி பவுலின்தான் அவருக்கு ஒரு தாயைப் போன்று இருந்து சகல உதவிகளையும் செய்து அவரைச் சிறப்பாக வளர்த்தெடுத்தார்.

தெரசா அடிக்கடி நோய் வாய்ப்பட்டு படுக்கையில் வீழ்ந்தார். ஒரு சமயம் அவர் இப்படி நோய் வாய்ப்பட்டு படுக்கையில் வீழ்ந்தபோது அவருடைய குடும்பத்தில் இருந்த எல்லோரும் இயேசுவிடமும் அன்னை மரியாளிடமும் ஜெபித்து வந்தார்கள். அப்போது அன்னை மரியாள் தெரசாவிற்குக் காட்சிகொடுத்து அவரைப் பார்த்து புன்னகைத்துவிட்டுச் சென்றார். அடுத்த நாளே திரேசாவிடமிருந்த நோய் முற்றிலுமாக மறைந்தது. அதன்பிறகு அவர் நல்ல சுகத்தோடு வாழ்ந்து வந்தார்.

தெரசாவின் மூத்த சகோதரி பவுலின் கார்மேல் கன்னியர் மடத்தில் துறவியாகச் சேர்ந்தார். இது தெரசாவிற்கு பேரிடியாக அமைந்தது. தெரசா தன்னுடைய பதினைந்தாம் வயதில் 1888 ஆம் ஆண்டு ஏப்ரல் 9 ஆம் திகதி கார்மேல் சபையில் துறவியாகச் சேர்ந்தார்.

தூய வாழ்க்கை வாழத்தொடங்கினார்; அதிகமான நேரத்தை ஜெபத்திலும் தவத்திலும் கழித்தார். எந்த ஒரு காரியத்தைச் செய்தாலும் அதனை ஆன்மாக்களின் ஈடேற்றத்திற்காக செய்து வந்தார். 'சிறிய வழி' *'The Little Way'* என்பதன் வழியாக சிறு சிறு காரியத்தைச் செய்வதன் வழியாகவும் ஆன்மாக்களை மீட்டெடுக்கும் பணியில் ஈடுபட்டார். தெரசாவின் வாழ்வைப் பார்த்த மடத்தின் தலைவி, அவரை அவருடைய 22 ஆம் வயதில் நவ கன்னியர்களுக்கு பொறுப்பாளராக ஏற்படுத்தினார். அது மட்டுமல்லாமல் அவருடைய வாழ்வையே ஒரு புத்தகமாக எழுதச் சொன்னார். அதன் பேரில் தெரசா தன்னுடைய வாழ்வையே 'ஓர் ஆன்மாவின் கதை' என்ற பெயரில் புத்தகமாக வடித்தார்.

திரேசா ஆன்மீகத்தில் அதிகமாக வளர்ந்தாலும் அவருடைய உடல் நிலை மோசமாகிக்கொண்டே வந்தது. எலும்புருக்கி நோயினால் அவர் அதிகமாகப் பாதிக்கப்பட்டார். இதனால் அவர் 1896 ஆம் ஆண்டு, செப்டம்பர் 30 ஆம் நாள், தன்னுடைய இன்னுயிரைத் துறந்தார். அவர் இறக்கும்போது அவருடைய சபை அருட்சகோதரிகள் யாவரும் அவரைச் சூழ்ந்து நின்று ஜெபித்துக்கொண்டிருந்தார்கள். அப்போது அவர் 'இயேசுவே உம்மை நான் அன்பு செய்கிறேன்' என்று சொல்லிவிட்டு தன்னுடைய உயிரைத் துறந்தார். தூய வாழ்க்கை வாழ்ந்த திரேசாவிற்கு 1925 ஆம் ஆண்டு பதினோறாம் பத்திநாதரால் புனிதர் பட்டம் கொடுக்கப்பட்டது. 1997 ஆம் ஆண்டு திருத்தந்தை இரண்டாம் யோவான் பவுலால் 'மறைபரப்பு நாடுகளின் பாதுகாவலி' என்ற பட்டமும் கொடுக்கப்பட்டது.



பிரான்சினி என்ற கொலை குற்றவாளி ஒருவன் இருந்தான். அவன் ஒரு குடும்பத்தில் இருந்த மூன்று பேரை கொலை செய்ததற்காக சிறையில் அடைக்கப்பட்டு மரணதண்டனைக்காகக் காத்திருந்தான். தெரசா சிறுமியாக இருந்தபோது அவனைக் குறித்து கேள்விப்பட்டு அவன் மனம்மாறவேண்டும் என்று தொடர்ந்து ஜெபித்து வந்தார். தெரசாவின் இடைவிடாத ஜெபத்திற்கு பலன் கிடைத்தது. பிரான்சினி என்ற அந்த கொலை குற்றவாளி தான் இறப்பதற்கு சில மணிநேரத்திற்கு முன்பாக தன்னுடைய பாவத்தை உணர்ந்தான். அது மட்டுமல்லாமல் சிலுவையை தன்னுடைய கையில் ஏந்தி சிறைச்சாலைக்கு வந்த ஒரு பிராசிஸ்கன் துறவியிடம் தன்னுடைய பாவங்களை எல்லாம் அறிக்கையிட்டு அவர் கொண்டு வந்த சிலுவையை முத்திசெய்தி முற்றிலுமாக மனம் மாறினான்.

பிரான்சினி தன்னுடைய பாவங்களை உணர்ந்து மனம்மாறிய செய்தி அடுத்தநாள் பத்திரிகையில் தலைப்புச் செய்தியாக வந்தது. இச்செய்தி மற்றவர்களுக்கு மகிழ்ச்சி அளித்ததோ இல்லையோ, தெரசாவிற்கு அதிகமான மகிழ்ச்சியைத் தந்தது. அன்றிலிருந்தே அவர் பாவிகளின் மனமாற்றத்திற்காக, ஆன்மாக்களின் ஈடேற்றத்திற்காக தொடர்ந்து ஜெபித்து வந்தார் என்பதும் வரலாறு.

லோரன்ஸ் செல்வநாயகம்...

## மட்டக்களப்பு புனித வேளாங்கண்ணி ஆலய திருவிழா நிகழ்வுகள்









மட்டக்களப்பு புனித அன்னை வேளாங்கண்ணி ஆலய திருவிழா கடந்த வியாழக்கிழமை பங்குத்தந்தை அருட்பணி சுவக்கின் ரொசான் அடிகளார் தலைமையில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. அதனைத் தொடர்ந்து மூன்று தினங்கள் நவநாள் வழிபாடுகள் நடைபெற்றதுடன் கடந்த 26 ஆந் திகதி சனிக்கிழமை மாலை 5.30 மணிக்கு அன்னையின் திருச்சுருப பவனி இடம்பெற்றது. 27 ஆந் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை அருட்தந்தை சகாயநாதன் அடிகளார் தலைமையில் அருட்தந்தை வின்சன்ட் ரொசைறோ, அருட்தந்தை யோசப் மேரி அடிகளார் ஆகியோர் இணைந்து திருவிழா கூட்டுத் திருப்பலியினை ஒப்புக்கொடுத்தனர். திருவிழா திருப்பலியையும் கலந்து கொண்ட விசுவாசிகளில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

(படங்கள்; கல்லடி குறூப் நிருபர்)

## “ மனந்திரும்பி நிறைவான மனிதனாக வாழ்வதே மாண்புள்ள வாழ்வு ”

### நற்செய்தி கூறும் வாழ்க்கைப் பாதை

மனிதனை மாண்புள்ள மனிதனாக மாற்றுவது அவனுடைய சொல்லும் செயலும் தான். எவ்வளவு பணம் பட்டம் பதவி போன்றவற்றைக் கொண்டிருந்தாலும் சொல்லும் செயலும் இணைந்து செல்லவில்லை எனில் அது மனித மாண்பை இழக்கச் செய்கின்றது. யாரெல்லாம் தாங்கள் சொல்வதை செய்கின்றார்களோ அவர்கள் மாமனிதர்கள். யாரெல்லாம் செய்வதை சொல்கிறார்களோ அவர்களும் மாமனிதர்கள். மனித மாண்பை மாண்புறச் செய்ய நாம் எப்படி இருக்க வேண்டும்? எப்படி இருக்கக் கூடாது?



என்ற சிந்தனையை கடந்த ஞாயிறு நற்செய்தி வாசகங்கள் எமக்குத் தெளிவுபடுத்துகின்றன.

சொல்வதை செய்பவரையும் செய்ததை சொல்பவரையும் தேர்வு செய்யும் கடமை நம் கையில் இருக்கின்றது. நேர்மையான எண்ணத்தில் வாழும் பொழுது மனிதத்தை மாண்புறச் செய்ய முடியும். என்ற மனநிலையைத் தான் நம்மிடம் இயேசு கிறிஸ்து எதிர்பார்க்கின்றார்.

கடந்த ஞாயிறு முதல் வாசகத்தில் எசேக்கியல் இறைவாக்கினர் இஸ்ரயேல் மக்களின் உண்மையற்ற மனநிலையை சுட்டிக்காட்டுகின்றார். அவர்கள் அடிமைத்தனத்திற்கு உள்ளாக்கப்பட்டது அவர்கள் யாவே கடவுளுக்கு உண்மையாக இல்லாததாலேயே. கடவுள் மனிதனை படைத்தது முதல் தன்னுடைய அன்பை முழுவதுமாக கொடுத்த பொழுதிலும் கடவுளுக்கு கீழ்ப்படிய மறந்தனர்.

குறிப்பாக நம் ஆதிப் பெற்றோர் தங்களுடைய சுயநலத்தால் கீழ்ப்படியாமை என்ற பாவத்தால் இந்த உலகத்திலேயே பாவத்தை முதன்முதலில் கொண்டு வந்தனர். இருந்தபோதிலும் கடவுள் அவர்களைத் தண்டிக்காது மீண்டும் மீண்டும் மன்னிப்பு கொடுக்கிறார்.

அதேபோல 480 ஆண்டுகளுக்கு மேலாக எகிப்தில் அடிமைப்பட்டுக் கிடந்த இஸ்ரேல் மக்களை மோசேயின் வழியாக விடுவித்து கானான் தேசத்தை வழங்கினார். இவ்வளவு அரும்பெரும் செயல்களை கண்டும் பல நேரங்களில் அவர்கள் கடவுளை மறந்து போனார்கள். எனவே தன்னுடைய தூதுவர்களாகிய இறைவாக்கினர்களை மக்களிடம் மனந்திரும்ப அனுப்புகின்றார். அதில் குறிப்பிடத்தக்கோர் எசேக்கியல், எரேமியா மற்றும் தானியல் போன்றவராவர்.

இந்தப் பின்னணியில் எசேக்கியல் இறைவாக்கினர் யாவே இறைவன் வழிகாட்டுதலின்படி இஸ்ரேல் மக்களை மனந்திரும்பி பாவ வாழ்வை விட்டுவிட அழைப்பு விடுத்தார்.

ஆனால் தாங்கள் துன்பப்படுவது எங்கள் முன்னோர் செய்த பாவங்கள் தான் என்று நம்பி கடவுளிடம் இருந்து தங்களை விலக்கிக் கொண்டனர். கடவுளுக்கு கீழ்ப்படிவதால் தான் துன்பங்கள் அதிகமாக இருக்கிறது என்பதைக் கூறி கடவுள் நீதி உள்ளவரா? நியாயமானவரா ? என்ற கேள்விகளை எழுப்பினர்.

ஆனால் எசேக்கியல் இறைவாக்கினர் அவரவர்கள் பாவத்தின் பொருட்டு தான் துன்பங்கள் வரும் என்பதைத் தெளிவுபடுத்தினார். யாவே இறைவனின் உண்மையான நோக்கம் மக்களைத் தண்டிப்பது அல்ல ; மாறாக, காப்பாற்றுவது என்பதை மிகத் தெளிவாக எடுத்துக் கூறியுள்ளார். நாம் கடவுளுக்கு எதிராக எவ்வளவு பாவங்கள் செய்தாலும் கடவுள் என்னை மன்னிப்பார் நம்பிக்கையோடு மனம் மாறி மன்னிப்பு கேட்கும் பொழுது நிச்சயமாக கடவுள் நம்மை மன்னிப்பார். மனந்திரும்பி நிறை உள்ள மனிதனாக வாழ்வதுதான் மனித மாண்புள்ள வாழ்வு. இந்த ஆழமான சிந்தனையை தான் அந்த முதல் வாசகம் நமக்கு வலியுறுத்துகின்றது.

இரண்டாம் வாசகத்தில் மிகச்சிறந்த மனித மாண்புள்ள சிந்தனையை வழங்கியுள்ளார். பிலிப்பு நகர மக்கள் திருத்தூதர் பவுலால் மிகவும் அன்பு செய்யப்பட்ட மக்கள்.

ஆனால் அவர்களிடத்தில் ஒரு சில கருத்து வேறுபாடுகள் இருந்தன. மனித மாண்பை இழக்கச் செய்யும் ஏற்றத்தாழ்வு மனநிலை இருந்தன. இத்தகைய மனநிலையை அடியோடு அகற்றி இறைவன் பார்வையில் அனைவரும் சமம் என்ற சமத்துவ சித்தாந்தத்தை நமக்கு தெளிவுபடுத்தியுள்ளார். இரண்டு வகையான சிந்தனையை திருத்தூதர் பவுல் நமக்கு வழங்கியுள்ளார்.

இன்று இந்த உலகத்தில் பிறந்த எல்லோருமே இறைவனின் பிள்ளைகள். யாருமே தன்னை உயர்ந்தவன் எனவும் பிறரை தாழ்ந்தவன் எனவும் நினைக்கக் கூடாது என்பதை அறிவுறுத்தியுள்ளார்.

அருட்சகோ.
குழந்தை இயேசு பாபு...

## கருணைக்கொலை சட்டங்கள் தொடர்பில்

## விசுவாச கோட்பாட்டு பேராயம் விசேட மடல்

பல்வேறு நாடுகளில் கருணைக்கொலை பற்றிய புதிய சட்டங்கள் நடைமுறைக்கு வந்துள்ள இவ்வேளையில், குணமாக்க இயலாத நோயுடன் வாழ்வின் இறுதிக்கட்டத்தை நெருங்கிக்கொண்டிப்போரைப் பராமரிப்பது தொடர்பில் வத்திக்கான் விசுவாசக்கோட்பாட்டு பேராயம், “Samaritanus bonus” “நல்ல சமாரியர்” என்ற தலைப்பில் நீண்ட மடல் ஒன்றை கடந்த 22 செவ்வாயன்று வெளியிட்டுள்ளது.

அயலவருக்குப் பராமரிப்பு, துன்புறும் கிறிஸ்துவின் உயிருள்ள அனுபவம் மற்றும் நம்பிக்கையை அறிவித்தல், மனித வாழ்வு புனிதமானது மற்றும் மீறமுடியாத கொடை என நோக்கும் சமாரியரின் இதயம், மனித வாழ்வின் புனித மதிப்பை ஒளியற்றதாய் ஆக்கும் கலாசாரத் தடைகள், திருஅவையின் அதிகாரபூர்வ போதனைகள் ஆகிய ஐந்து தலைப்புக்களில் இந்த மடல் வெளியிடப்பட்டுள்ளது.

கருணைக்கொலை மற்றும் பிறரின் உதவியால் ஆற்றப்படும் தற்கொலை, கொடூரமான மருத்துவ சகிச்சைகளை விலக்குவதற்குள்ள அறநெறி கடமை, குணமாக்க முடியாத நோயுடன் இறக்கும் நிலையிலுள்ளோருக்குப் பராமரிப்பு, குடும்பங்கள் மற்றும் அத்தகைய நோயாளிகளைப் பராமரிக்கும் இல்லங்கள், நலவாழ்வுப் பணியாளர்களுக்குப் பயிற்சி போன்றவற்றில் திருஅவையின் போதனைகள் குறித்தும் இந்த மடலில் மிகத் தெளிவாக விளக்கப்பட்டுள்ளது.

விசுவாசக்கோட்பாட்டு பேராயத்தின் தலைவர் கர்தினால் லூயிஸ் லதாரியா அவர்கள் தலைமையில் இந்த மடல் வெளியிடப்பட்டு மடல் குறித்த கருத்துக்களும் பகிரப்பட்டுள்ளன.

மேரி தெரேசா...




விவசாய வாரத்தை முன்னிட்டு தம்பிலுவில் மாகாண விவசாய விரிவாக்கல் நிலையத்தின் தொழிநுட்ப உதவியாளர் அ.க.மு. அஸீம் மற்றும் விவசாயபோதனாசிரியர் சு.சுஜிகாந்தன் ஆகியோரின் ஏற்பாட்டில் 23 ஆம் திகதி,சேதனவீட்டுத் தோட்டம் அமைத்தல் தொடர்பான பயிற்சி வகுப்பில் அம்பாறை மாவட்ட பிரதி விவசாயப் பணிப்பாளர்னு திஸாநாயக,லாகுகல வலய உதவி விவசாயப் பணிப்பாளர் ஆகியோரை காணலாம்.

தண்டுகம முதல் புத்தளம் வரையான வீதி

# கார்பட் இடும் பணி விரைவில் ஆரம்பம்

## 04 ஆண்டில் நாட்டில் பாரிய அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் நிமல் லான்சா

எமது நாடு எதிர்வரும் நான்கு ஆண்டுகளுக்குள் பாரிய ஒரு அபிவிருத்தியை அடையும் என்று கிராமப்புற வீதிகள் மற்றும் பிற உள்கட்டமைப்பு இராஜாங்க அமைச்சர் நிமல் லான்சா தெரிவித்தார்.

நீர்கொழும்பில் நடைபெற்ற வீதி அபிவிருத்தி திட்டத்தில் பங்கேற்றபோது இராஜாங்க அமைச்சர் நிமல் லான்சா இந்த கருத்துக்களை தெரிவித்தார். மேலும் உரையாற்றிய இராஜாங்க அமைச்சர் நிமல் லான்சா,

2005க்கு முன்னர் ஒரு வருடத்தில் 200 கி.மீ கார்பெட் இடப்பட்டது.

யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வந்த பின் ஒவ்வொரு ஆண்டும் சுமார் 4,000 கி.மீ கார்பெட் செய்யப்பட்டன. நான்கு ஆண்டுகளில் 1,00,000கி.மீ கார்பெட் இடும் அபிவிருத்திக்கு ஒரு ஆண்டுக்கு 25,000 கி.மீ. கார்பெட் இடும் பாரியதொரு இலக்கு எம்மிடம் உள்ளது.

இந்த சவால்களை சமாளிக்க அரசியல் அதிகாரிகளுக்கும் அரச அதிகாரிகளுக்கும் பாரியதொரு பொறுப்புள்ளது. ஒப்பந்தக்காரர்கள் இந்த வீதிகளை உயர் தரத்தில் அமைக்க வேண்டும்.

25 மாவட்டங்களிலும் அனைத்து தொகுதிகளுக்கும் வீதி அபிவிருத்தி பணிகள் ஏற்கனவே தொடங்கப்பட்டுள்ளன. அதிவேக நெடுஞ்சாலை அமைப்புக்கு செல்லும் வீதிகளில் போக்குவரத்து நெரிசலைக் குறைப்பதற்கும், அந்த வீதிகளில் விரிவான அபிவிருத்தியை மேற்கொள்வதற்கும், அடையாளம் காணப்பட்ட இடங்களில் மேம்பாலங்கள் மற்றும் சுரங்கங்களை அமைப்பதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

நல்லாட்சி அரசாங்கம் ஒழுங்காக ஆரம்பித்து முடித்ததாக எந்த ஒரு அதிவேக நெடுஞ்சாலைகளும் இல்லை. மத்திய அதிவேக நெடுஞ்சாலையின் தொடக்கமும் இல்லை. முடிவுற்ற பகுதியும் இல்லை. மத்திய பகுதியும் 55 சதவிகிதம் மாத்திரமே கட்டப்பட்டுள்ளது.

மத்திய அதிவேக நெடுஞ்சாலையில் 10% கூட நல்லாட்சி அரசாங்கம் கட்டவில்லை. நாங்கள் மத்திய அதிவேக நெடுஞ்சாலையின் கட்டுமானத்தை 2024 க்குள் முடிப்போம்.

புத்தளம் வீதி சீரற்றுள்ளது. அதன்படி, தண்டுகம தொடக்கம் புத்தளம் வரையிலான பகுதியை கார்பெட் இடும் செயல்திட்டம் அடுத்த சில மாதங்களில் ஆரம்பிக்கப்படும்.

கொச்சிக்கடை பகுதியில் போக்குவரத்து நெரிசலைக் குறைக்க மாற்று வீதிகள் அமைக்கப்படும் என்றும் இராஜாங்க அமைச்சர் நிமல் லான்சா மேலும் தெரிவித்தார்.

முற்பணம் பெற்று வேலைகளை ஆரம்பிக்காத

# ஒப்பந்தக்காரர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை

**லோரன்ஸ் செல்வநாயகம்**



வீதி மற்றும் நெடுஞ்சாலைகள் நிர்மாணம் தொடர்பில் அரசாங்கத்திடமிருந்து முற்பணம் பெற்றுக்கொண்டு வேலைகளை ஆரம்பிக்காமல் தாமதப்படுத்தும் ஒப்பந்தக்காரர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்போவதாக நெடுஞ்சாலைகள் அபிவிருத்தி அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

அவ்வாறானவர்களில் ஒப்பந்தங்களை உடனடியாக செல்லுபடியற்றதாக்கும் வகையில் நடைமுறையிலுள்ள சட்டங்கள் தொடர்பில் ஆராய்ந்து தமக்கு அறிவிக்குமாறு அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ அமைச்சின் செயலாளருக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

டெண்டர் முறைகளுக்கிணங்க நெடுஞ்சாலைகள் மற்றும் வீதிகள் நிர்மாணம் தொடர்பில் ஒப்பந்தங்கள் மற்றும் முற்பணத்தையும் பெற்றுக்கொண்டு வேலைகளை ஆரம்பிப்பதில் தாமதம் காட்டும் ஒப்பந்தங்களையே செல்லுபடியற்றதாக்குவதற்கு உரிய சட்டங்கள் தொடர்பில் ஆராயுமாறு அமைச்சர் தெரிவித்துள்ளார்.

நாட்டில் பல்வேறு பிரதேசங்களிலும் அது தொடர்பில் அமைப்புகள் மற்றும் பொதுமக்களிடமிருந்து தமக்கு பெருமளவு முறைப்பாடுகள் கிடைத்திருப்பதாக அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

மேற்படி ஒப்பந்தங்கள் தாமதமாகும்போது அதற்கு அதிகமான நிதியை வழங்க வேண்டியுள்ளதுடன் மக்களின் நிதியே அதற்காக வீண் விரயமாகின்றது என்பதையும் அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அவ்வாறு மக்களின் நிதியை வீண் விரயம் செய்யும் ஒப்பந்தக்காரர்களுக்கு எதிராக பொது சொத்துக்கள் சட்டத்தின் கீழ் வழக்கு தொடர்வதற்கு உள்ள வாய்ப்புகள் தொடர்பில் ஆராயுமாறும் அமைச்சர் அமைச்சின் செயலாளருக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

2024ம் ஆண்டு நிறைவுக்குள் நாட்டில் ஒரு இலட்சம் கிலோமீற்றர் வீதிகளை நிர்மாணிக்கவும் அபிவிருத்தி செய்யவும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ எதிர்பார்த்துள்ளார். அது தொடர்பில் அமைச்சு உரிய நடவடிக்கை எடுக்கும் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (ஸ)


## விலைமனுக் கோரல்

### இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகம்

### கல்வி அமைச்சு

| | |
|---|---|
| **கடன் இல. மற்றும் தலைப்பு:** | 3698/ 3699-SRI: விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் மனிதவள அபிவிருத்தி செயற்றிட்டம் |
| **ஒப்பந்த இல: மற்றும் தலைப்பு** | STHRD/ RJ-E23: இலத்திரனியல் அளவீட்டு முறைமை - பொறியியல் தொழில்நுட்பவியல் இன் பெறுகை, இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகம். |
| **விலைமனு சமர்ப்பிப்பதற்கான இறுதி நேரம்:** | 2020.10.28 அன்று 14.00 மணிக்கு (உள்ளூர் நேரம்) |

1. கல்வி அமைச்சு கீழாக, விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல், மனித வள அபிவிருத்தி செயற்றிட்டத்தை (STHRD செயற்றிட்டம்) நடைமுறைப்படுத்தும் செலவினங்களுக்காக, ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து (ADB) இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசிற்கு, 145 மில்லியன் ஐக்கியமெரிக்க டொலரிற்குச் சமமான தொகையொன்று கிடைக்கப்பெற்றுள்ளதுடன், மேலேயுள்ள ஒப்பந்த பெயரின் கீழ்வரும் கொடுப்பனவுகளுக்காக, இந்த நிதியுதவியின் ஒரு பகுதியைப் பிரயோகிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. ADB இன் தகுதியுள்ள மூல (Source) நாடுகளிலிருந்தான விலைமனுதாரர்களுக்கு இந்த விலைமனுக் கோரல் திறக்கப்பட்டுள்ளது.

2. இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகத்தின், இலத்திரனியல் அளவீட்டு முறைமையின் ('பண்டங்கள்') பெறுகை - STHRD/RJ-E23 தொடர்பாக, தகுதியுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள், இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகத்தின் ('குறித்த பெறுகையாளர்') விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் மனித வள அபிவிருத்தி செயற்றிட்ட, பிரதி செயற்றிட்டப் பணிப்பாளர் சார்பாக, பல்கலைக்கழக பெறுகைக் குழுத் தலைவர் அழைக்கின்றார். இந்த பெறுகையானது, இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகம், இலத்திரனியல் அளவீட்டு முறைமை - பொறியியல் தொழில்நுட்பவியல் பெறுகையை உள்ளடக்கியதாகும். பூர்த்தி செய்யப்பட வேண்டியகாலம், ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட தினத்திலிருந்து 120 நாட்களாகும்.

3. இந்த விலைமனுவில் பங்குபற்றுவதற்கு பின்வரும் முக்கிய தகைமைகளை குறித்த விலைமனுதாரர் கொண்டிருத்தல் வேண்டும்.

**இந்த விலைமனுவில் பங்கு பற்றுவதற்கான முக்கிய தகைமைகள் பின்வருமாறு:-**

| பெறுகை செயற்பாடு தொகை இலக்கம் மற்றும் விபரக் குறிப்பு | பிரிவு 6 இல் விபரிக்கப்பட்டுள்ள வேலை வீச்சிற்கு நிகரான தண்மை மற்றும் சிக்கல் மிகு, ஒவ்வொன்றும் குறிப்பிடப்பட்டுள்ள பெறுமதிக்கான, ஆகக் குறைந்தது இரண்டு ஒப்பந்தங்களில் கடந்த மூன்று வருட காலப்பகுதியில் ஒரு பிரதான வழங்குநராக வெற்றிகரமாக பூர்த்தி செய்திருத்தல் வேண்டும். (இ. ரூ) | கடந்த மூன்று வருடகாலப் பகுதியில் பூர்த்தி செய்யப்பட்ட அல்லது நிறைவேற்றப்படும் நிலையிலுள்ள ஒப்பந்தங்களுக்காக, விலைமனுதாரரினால் கிடைக்கப் பெற்ற மொத்த கொடுப்பனவாக கணக்கிடப்பட்ட கீழேயுள்ள ஆகக் குறைந்த சராசரி வருடாந்த நிதிப்புரள்வு (இ.ரூ) |
|---|---|---|
| லொட் 1 இலத்திரனியல் Trainer Kits | 2.0 மில்லியன் | 5.00 மில்லியன் |
| லொட் 2 தொடர்பாடல் Trainer Kits | 14.30 மில்லியன் | 36.0 மில்லியன் |
| லொட் 3 Robotics Trainer Kits | 13.20 மில்லியன் | 33.0 மில்லியன் |

4. ADB இன் பண்டங்களின் பெறுகை ஒற்றைப் படிநிலை - ஒற்றை தபாலுறை நடைமுறைக்கமைவாக, திறந்த போட்டி ரீதியிலான விமைனுக் கோரல் நடாத்தப்படுவதுடன் விலைமனுக் கோரும் ஆவணத்தில் விபரிக்கப்பட்டுள்ளவாறாக தகுதியுள்ள நாடுகளிலிருந்தான அனைத்து விலைமனுதாரர்களுக்காகவும் அது திறக்கப்பட்டுள்ளது.

5. மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளவும் விலைமனு ஆவணங்களைப் பரீட்சித்துப் பார்க்கவும் விலைமனுதாரர்கள் கீழேயுள்ள அலுவலரைத் தொடர்பு கொள்ள வேண்டும்.

**சிரேஷ்ட பெறுகை அலுவலர்**
**செயற்றிட்ட அமுலாக்கல் பிரிவு**
**விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல்**
**மனிதவள அபிவிருத்தி செயற்றிட்டம்**
**இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகம்,**
**மிகிந்தல, இலங்கை.**
**ZIP குறியீடு: 50300**
**தொலைபேசி: 0714477898, தொலைநகல்: 025 2266228**
**மின்னஞ்சகல் sporj-sthrd@mohe.gov.lk**

6. ஆங்கில மொழியிலான விலைமனுக் கோரும் ஆவணங்களைப் பெற்றுக்கொள்வதற்கு, தகுதியுள்ள விலைமனுதாரர்கள், 'இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகம், பொறியியல் தொழில்நுட்பவியல் - இலத்திரனியல் அளவீட்டு முறைமையின் பெறுகை உள்ளடக்கப்பட்டுள்ள, பெறுகை: STHRD/ RJ-E23' தொடர்பாக, விலைமனுக்கோரும் ஆவணங்களை வேண்டி, மேலேயுள்ள முகவரிக்கு ஒரு எழுத்துருவிலான வேண்டுதலொன்றைச் சமர்ப்பிக்க வேண்டியதுடன் ஒரு மீளளிக்கப்படாத கட்டணமான 5,000/- இலங்கை ரூபாவை (ஐயாயிரம் இலங்கை ரூபா) ரொக்கப்பணமாக அல்லது இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழக, STHRD செயற்றிட்ட, பிரதி செயற்றிட்டப் பணிப்பாளர் பெயரில் வங்கி வரைவாக செலுத்தப்பட வோ அல்லது மிகிந்தல, இலங்கை வங்கியில் பராமரிக்கப்படும் கணக்கு இலக்கமான 83804379 இற்கு வைப்பிலிடவோ வேண்டும். குறித்த ஆவணங்கள் வார நாட்களில் 2020.10.27 அன்று 15.00 வரை வழங்கப்படும் தாமதமாகும் விலைமனு சமர்ப்பிப்பு அல்லது இழப்பு தொடர்பில் பொறுப்பேற்கப்பட மாட்டாது.

7. உங்கள் விலைமனுக்களை, விலைமனு ஆவணத்தில் விபரிக்கப்பட்டுள்ளவாறாக, விலைமனுப் பிணையொன்றுடன், 2020.10.28 அன்று 14.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கீழேயுள்ள முகவரிக்கு அனுப்பி வையுங்கள்

**பிரதி செயற்றிட்ட பணிப்பாளர்,**
**செயற்றிட்ட அமுலாக்கல் பிரிவு,**
**STHRD செயற்றிட்டம்,**
**பீடாதிபதி அலுவலகம், தொழில்நுட்பவியல் பீடம்,**
**இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகம்,**
**மிகிந்தல, இலங்கை.**

- பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்கள், மூலப் பிரதி மற்றும் நகல் பிரதியென இரண்டு பிரதிகளில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். மூலப் பிரதி மற்றும் நல் பிரதிகள் வெவ்வேறான தபாலுறைகளில் சேர்க்கப்பட்டு, முறையே மூலப் பிரதி மற்றும் நகல் பிரதியெனக் குறிக்கப்பட்டு முத்திரை பொறிக்கப்படல் வேண்டும். பின்னர் அவை மீண்டும் முத்திரை பொறிக்கப்பட்ட தபாலுறையொன்றினுள் சேர்க்கப்பட்டு உரித்தான ஒப்பந்த ID தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் குறிக்கப்படல் வேண்டும்.
- ஒரு முன்னோடி விலைமனுக் கூட்டம், 2020 ஒக்டோபர் 12ஆம் திகதி வெள்ளிக்கிழமை மு.ப. 10.00 மணிக்கு, இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழக, தொழில்நுட்பவியல் பீடத்தின் சபை அறையில் நடைபெறும்.

8. விலைமனுத்திறப்பில் கலந்து கொள்ள முன்வரும் விலைமனுதாரரின் பிரதிநிதிகள் முன்னிலையில், விலைமனு சமர்ப்பிப்பு இறுதி நேரத்திற்குப் பின்னர், உடனடியாக விலைமனுக்கள் திறக்கப்படும்.

**தலைவர்,**
**திணைக்களப் பெறுகைக் குழு,**
**இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகம்,**
**மிகிந்தல, இலங்கை.**
**ZIP குறியீடு 50300**
**திகதி: 2020.09.28**



**விற்பனைக் காட்சியகம் மற்றும் அலுவலக வளாகத்திற்கு பொருத்தமான கட்டிடமொன்று மாதாந்த வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளல்**

3000-6000 சதுர அடி அளவான சகல வசதிகளுடன் விற்பனைக் காட்சியகத்திற்கு மற்றும் அலுவலக வளாகத்திற்கும் பொருத்தமான கட்டிடமொன்று பிரதான வீதிக்கு முகப்பாக, கொழும்பு மற்றும் புறநகர் பகுதிகளிலிருந்து மாதாந்த வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்வதற்கான விலைமனுக்கள் கோரப்படுகின்றன.
செல்லுபடியாகும் காலம் 2020 ஒக்டோபர் 14ம் திகதியுடன் முடிவுறும். அடிப்படைவைப்பு, முற்பணம் கோராதவர்கள் விடயத்தில் முன்னுரிமை அளிக்கப்படும்.

**தலைவர்**
**வ/ப லங்கா சலுசல**
**இல. 93, ஜாவத்த வீதி**
**கொழும்பு - 05**

**தொடர்புகள்:**
**முகாமையாளர் - பெறுகை**
**தொலைபேசி இலக்கம்**
**0704348737, 071-4707975**



# சிறு விளம்பரம்

மோட்டார் வாகனங்கள்

108
நிஸான் கார் விற்பனைக்கு

NW HW-8568 Nissan GH-K11, 2000, car கூடிய விலைக் கோரிக்கைக்கு, வெலிபல் பினான் ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு03. தொ.பே. 0714542 958 , 0714515 236 058044

113
சுசூகி கார்கள் விற்பனைக்கு

CP CBG-3756 Suzuki spacia, 2017, car கூடிய விலைக் கோரிக்கைக்கு, வெலிபல் பினான் ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு03. தொ.பே. 0714542958 , 0714515236 058048

119
பஸ்கள், லொறிகள் விற்பனைக்கு

WP LN-9455 TATA LPT709, 2018, lorry கூடிய வி லைக் கோரிக்கைக்கு, வெலிபல் பி னான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொ ழும்பு 03. தொ. பே. 0714542958, 0714515236 058050

122
மோட்டார் சைக்கிள், திரீவீலர்கள் விற்பனைக்கு

SG BIB-6325 TVS apache, 2018, motor cy cle கூ டிய விலைக் கோரிக்கைக்கு, வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு03. தொ.பே. 0711 2 10 810 058046

வேலைவாய்ப்பு

325
தொழில்துறை பொது

ஸ்டார் ஏஜென்சிஸ் நிறுவனத்தின் கீழ் திருகோணமலை டோக்கியோ சீமென்ட் நிறுவனத்தில் இருந்து இலங்கை தீவு முழுவதும் சீமென்ட் போக்குவரத்துக்கு 10 வ்ஹீல்/ 06 வ்ஹீல் மற்றும் ஸ்கேமேல் லொ றி தேவை. 2020 செப்டெம்பர் 28, 29 மற்றும் 30 திக திக்குள் திருகோணமலை எங்கள் அலுவலகத்தில் புதிய லொறி பதிவு நடக்கும். கவர்ச்சிகரமான கொடுப்பனவுகள் கிடைக்கும். 077 3959397/ 077 1095507/ 07 7 095500. ஸ்டா ர் ஏஜென்சிஸ், எண். 055, மிட்சு சந்தி, கோ ப்பா ய் , சீனா துறைமுகம், திருகோணமலை. 057824



# வாகனங்கள் விற்பனைக்கு

| வாகன இல. | வகை | மாதிரி | வருடம் |
|---|---|---|---|
| **கார்** | | | |
| 018 -3XXX | NISSAN | B8AB13-SUNNY | 1992 |
| KB -1XXX | MARUTI | ALTO | 2005 |
| KL -6XXX | MERCEDES | E230 CDI BENZ | 2001 |
| **முச்சக்கர வண்டிகள்** | | | |
| AAK -5XXX | BAJAJ | RE 205 | 2013 |
| QA -6XXX | BAJAJ | AUTO RE 2 STROKE | 2005 |
| QC -3XXX | BAJAJ | AUTO RE 2 STROKE | 2005 |
| QL -6XXX | BAJAJ | AUTO AR4S | 2007 |
| QM -4XXX | BAJAJ | AUTO AR4S | 2007 |
| YB -4XXX | BAJAJ | AR4S-UG | 2010 |

வாகன பரிசீலித்தல்களுக்கு:
மேர்கன்டைல் இன்வெஸ்ட்மென்ட்ஸ் அண்ட் பினான்ஸ் பிஎல்சி
வாகன முற்றம் - இல.176, காலி வீதி, மஹரகம.
தொ.பேசி : 0112088505

வாகன பரிசீலித்தல்களுக்கான திகதிகள்

மெர்கன்டைல் இன்வெஸ்ட்மென்ட்ஸ் அண்ட் பினான்ஸ் பிஎல்சி

தலைமை அலுவலகம்
236, காலி வீதி, கொழும்பு - 03
தொ.பேசி 2343720 - 7 நீட்சி 210

Mercantile Investments and Finance PLC

தொடர்பு
ஜானக்க - 0711624559 / பாக்ய - 0702762065



**வழக்கறிஞர் அதிகாரத்தை இரத்து செய்தல்**

நான் வெலிவிதா விதானேலேஜின் சாம்சன் கல்யாணி பெரேரா வீரவர்தன (தேசிய அடையாள அட்டை எண் 195123003285 வைத்திருப்பவர்) எண் 509/சி/2, ராம்முத்துக்கால எஸ்டேட், கோனஹேனா சாலை, கடவத்தாவில் வசிக்கிறேன், குருநேகலா தபால் அறுவடை அலுவிஹேர் எஸ்டேட் எண் 148/18/1 (தேசிய அடையாள அட்டை எண் 691264890வி) திரு. செயலாளர் ரலலேஜ் அசெலா பண்டாரா அபேரத்னே, நோட்டரி பப்ளிக் சமரகூன் பண்டா சான்றளிக்கப்பட்ட எண் 1188 மற்றும் 2020/07/07வது தேதியிட்ட வழக்கறிஞரின் சிறப்பு அதிகாரம் இதன்மூலம் இரத்து செய்யப்பட்டு இரத்து செய்யப்படுகிறது. இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு மற்றும் பொதுமக்களுக்கு இதன்மூலம் தெரிவிக்கிறேன். நான், அட்டர்னி ஜெனரல், மேலும் கூறுகையில், அந்த வழக்கறிஞரின் அதிகாரத்தின் கீழ் கூறப்பட்ட அதிகாரத்தால் எடுக்கப்பட்ட எந்தவொரு நடவடிக்கைக்கும் நான் பொறுப்பல்ல.

**வெலிவிதா விதானேலேஜ் சாம்சன் கல்யாணி பெரேரா வீரவர்தன**



1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 09 ஆம் பிரிவின் கீழ் விற்பனை அறிவித்தல்

**நெஷனல் டிவலொப்மன்ட் பேன்க் பீ.எல்.சீ - நிட்டம்புவை கிளை**

**விலை மதிப்புமிக்கச் சொத்தினை பகிரங்க ஏலத்தில் விற்பனை**

[illegible]

நெஷனல் டிவலொப்மன்ட் பேன்க் பீ.எல்.சீ யினால் எமக்களிக்கப்பட்ட அதிகாரத்தின்படி,
2020 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 20 ஆம் திகதி செவ்வாய் மு.ப.10.30 மணிக்கு
எம்மால் ஸ்தலத்தில் பகிரங்க ஏலவிற்பனைக்கு விடப்படும்.

**சொத்துக்கான பிரவேசம் :**

[illegible]

**கொடுப்பனவு செய்யும் முறை: -**

ஏலவிற்பனையில் வெற்றிபெற்ற கொள்வனவாளர், விற்பனையின் முடிவில் பின்வரும் தொகைகளை ரொக்கப் பணமாகச் செலுத்த வேண்டும்.

(1) கொள்வனவு செய்யப்பட்ட விலையின் 10% (பத்து சதவீதம்)
(2) உள்ளூராட்சி அதிகார சபைக்குச் செலுத்தப்பட வேண்டிய விற்பனை வரி 1% (ஒரு சதவீதம்)
(3) விற்பனை விலையில் ஏலதாரர் தரகு 2.5% (இரண்டரை சதவீதம்) மற்றும் அவற்றுக்காக விதிக்கப்படும் சகல வரிகளும்)
(4) எழுதுவினைஞர் மற்றும் ஏலம் கூறுவோர் கட்டணம் 500 ரூபா
(5) விற்பனை செலவுகள் மற்றும் பிற கட்டணங்கள் (இருப்பின்)
(6) விற்பனை நிபந்தனைகளுக்கான முத்திரைக் கட்டணம்

கொள்முதல் விலையின் மிகுதி 90% விற்பனையின் பின்னர் 30 நாட்களுக்குள் [illegible]

சிரேஷ்ட முகாமையாளர் - அறவிடுதல், தேசிய அபிவிருத்தி வங்கி பீ.எல்.சீ இலக்கம்: 40, நவம் மாவத்தை, கொழும்பு - 02
தொலைபேசி. 011-2448448 தொலைநகல். 011-2440262

**டல்லஸ் கெலார்ட்**
அங்கீகாரம் பெற்ற ஏலவிற்பனையாளர்
இல .146/3, காலிஹோ கார்டன்ஸ், கீழ் துடுகெமுனு தெரு, கொஹுவல.
தொ.பே: 11 4367467, 11 4367111 | aucslk@gmail.com

# விலைமனு அழைப்பு

## பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம் - கம்பஹா

## சமைத்த உணவை வழங்கல் – 2021

2021 வருடத்திற்கு மேல் மாகாணம், கம்பஹா சுகாதார சேவைகள் பணிப்பாளர் பிரிவில், கீழே குறிப்பிடப்பட்டுள்ள மருத்துவமனைகளில் சமைத்த உணவை வழங்குவதற்காக மேல் மாகாணத்திலுள்ள வதியும் ஆட்களிடமிருந்தும் பதிவு செய்யப்பட்டுள்ள வர்த்தக நிறுவனங்களிலிருந்தும் 2020.09.29 முதல் 2020.10.20 அன்று மு. ப. 10.30 வரை விலை மனுப் பத்திரங்கள் பொறுப்பேற்கப்படும்.

- ❖ மீளளிக்கப்படாத விலைமனுப் படிவக் கட்டணமான ரூ. 1500.00 மற்றும் உரித்தான விலைமனு வைப்புத் தொகையைச் செலுத்தி தேசிய அடையாள அட்டை, வதிவிடம் தொடர்பான கிராம சேவகர் சான்றிதழ் மற்றும் சொத்துச் சான்றிதழைச் சமர்ப்பித்து சிங்கள மொழியிலான விலைமனுப் படிவம் மற்றும் குறித்த விபரங்களை கம்பஹா சுகாதார சேவை பணிப்பாளர் அலுவலகத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.
- ❖ விலைமனுப் படிவங்கள் வழங்கப்படுவது 2020.09.29 முதல் 2020.10.19 அன்று பி. ப. 2.00 மணி வரையாகும்.
- ❖ அனைத்து விலைமனுக்களும் இரண்டு பிரதிகளாக வெவ்வேறான தபாலுறைகளில் சேர்க்கப்பட்டு முத்திரை பொறிக்கப்பட்டு 2020.10.20 அன்று மு. ப. 10.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு தலைவர், பெறுகைக் குழு, பிரதேச சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம், கச்சேரி தொகுதி, கம்பஹா என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பப்படவோ அல்லது இந்த அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள விலைமனுப் பெட்டிக்குச் சேர்க்கப்படவோ வேண்டும்.
- ❖ முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுப் பத்திரங்கள் அனுப்பப்படும் தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் 'சமைத்த உணவை வழங்கல் 2021.................. மருத்துவமனை' எனக் குறிப்பிட வேண்டும்.

| மருத்துவமனையின் பெயர் | மீளளிக்கப்படும் விலைமனு வைப்புத் தொகை (ரூ.) | சொத்துச் சான்றிதழின் பெறுமதி |
|---|---|---|
| மினுவங்கொடை மாவட்ட மருத்துவமனை | 50,000.00 | 100,000.00 |
| தொம்பே மாவட்ட மருத்துவமனை | 50,000.00 | 75,000.0 |
| அக்கரகம பெரிபரல் பிரிவு | 30,000.00 | 25,000.00 |
| உடுப்பில கிராமிய வைத்தியசாலை | 10,000.00 | 25,000.00 |
| ஜாஎல கிராமிய வைத்தியசாலை | 50,000.00 | 25.000.00 |
| பியகம கிராமிய வைத்தியசாலை | 25,000.00 | 25,000.00 |
| பமுனுகம பெரிபரல் பிரிவு | 25,000.00 | 25,000.00 |
| ரதாவான பெரிபரல் பிரிவு | 40,000.00 | 25,000.00 |
| மல்வத்துகிரி பிட்டிய பிரதேச மருத்துவமனை | 15,000.00 | 25,000.00 |

விலைமனு திறக்கப்படுவது 2020.10.20 அன்று மு.ப. 10.30 மணிக்கு சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தில் மேற்கொள்ளப்படும். விலைமனு கையளிக்கப்படுவது தொடர்பாக பெறுகைக் குழுவின் தீர்மானமே இறுதித் தீர்மானமாக அமையும்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம்,**
**கம்பஹா.**
**தொ. பே. 033-2222874**

### அறிவித்தல்

2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டம் 9(2) ஆம் பிரிவின் கீழ், பின்வரும் கம்பனியின் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

கம்பனியின் முன்னைய பெயர்: **வீ எஸ் வீ ரினீவபல்ஸ் லங்கா (பிவீடி) எல்டிடீ**
பதிவிலக்கம்: பிவீ 00212454
பெயர் மாற்றப்பட்ட திகதி: 2020.06.30
பதிவு முகவரி: **இல. 44, ஜம்புகஸ்முல்ல வீதி, நுகேகொடை**
கம்பனியின் புதிய பெயர்: **ஹிரு சோலர் ரினீவபல்ஸ் (பிவீடீ) எல்டிடீ**

**ஏடப்ளியு மெனேஜ்மண்ட் கன்சல்டன்ட்ஸ் (பிவீடி) எல்டிடீ**
**கம்பனி செயலாளர்கள்**
**தொ.பே. 0114515361**

### அறிவித்தல்

2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டம் 9(1)ஆம் பிரிவின் கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது.

**அ.** கம்பனியின் பெயர்: **மாரா வேச்சுவெல் படியுகேஷன் சென்டர் (பிவீடி) எல்டிடீ**
பதிவிலக்கம்: பிவீ 00223331
கூட்டிணைக்கப்பட்ட திகதி: 2020.06.24
பதிவு முகவரி: **இல. 15, திம்பிரிகஸ்யாய பிரதேசம், கொழும்பு 05.**

**ஆ.** கம்பனியின் பெயர்: **நோவா பசிபிக் இன்டர்நெஷனல் (பிவீடி) எல்டிடீ**
பதிவிலக்கம்: பிவீ 00215975
கூட்டிணைக்கப்பட்ட திகதி: 2020.09.30
பதிவு முகவரி: **55/04, ரன்முத்துகல, கிரில்லவள, கடவத்தை**

**இ.** கம்பனியின் பெயர்: **ஸ்விவெல் டெக்னொலொஜி (பிவீடி) எல்டிடீ**
பதிவிலக்கம்: பிவீ 00226148
கூட்டிணைக்கப்பட்ட திகதி: 2020.0819
பதிவு முகவரி: **இல. 110/14, ஜுபிலி மாவத்தை, மிரிஹாண, நுகேகொடை.**

**ஈ.** கம்பனியின் பெயர்: **நேட்டிவ் பவர் (பிவீடி) எல்டிடீ**
பதிவிலக்கம்: பிவீ 00225458
கூட்டிணைக்கப்பட்ட திகதி: 2020.08.03
பதிவு முகவரி: **இல. 46, ஸ்ட்ரெட்ஃ போர்ட் அவின்யு, கொழும்பு 06.**

**உ.** கம்பனியின் பெயர்: **மார் கோர்ணி 1991 (பிவீடி) எல்டிடீ**
பதிவிலக்கம்: பிவீ 00226899
கூட்டிணைக்கப்பட்ட திகதி: 2020.09.04
பதிவு முகவரி: **இல. 225/2, கிராமோதய மாவத்தை, அலுபோமுல்ல, பாணந்துறை.**

**ஊ.** கம்பனியின் பெயர்: **குளொபல் ஃபியூச்சர் வேல்ஸ் (பிவீடி) எல்டிடீ**
பதிவிலக்கம்: பிவீ 00218509
கூட்டிணைக்கப்பட்ட திகதி: 2019.12.18
பதிவு முகவரி: **16, 42ஆம் லேன், வெள்ளவத்தை, கொழும்பு 06.**

**கம்பனி செயலாளர்கள்**

# விலைமனுக் கோரும் அறிவித்தல்

## பெல்மடுல்ல பிரதேச சபை

## 2021ஆம் வருடத்திற்கு சபைக்குரிய சொத்துக்களை குத்தகைக்கு விடுவதற்காக விலைமனுக் கோரல்

பெல்மடுல்ல பிரதேச சபைக்குரிய வாரச்சந்தை மற்றும் பொதுச்சந்தை மீன் கடையை 2021.01.01 முதல் 2021.12.31 வரை குத்தகைக்கு விடுவதற்காக முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் 2020.09.29 அன்று மு.ப. 10.00 மணி முதல் 2020.10.19 அன்று மு.ப. 10.30 மணி வரை என்னால் பொறுப்பேற்கப்படும்.

02. 2020.09.29 அன்று மு.ப. 10.00 முதல் 2020.10.19 அன்று மு.ப. 10.00 வரையான வாரத்தின் வேலை நாட்களில் அலுவலக நேரங்களில் பெல்மடுல்ல பிரதேச சபை பிரதான அலுவலகத்திலிருந்து இந்த அனைத்து சொத்துக்கள் தொடர்பாகவும் விலைமனுப் படிவங்கள் வழங்கப்படும்.

விலைமனுப் படிவங்கள் இரண்டு பிரதிகளில் வழங்கப்படுவதுடன், அந்த விலைமனுப் படிவங்கள் பூரணப்படுத்தப்பட்டு இரண்டு தபாலுறைகளில் சேர்க்கப்பட்டு இடது பக்க மேல் மூலையில் விலைமனுவின் பெயர் குறிப்பிடப்பட்டு "செயலாளர், பெல்மடுல்ல பிரதேச சபை, ரில்ஹேன, பெல்மடுல்ல" என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் 2020.10.19 அன்று மு.ப. 10.30 மணிக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

விலைமனுக்களை நேரில் வந்து ஒப்படைக்க விரும்புபவர்கள் அந்த இரண்டு பிரதிகளையும் மேலேயுள்ளவாறு தயாரித்து பிரதான அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள விலைமனுப் பெட்டிக்குச் சேர்த்தல் வேண்டும்.

03. **விலைமனு திறக்கப்படல்**

2020.10.19 அன்று மு.ப. 10.30 மணிக்கு விலைமனுப் பெட்டி முத்திரை பொறிக்கப்படுவதுடன், குறித்த நேரத்திற்கு பின்னர் சமர்ப்பிக்கப்படும் மற்றும் பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். 2020.10.19 அன்று மு.ப. 11.00 மணிக்கு பெல்மடுல்ல பிரதேச சபை பிரதான அலுவலகத்தில் விலைமனுச் சபை முன்னிலையில் விலைமனுக்கள் திறக்கப்படும். மேற்படி நேரத்தில் விலைமனுக்களைச் சமர்ப்பித்தவர்களுக்கு அல்லது எழுத்து மூலம் அதிகாரம் வழங்கப்பட்ட அவரின் பிரதிநிதியொருவருக்கு அதில் கலந்து கொள்ளலாம். மேலும், ஒரு விலைமனுவை அல்லது அனைத்து விலைமனுக்களையுமே இரத்துச் செய்யும் அதிகாரம் பெல்மடுல்ல பிரதேச சபைக்குரியதாகும்.

04. மேலதிக விபரங்களை அலுவலக நேரங்களில் அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.
**தொலைபேசி இலக்கம்: 045-2274375.**

**அட்டவணை இல. 01**

| தொடர் இலக்கம் | அமைவிடம் | வியாபாரத்தின் தன்மை | படிவக் கட்டணம் | விலைமனுப் பிணைத் தொகை | வருடாந்த ஆகக் குறைந்த விலைமனு |
|---|---|---|---|---|---|
| 01 | பெல்மடுல்ல வாரச்சந்தை | வாரச்சந்தை | ரூ. 3000.00 | ரூ. 100000.00 | ரூ. 1333200.00 |
| 02 | பெல்மடுல்ல பொதுச்சந்தை | மீன் கடை (14ஆம் இலக்கக் கடை) | ரூ. 3000.00 | ரூ. 100000.00 | ரூ. 1277100.00 |
| 03 | பெல்மடுல்ல வாரச்சந்தை வாகனத் தரிப்பிடம் | வாகனத் தரிப்பிடம் (பாடசாலை பஸ் வண்டி மற்றும் பாடசாலை வேன் வண்டி தவிர்ந்தது) | ரூ. 1000.00 | ரூ. 3000.00 | ரூ. 25000.00 |

**எச்.ஏ. லக்ஷ்மன் பிரேமரத்ன**
**தலைவர்,**
**பிரதேச சபை,**
**பெமல்மடுல்ல.**

# இலங்கை வங்கி

## ஏல விலை கோரல்

கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள பரிசுப் பொருட்களை விநியோகிப்பதற்கு அங்கிகரிக்கப்பட்ட உற்பத்தியாளர்களிடமிருந்து / விநியோகஸ்தர்கள் அல்லது அங்கீகாரம் பெற்ற உள்நாட்டு முகவர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட ஏலவிலை கூறல்கள் இத்தால் கோரப்படுகின்றன.

| | |
|---|---|
| கேள்விப்பத்திர இல | P/PROC/2020/160 |
| பண்டம் / சேவைகள் விபரம் | இலங்கை வங்கிக்கான பரிசுப் பொருட்களைக் கொள்வனவு செய்தல் |
| **விபரம்** | **தொகை** |
| 01 - பாடசாலைப் பைகள்<br>02 - கணிதக் கருவிப் பெட்டி<br>03 - பயிற்சிக் கொப்பிக் கட்டுக்கள் | 16,000<br>16,000<br>16,000 |
| மீளளிக்கப்படாத கேள்விப்பத்திரக் கட்டணம் | ரூபா. 5,400/= (VAT அடங்கலாக) |
| கேள்விப்பத்திர ஆவணங்களை விநியோகிக்கும் கடைசித்திகதியும் நேரமும் | 2020.10.12 1500 மணி வரை |
| கேள்விப்பத்திரம் முடிவடையும் திகதியும் நேரமும் | 2020.10.13 1000 மணி வரை |
| முன்கூட்டிய விலை கூறல் கூட்டம் நடைபெறும் திகதியும் நேரமும் இடமும் | 2020.10.06 1100 மணிக்கு இலங்கை வங்கி தலைமையகம் 14ம் தளம் |

1. கேள்விப்பத்திர ஆவணங்களை, இலங்கை வங்கியின் தலைமைக் காரியாலயத்தின் 14ம் தளத்திலுள்ள, சொத்துக்கள் மற்றும் சேகரிப்புப் பகுதியில், கடமை தினங்களில் 0900 மணி முதல் 1500 மணி வரை எழுத்துமூலக் கோரிக்கையுடன் ரூபா. 5,400/- [ரூ. 5,000/- + ரூ. 400/- (VAT)] பெறுமதியான மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்துவதன் மூலம் பெற்றுக் கொள்ளலாம்.
2. பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப்பத்திர விண்ணப்பங்களை இலங்கை வங்கியினால் ஏற்றுக் கொள்ளக் கூடிய வர்த்தக வங்கி ஒன்றிலிருந்து (இலங்கை வங்கி அல்லாத) 2021.02.09 வரை செல்லுபடியானதும் மேற்குறிப்பிட்ட வகையில் கேள்விக்கு ஏற்ற பெறுமதியில் பெறப்பட்டதுமான வங்கி உத்தரவாதம் / ஏல விலைமுறியை இணைத்துச் சமர்ப்பித்தல் வேண்டும். ஏல விலைமுறிக்குப் பதிலாக, பணவைப்புகள், வங்கிக் கொடுப்பனவுக்கட்டளை, வங்கி உடனுண்டியல் என்பனவும் ஏற்றுக் கொள்ளப்படும். (சொந்தக் காசோலைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.)
3. கேள்விப் பத்திரங்கள் குறித்த முடிவுத் திகதியன்று 1000 மணிக்குப் பின் உடனடியாகத் திறக்கப்படும். 1000 மணிக்குப் பின்னர் பெறப்படும் கேள்விப் பத்திரங்கள் நிராகரிக்கப்படுவதோடு, திறக்கப்படாமலே திருப்பி அனுப்பி வைக்கப்படும்.
4. இலங்கை வங்கி, எவ்விதக் காரணங்களையும் குறிப்பிடாது எந்தவொரு அல்லது எல்லாக் கேள்விப்பத்திரங்களையும் நிராகரிக்கும் அல்லது கேள்விப்பத்திரமொன்றின் ஒரு பகுதியை மட்டும் ஏற்றுக் கொள்ளும் உரிமையை தன்னகத்தே கொண்டுள்ளது.
5. மேலதிக விபரங்களை சொத்துக்களும் சேகரிப்பும் பகுதி பிரதான முகாமையாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்

இலங்கை வங்கி
BOC
தேசத்தின் வங்கியாளர்

பிரதான முகாமையாளர்
சொத்துக்களும் சேகரிப்பும் பகுதி
14ம் தளம், இலங்கை வங்கி,
"இலங்கை வங்கிச் சதுக்கம்",
இல.01, இலங்கை வங்கி மாவத்தை,
கொழும்பு - 01.
தொலைபேசி இல. 2544310, 2204265

### இலங்கை சனநாயக சோஷலிச குடியரசு

### சுற்றுலா அமைச்சு

## தேசிய தாவரவியல் பூங்கா திணைக்களம்

# கேள்வி கோரல் அறிவித்தல்

## 'சுவஹஸ் மல்' சங்கத்திற்காக நிழல்வலை, UV பதப்படுத்தப்பட்ட, பொலித்தீன், பிளாஸ்டிக் கூடைகள் மற்றும் பொலித்தீன் பெக்கற்களை கொள்வனவு செய்தல் - 2020

தேசிய தாவரவியற் பூங்காத் திணைக்களத்தின் பாரிய அளவிலான பெறுகைக் குழுவின் தலைவரால் மேலே காணப்படும் வழங்கல்களுக்காக தகைமையும் தகுதியுமுள்ள கேள்விதாரர்களிடமிருந்து பொறியிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

01. ஒவ்வொரு உருப்படி சம்பந்தமாகவும் வேறு வேறாக கேள்வி மாதிரிகளை தயாரிக்கப்பட்டுள்ளதுடன், கேள்விதாரர்களின் விருப்பத்திற்கு அமைவாக ஒரு உருப்படி, இரண்டு உருப்படிகள் அல்லது சகலதுக்கும் கேள்விகளை சமர்ப்பிக்கலாம் அங்கு ஒவ்வொரு கேள்விப் பத்திரமும் வேறு வேறு உறைகளில் இட்டு சமர்ப்பித்தல் வேண்டும்.

02. கேள்வி கோரல் தேசிய கேள்வி கோரல் கொள்கைக்கு அமைவாக இடம்பெறும் தேர்ந்தெடுக்கப்படும் கேள்விதாரர்களுக்கு அது பற்றி அறிவித்ததன் பின்னர், அறிவிக்கும் கால எல்லைக்குள் சகல பொருட்களினதும் குறித்த அளவை பேராதனை தேசிய பூங்காத் திணைக்களத்தின் பூச் செய்கைப் பிரிவிற்கு கொண்டு வந்து ஒப்படைத்தல் வேண்டும். அதற்காக முற்பணம் வழங்கப்பட மாட்டாது.

03. இதற்காக ஆர்வம் காட்டுகின்ற கேள்விதாரர்களுக்கு கேள்வி நிபந்தனைகள், மாதிரிகள் மற்றும் கேள்வி விண்ணப்பங்களை பேராதனையில் அமைந்துள்ள தேசிய தாவரவியற் பூங்காத் திணைக்களத்தின் தலைமையகத்தில் 2020.09.29 முதல் 2020.10.20 வரை அலுவலக நேரங்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை பெற்றுக்கொள்ளலாம். இதற்காக மீளளிக்கப்படாத ரூ. 2000.00 கட்டணத்தை ஒரு உருப்படிக்காக அறவிடப்படும் அதனடிப்படையில் சகல உருப்படிகள் சார்பாகவும் ரூ. 10,000.00 தொகை அறவிடப்படும் ஒவ்வொரு உருப்படிக்கும் ரூ. 10,000.00 வீதம் கேள்விப் பிணையொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும். நான்கு உருப்படிகளுக்கும் எனில் கட்டணம் ரூ. 40,000.00 ஆகும் அக் கேள்விப் பிணையை அரச அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியில் சமர்ப்பித்தல் வேண்டும். அத்துடன் அவ்வாறு இல்லையெனில் அக் கேள்விப் பிணையை காசாக பேராதனை தேசிய தாவரவியற் பூங்காத் திணைக்களத்தில் வைப்புச் செய்யலாம் கேள்வி ஆவணங்களுடன் கேள்விப் பிணையை சமர்ப்பித்திராத கேள்விப் பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.

04. பூர்த்தி செய்யப்பட்ட கேள்வி விண்ணப்பங்கள் 2020.10.21 மு.ப. 10.30 இற்கு முன்பு, தலைவர், திணைக்கள பாரிய அளவிலான பெறுகைக் குழு தேசிய தாவரவியல் பூங்காத் திணைக்களம். பேராதனை என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். அவ்வாறு இல்லையெனில் கையோடு கொண்டு வந்து இத் திணைக்களத்தின் பிரதம கணக்காளரின் அறையில் வைக்கப்பட்டுள்ள பாரிய அளவிலான பெறுகைப் பெட்டியில் உள்ளிடலாம். கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்தவுடன் கேள்விதாரர்கள் அல்லது அவர்களது பிரதிநிதிகள் முன்னிலையில் கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும். குறித்த நேரத்தின் பின்னர் கிடைக்கும் கேள்விப் பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.

05. கேள்விப் பத்திரங்கள் உள்ளிட்டு அனுப்பப்படும் உறையின் இடது பக்க மேல் மூலையில் தாம் சமர்ப்பிக்கும் கேள்விப் பத்திரம் எது என்பதை குறிப்பிடுதல் வேண்டும். (உ+ம் நிழல் வலைக்கான கேள்விப் பத்திரங்களை சமர்ப்பிக்கும் கேள்விதாரர்கள் பூச்செய்கை பிரிவிற்கு நிழல்வலை கொள்வனவு செய்தல் என்ற பொறித்தலுக்கான கேள்விப் பத்திரங்களை சமர்ப்பிக்கும் கேள்விதாரர்கள் 'பூச் செய்கை பிரிவிற்கு பொலித்தீன் கொள்வனவு செய்தல் என்ற விதத்தில்'

06. தேர்ந்தெடுக்கப்படும் கேள்விதாரர்களால் பொருட்களின் முழுப்பெறுமதியில் 5% இற்கு குறையாத செயற்பாட்டு பிணை முறியினை 07 நாட்களுக்குள் வழங்குவதற்கு தயாராக இருத்தல் வேண்டும். அது அரச அங்கீகாரம் பெற்ற வர்த்தக வங்கியிலிருந்து பெற்றுக்கொண்ட பிணையாக இருத்தல் வேண்டும்.

07. இது பற்றிய மேலதிக விபரங்கள் பேராதனை அரச தாவரவியற் பூங்காவில் அமைந்துள்ள பூச்செய்கை ஆய்வுப் பிரிவின் தொலைபேசி இல. 081-2388307 மூலம் உதவிப் பணிப்பாளர் (பூச்செய்கை)ஐ அழைத்து அல்லது இல. 081-2388293 தேசிய தாவரவியல் பூங்கா திணைக்களத்தின் பிரதம கணக்காளரை அழைத்துப் பெற்றுக்கொள்ளலாம்.

**தலைவர்**
**திணைக்கள பாரிய அளவிலான பெறுகைக் குழு**
**தேசிய தாவரவியல் பூங்காத் திணைக்களம்,**
**பேராதனை.**
**2020.09.24**

OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www.observerjobs.lk

# எதிர்க்கட்சி எம்.பிக்களை அரசாங்கத்தில் சேர்க்கும் எண்ணம் இப்போதைக்கு இல்லை

(அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்)

அரசியலமைப்பின் 20 ஆவது திருத்தத்திற்கு எதிர்க் கட்சி உறுப்பினர்கள் சிலர் ஆதரவு வழங்கவுள்ளதாகவும் இவ்வாறு ஆதரவளிப்போரை அரசாங்கத்தில் இணைத்துக் கொள்ளும் சாத்தியம் தற்போதைக்கு இல்லையெனவும் இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்தார்.

அநுராதபுரத்தில் அண்மையில் நடைபெற்ற நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். இங்கு பேசிய அவர்:

இருபதாவது திருத்தத்தை நிறைவேற்றும் பலம் அரசாங்கத்திற்கு உள்ளது.இருந்தபோதும் எதிர்க்கட்சியிலுள்ள சிலரும் இதனை ஆதரிக்கவுள்ளனர்.இவ்வாறு ஆதரிப்போரை அரசாங்கத்தில் உடனடியாக இணைத்துக் கொள்ளும் எண்ணம் எங்களுக்கு இல்லை.

இல்லாத காரணங்களை கூறிக் கொண்டு எதிர் தரப்பின் 20 ஆவது திருத்தத்தை எதிர்க்கின்றனர். நல்லாட்சி அரசாங்கத்தில் பாராளுமன்ற ஜனநாயகம், ஆணைக் குழுக்களின் சுயாதீனத்தன்மை எனக் கூறியவாறே, கடந்த நல்லாட்சி அரசாங்கம் அரசியல் பழிவாங்கலுக்காக 19 ஆவது திருத்தத்தை கொண்டு வந்தது. நடைமுறையிலுள்ள தேர்தல் முறையில் மாற்றம் செய்யப்பட வேண்டும் என்பதுடன் 19 ஆவது திருத்தத்தில் காணப்பட்ட குறைபாடுகளையும் அப்போது சுட்டிக் காட்டினோம். திருத்ததில் காணப்படும் குறைபாடுகளை திருத்தி, அரசியலமைப்பின் 20 ஆவது திருத்தத்தை ஒரு வார காலத்தினுள் கொண்டு வருவதாக பாராளுமன்ற உறுப்பினர் மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாக பதவி வகித்த போது வாக்குறுதி வழங்கினார். 20 ஆவது அரசியலமைப்பு திருத்தம் தொடர்பில் வழங்கிய வாக்குறுதியை முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஒரு வாரத்தினுள் அல்ல ஐந்து வருடம் பதவி வகித்த போதும் நிறைவேற்றவில்லை. ராஜபக்ஷக்களை இலக்காக கொண்டே 19 ஆவது திருத்தம் கொண்டுவரப்பட்டது.ஆனால் அது நல்லாட்சிக்கே சாபக்கேடானது. இதனால் அதிகார முரன்பாடுகள் ஏற்பட்டன.மேலும் நாட்டு மக்களும் இதனால் பல தீய விளைவுகளை அனுபவிக்க நேர்ந்ததாகவும் அவர் குறிப்பிட்டார்.

# சமூக,சமயம் பாராது விசேட தேவை உடையோருக்கு சக்கர நாற்காலிகள்

( மினுவாங்கொடை நிருபர் )

மக்களின் இயலாத் தன்மை, வறுமையைக் கருத்திற்கொண்டு,வை.எம்.எம்.ஏ. பல வழிகளிலும் இன, மத, மொழி பேதமின்றி உதவி உபகாரங்களைப் புரிந்து வருவதாக

அகில இலங்கை வை.எம்.எம்.ஏ. பேரவையின் தேசியத் தலைவர் சஹீத் எம். ரிஸ்மி தெரிவித்தார்.ஆயிரம் சக்கரநாற்காலிகள் வழங்கும் வைபவத்திலே அவர்,இவ்வாறு குறிப்பிட்டார். இங்கு பேசிய அவர் தெரிவித்ததாவது:

சகல சமூகத்தவர்களுக்கும் தேவையறிந்து உடனடி நிவாரணங்களை வழங்குவதில் எமது பேரவை கரிசனை காட்டி வருகிறது. கொவிட் 19 (கொரோனா) தொற்று ஏற்பட்டு மக்கள் அவதியுற்ற கால கட்டத்தில் கூட, எமது பேரவைக்கு கிடைத்த உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு உதவிகளின் ஊடாக, பாரிய சேவைகளைச் செய்தோம். இன்றும்கூட வை.எம்.எம்.ஏ. பேரவை மிகச்சிறப்பான நன்மை தரும் கைங்கரியங்களைத் தொடர்ந்து செய்து வருகிறது.

நாடெங்கும் உள்ள விசேட தேவையுடையோரைத் தேடி, அவர்களுக்காக சக்கர நாற்காலிகளை இலவசமாக வழங்கியுள்ளோம். இந்த நல்ல பணியை இறைவன் அருளால் ஆரம்பித்துள்ளோம்.




சகல சமூகங்களிலும் உள்ள விசேட தேவையுடையோரை அடையாளம் கண்டு,

இன, மத, மொழி பேதமின்றி சேவையாற்று வது, மகிழ்ச்சியளிக்கிறது.வை.எம்.எம்.ஏ. கிளைகள் இவற்றைச் செய்து வருகின்றன.

இந்நிகழ்வில், தேசிய பொதுச் செயலாளர் சட்டத்தரணி சாபிர் சவாத், தேசிய பொருளாளர் இஹ்சான் ஹமீத் உள்ளிட்ட மாவட்டப் பணிப்பாளர்கள் பலரும் கலந்து சிறப்பித்தனர்.



எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச அனுராதபுரம் மொஹிதீன் ஜும்ஆப் பெரிய பள்ளிவாசலுக்கு நேற்று முன்தினம் 27 விஜயம் செய்தார்.அங்கு பள்ளிவாசல் நிர்வாகிகள் அவரை அழைத்துச் செல்வதைப் படத்தில் காணலாம்.
(படம் : அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்)

## சமாதான நீதவான்

அட்டாளைசேனை குறூப் நிருபர்



வெலிகமயைப் பிறப்பிடமாகவும் எஹலியகொடை யை வசிப்பிடமாகவும் கொண்ட அல்ஹாஜ் மொஹமட் ஸம்சுதீன் மொஹமட் பாயிஸ் மரிக்கார், அகில இலங்கை சமாதான நீதவானாக இரத்தினபுரி மேலதிக நீதவான் மகேஷா டீ சில்வா முன்னிலையில் அண்மையில் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

மேற்படி கேள்விப் பிணை முறியை விஜய குமாரதுங்க ஞாபகார்த்த வைத்தியசாலையின் பெயரில் இயைபுடைய பெறுமதிக்கான பணத்தை வைப்புச் செய்து பெற்றுக்கொண்ட 172 பற்றுச்சீட்டின் மூலப் பிரதி அல்லது இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட நிதி நிறுவனம் / காப்புறுதி நிறுவனத்தில் சீதுவ முகவரியிலுள்ள விஜயகுமாரதுங்க ஞாபகார்த்த வைத்தியசாலையின் பெயருக்கு எழுதப்பட்ட கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாள் முதல் 148 நாள் காலத்துக்காக பெற்றுக்கொள்ளப்பட்ட கேள்விப் பிணை முறி மூலம் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

**கேள்விதாரர்களுக்கான தகைமைகள்:**

01. சுத்திகரித்தல் மற்றும் சமைக்காத உணவுப் பொருட்கள் வழங்கும் சேவை ஒப்பந்ததாரர்கள் இலங்கை வியாபாரப் பெயர் பதிவுச் சட்டத்தின் கீழ் குறித்த சேவை வழங்கும் நிறுவனமாக இதற்கு இரண்டு வருடங்களுக்கு முன் பதிவு செய்து கொள்ளப்பட்ட நிறுவனமாக இருத்தல் வேண்டும். (பதிவுச் சான்றிதழ் சமர்ப்பித்தல் வேண்டும்.)

**02. சொத்துச் சான்றிதழ்**

- அழுக்குத் துணிகளை சலவை செய்தல் தொடர்பில் சொத்துச் சான்றிதழ் 50,000.00 ரூபாவும்,
- சுத்திகரித்தல், சமைக்காத உணவு வழங்கும் ஒப்பந்தம் 100,000.00 ரூபாவாகும்.

இது 170 பொது மாதிரிப் படிவத்தின் பிரகாரம் அறிவித்தல் பிரசுரமாகி 2 மாதங்களுக்குள் பிரதேச செயலாளரினால் வழங்கப்பட்டிருத்தல் வேண்டும்.

**03. முன்னைய சேவை அனுபவங்கள்**

- சுத்திகரித்தல் சேவைகள் வழங்குதல் தொடர்பில் கடந்த 5 வருடங்களினுள் அரச / அரை அரச அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனங்களுக்கு ஆகக் குறைந்தது 2 வருடங்கள் தொடர்ச்சியான அனுபவம் இருத்தல் வேண்டும்.
- சமைக்காத உணவு வழங்கும் சேவை – கடந்த 5 வருடங்களினுள் முப்படைகள், சிறைச்சாலை அல்லது அரசாங்க வைத்தியசாலைகளுக்கு இரண்டு வருடத்திற்குக் குறையாத காலம் திருப்திகரமாக சமைக்காத உணவுப் பொருட்களை வழங்குவதில் 2 வருடங்கள் தொடர்ச்சியான அனுபவம் இருத்தல் வேண்டும்.
- அழுக்குத் துணிகளை சலவை செய்யும் சேவை - கடந்த 5 வருடங்களினுள் வைத்தியசாலைகள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களுக்கு வழங்கிய அனுபவம் இருத்தல் வேண்டும். குறைந்தபட்சம் இரண்டு வருட காலம் தொடர்ச்சியான அனுபவம் இருத்தல் வேண்டும்.

மேற்படி அனுபவத்தை இயைபுடைய நிறுவனங்களினால் ஒப்பந்தம் வழங்கப்பட்டமைக்காக வழங்கப்பட்ட கடிதத்துடன் சேவை வழங்கிய நிறுவனத்திலிருந்து பெற்றுக்கொண்ட கடிதத்தின் மூலம் நிரூபித்தல் வேண்டும்.

(தகைமை வாய்ந்த சேவை வழங்குநர்கள் மட்டும் விண்ணப்பித்தல் வேண்டும் என்பதுடன் அரச ஒப்பந்த உடன்படிக்கைகளை மீறி அபகீர்த்தியாளர் பட்டியலில் இடம்பெற்ற நபர்களுக்கு கேள்விப்படிவங்கள் வழங்கப்பட மாட்டாது)

பின்வரும் ஆவணங்களைச் சமர்ப்பிக்கும் விண்ணப்பதாரர்கள் மீளளிக்கப்படாத வைப்புத் தொகையை கணக்காளருக்குச் செலுத்தி வாரத்தின் வேலை நாட்களில் (2020-09-30ஆம் திகதி முதல் 2020.10.20ஆம் திகதி வரையில் இரு தினங்களும் உட்பட) மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் பெற்றுக்கொள்ளலாம்.

கேள்வி ஆவணங்களைப் பெற்றுக்கொள்வதற்கு பின்வரும் ஆவணங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

1. கேள்வி ஆவணங்களைக் கோரும் கடிதம்
2. வியாபாரப் பெயர்ப் பதிவுச் சான்றிதழ் (சமாதான நீதவான் ஒருவர் அல்லது சட்டத்தரணியொருவரினால் சான்றுபடுத்தப்பட்ட பிரதியுடன் மூலப் பிரதி)
3. 6 மாத காலத்தினுள் பிரதேச செயலாளரிடமிருந்து பெற்றுக்கொண்ட பொது 170 மாதிரியில் பெறுமதிச் சான்றிதழ்

2020.10.22ம் திகதி மு.ப. 10.00 மணிக்கு கேள்விப் படிவங்கள் ஏற்றுக்கொள்ளல் முடிவுக்கு வருவதுடன் அக்கணமே கேள்விகள் திறக்கப்படும்.

கேள்விப் படிவங்களை முத்திரைக்குறி பொறித்து பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது நேரில் கொண்டு வந்து இந்நோக்கத்திற்காக வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம். குறித்த கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''.............................. சேவை / வழங்கலுக்கான கேள்வி – 2020'' எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

தாமதமாகக் கிடைக்கும் கேள்விப் படிவங்கள் அனைத்தும் நிராகரிக்கப்படும் என்பதுடன் எந்தவொரு கேள்விப் படிவத்தையும் ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் பூரண உரிமை கேள்விக் குழுவைச் சாரும்.

கேள்விப் படிவங்களைத் திறக்கும் வேளையில் கேள்விதாரர் அல்லது அவரது பிரதிநிதியொருவர் கலந்து கொள்ளலாம்.

மேலதிக விபரங்களை கணக்காளரிடம் அல்லது நிர்வாக உத்தியோகத்தரிடம் விசாரித்தறியலாம். தொலைபேசி இலக்கம் 011-2-258862-64 வரையாகும்.

கேள்விப் படிவங்களை பின்வரும் முகவரிக்கு தபாலில் அனுப்புதல் வேண்டும்.

**தவிசாளர் (பிராந்திய பெறுகைக் குழு)**
**விஜயகுமாரதுங்க ஞாபகார்த்த மருத்துவமனை, சீதுவை.**
**2020.09.29**

கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் அமைச்சு

**இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனம்** CEYFISH

# விலைமனுக்கோரல்

**மனு இலக்கம்: CFC/SD/REDUNDANT ITEM/2020-09**

**பாவனையிலிருந்து ஒதுக்கப்பட்ட பொருட்களை விற்பனை செய்வதற்கான விலைமனுக்கோரல்.**

இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனத்தின் பிரதான காரியாலய வளாகத்திலிருக்கும் பாவனையிலிருந்து ஒதுக்கிய பொருட்களை விற்பனை செய்வதற்கான விலைமனுக்கோரல்.

மீளளிக்கப்படாத கட்டணமாக **ரூ.3,000/-** ஐ பணமாக செலுத்தி **2020.09.29** ஆம் திகதி முதல் **2020.10.19** ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் காரியாலய வார நாட்களில் மு.ப **9.00** மணி முதல் பி.ப **3.00** மணி வரையிலான காலப்பகுதியில் விலைமனுக்களை முன்வைப்பதற்கான மாதிரி படிவம் மற்றும் நிபந்தனைகள் உள்ளடங்கலான ஆவணங்களை வழங்கும் பிரிவில் பெற்றுக்கொள்ள முடியும். பூர்த்திசெய்யப்பட்ட விலைமனுக்களை இரண்டு கடித உறையில் இடதுபக்க மேல் மூலையில் **"பாவனையிலிருந்து ஒதுக்கப்பட்ட பொருட்களை விற்பனை செய்வதற்கான விலைமனுக்கோரல்"** எனக்குறிப்பிட்டு **2020.10.20** ஆம் திகதி பி.ப **2.00** மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள முகவரியில் அமைந்திருக்கும் பிரதான காரியாலயத்தில் வைக்கப்பட்டுள்ள பெட்டியில் இடவும்.

ஒதுக்கப்பட்ட பொருட்களை பரிசீலனை செய்தல் மற்றும் மேலதிக விபரங்களுக்கு இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனத்தின் வழங்கல் முகாமையாளர் - **0712045355** அல்லது களஞ்சியசாலை முகாமையாளர் - **0718736917** அவர்களுக்கு மேற்குறிப்பிட்ட தொலைபேசி இலக்கங்களின் மூலம் தொடர்பினை மேற்கொள்ளவும்.

தலைவர்,
**இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனம்**
இலக்கம் 15, ரொக் ஹவுஸ் ஒழுங்கை, மோதர, கொழும்பு 15.
தொலைபேசி இல.: 011 2 540455 / 011 2 523689

# அறிவித்தல்

## 20வது பொதுப் பட்டமளிப்பு விழா

## இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகம்

### மிகிந்தலை


இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகத்தின் 20வது பட்டமளிப்பு விழா எதிர்வரும் 2020 அக்டோபர் மாதம் 22ஆம் மற்றும் 23ஆம் திகதிகளில் இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகம் மிகிந்தலையில் நடைபெறவுள்ளது. தகுதி பெற்ற பட்டதாரிகளுக்கு ஏற்கனவே அதற்குரிய விண்ணப்பப் படிவங்கள் தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. அவர்களில் விண்ணப்பப் படிவங்கள் இதுவரை பூர்த்தி செய்து திருப்பி அனுப்பப்படாது இருப்பின் 2020 அக்டோபர் மாதம் 05ஆம் திகதி அன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ அனுப்பி வைக்கும்படி அறிவுறுத்தப்படுகின்றார்கள்.

இதுவரையில் மேற்படி விண்ணப்பப் படிவங்கள் கிடைக்கப்பெறாத தகுதி பெற்ற பட்டதாரிகள் பரீட்சைகள் மற்றும் கல்விக் கிளையின் பிரதிப் பதிவாளரை 2020 அக்டோபர் 02ஆம் திகதி அன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள். (தொலைபேசி இலக்கம்: 025-2266780).

அழைப்பிதழ் மற்றும் தொடர்புடைய விபரங்கள் காலக்கிரமத்தில் தங்களுக்கு அனுப்பி வைக்கப்படும்.

**பதிவாளர்,**
**இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகம்,**
**மிகிந்தலை.**
29.09.2020

BE BETTER INFORMED!




News you can trust now free on your mobile phone.

Dinamina Daily News Thinakaran

VISIT
apps.lakehouse.lk

DOWNLOAD TODAY!

AVAILABLE AT

LAKE HOUSE

SANASA INTERNATIONAL sefec

# விலைமனுவிற்கான அழைப்பு

சேதன பசளை உற்பத்தி நிலையத்திற்கு இயந்திராதியை வழங்கல்

| Item/s | Quantity |
|---|---|
| Weighing Machine | 1 |
| Milling & Chopping Machine | 1 |
| Mixing Machine | 1 |
| Grading Machine | 1 |
| Bio Charcoal Compressing Machine | 1 |
| Grass Chopping Machine | 1 |

info@sefec.lk என்ற முகவரிக்கு மின்னஞ்சலொன்றை அனுப்புவதன் மூலம், எமது விலைமனுக்கோரல் ஆவணத்தில் அடக்கப்பட்டுள்ள மேலதிக தகவல் மற்றும் விபரக்குறிப்புக்களை பெற்றுக் கொள்ளலாம்.

விலைமனுக்கள் பின்வரும் முகவரியில் ஒப்படைக்கப்படல் வேண்டும்.

**சனச இன்டர்நஷனல் (பீவிட) எல்டீடி,**
**7/7, பிரகத்திபுர பாதை,**
**மாதிவெல, கோட்டே.**
**தொலைபேசி: 0114363207**

**விலைமனுக்களுக்கான மூடும் திகதியானது 2020 ஒக்ரோபர் 9 ஆம் திகதியன்று பி.ப. 4 மணியாகும்.**

# Invitation for Bids (IFB)

## POONAKARY PRADESHIYA SABHA, KILLINOCHCHI DISTRICT

## LOCAL DEVELOPMENT SUPPORT PROJECT (LDSP)

**PROJECT ID: P 163305**

1) The Democratic Socialist Republic of Sri Lanka has received a loan from the World Bank (WB) towards the cost of the Local Development Support Project (LDSP). Part of this loan will be used for payments under the contract named below.

2) The Chairman, Local Authority Procurement Committee(LAPC), on behalf of Poonakary Pradeshiya Sabha, now invites sealed bids from eligible and qualified bidders for the works listed in the table below.

| S No. | Bid No. | Name of the Bid | Estimated Civil Cost (Rs. Mn) (without VAT) | ICTAD Minimum Grade Required | Required Bid Security | | Contract Period |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | Bond Amount Rs. | Validity Period | |
| 01 | LDSP/NP/KN/POPS/2020/01 | Improvement of Don Bosco Puliyadi Road at Kariyalai Nagapaduvan in Poonakary | 6.02 | C7and above (Highway) | 61,000 | 26.01.2021 | 90 Days |

3) Bidding will be conducted through **National Competitive Bidding (NCB)** Procedure.

4) To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been required valid CIDA registration in Highway Construction for the Grade mentioned in the table above and possess valid business or company registration.

5) Qualification requirements to qualify for contract award are given in Section 5 of the Schedule in the Bidding Document.

6) Interested bidders may obtain further information from **Chairman, Poonakary Pradeshiya Sabha, Vadiyadi, Poonakary** and inspect the bidding documents at the same address **from 09.00 Hrs to 15.00 Hrs** on working days. Contact Telephone no- 021-228-4572 Fax 021-206-0855.

7) A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the **Chairman, Poonakary Pradeshiya Sabha, Vadiyadi, Poonakary from 29.09.2020 until 12.10.2020 from 09.00 Hrs to 15.00 Hrs** on working days. upon payment of a non-refundable fee of **Two Thousand Rupees. (Rs. 2,000.00)**. The method of payment will be by cash.

8) Bid shall be delivered in duplicate to the address **Chairman, Poonakary Pradeshiya Sabha, Vadiyadi, Poonakary on or before 13th October 2020 at 02.30 Hrs** on working days. Late bids will be rejected. Bids will be opened at above place soon after closing in the presence of the bidders' representatives who choose to attend.

9) Bid shall be valid up to **29th December 2020**

10) All bids shall be accompanied by a "Bid-Security", as mentioned in the table above.

11) The pre-bid meeting will be held on 07.10.2020 at 10.30 Hrs at the **Poonakary Pradeshiya Sabha, Vadiyadi, Poonakary.**

The address referred to above is:

**Chairman,**
**Local Authority Procurement Committee (LAPC).**
**Poonakary Pradeshiya Sabha,**
**Vadiyadi,**
**Poonakary.**

SLS Bank
ශ්‍රී ලංකා ඉතිරිකිරීමේ බැංකුව
இலங்கை சேமிப்பு வங்கி
Sri Lanka Savings Bank

## 2021 மற்றும் 2022ஆம் வருடங்களுக்காக வழங்குநர்கள்/ ஒப்பந்தக்காரர்கள்/ சேவை வழங்குநர்கள் மற்றும் ஆலோசகர்களைப் பதிவு செய்து கொள்ளல்

2021 மற்றும் 2022ஆம் வருடங்களுக்கா பொருட்கள்/ வேலைகள்/ சேவைகள் மற்றும் ஆலோசனை சேவைகளின் பெறுகை தொடர்பாக வரையறுக்கப்பட்ட இலங்கை சேமிப்பு வங்கி எல்டிடீ உடன் பதிவு செய்து கொள்ள விரும்பும் பிரசித்தி பெற்ற வழங்குநர்கள்/ ஒப்பந்தக்காரர்கள்/ சேவை வழங்குநர்கள் மற்றும் ஆலோசகர்களிடமிருந்து இத்தால் விண்ணப்பங்கள் அழைக்கப்படுகின்றன.

| | | | |
|---|---|---|---|
| குழு 1 | பொறித் தொகுதி மற்றும் இயந்திராதி | குழு 11 | நானாவித மற்றும் காகிதாதிகள் |
| குழு 2 | அலுவலக உபகரணங்கள்/ இயந்திராதிகள் | குழு 12 | ஊக்குவிப்பு உருப்படிகள் |
| குழு 3 | தளபாடங்கள் | குழு 13 | பெயர்ப் பலகைகள் |
| குழு 4 | கணனிகள், கணனி தொடர்பான உருப்படிகள் | குழு 14 | அச்சடித்தல் |
| குழு 5 | தொடர்பாடல் உபகரணம் | குழு 15 | கட்டிட/ மின்சார ஒப்பந்தக்காரர்கள் |
| குழு 6 | மின்சார சாதனங்கள் மற்றும் துணையுறுப்புக்கள் | குழு 16 | புத்தம் புதிய மேட்டார் வாகனங்கள் மற்றும் மோட்டார் சைக்கிள்களை வழங்கல் |
| குழு 7 | பெட்டகங்கள் | குழு 17 | வாகனங்களுக்கான டயர்கள், டியூப்கள் மற்றும் பற்றரிகள் |
| குழு 8 | பாதுகாப்பு உருப்படிகள் | குழு 18 | பழுதுபார்த்தல்கள் |
| குழு 9 | அடகு உருப்படிகள் | குழு 19 | சேவைகள் |
| குழு 10 | கணனி துணையுறுப்புக்கள் | குழு 20 | ஆலோசனை சேவைகள் |

**நியதி மற்றும் நிபந்தனைகள்:**

பின்வரும் நிலைமைகளை விண்ணப்பதாரர்கள் உறுதிப்படுத்த வேண்டும்.

1. விண்ணப்பதாரர்கள் இலங்கையில் பதிவு செய்யப்பட்ட வர்த்தகர்களாக இருத்தல் வேண்டும். வியாபாரத்தின் பெயர்கள், வியாபார பதிவு கீழான பதிவானது 2017.01.01 அன்று அல்லது அதற்கு முன்னதாக இருத்தல் வேண்டும். (3 வருட அனுபவம்).
2. கட்டிட ஒப்பந்தக்காரர்கள் தொடர்பாக செல்லுபடியாகும் சீடா பதிவு இருத்தல் வேண்டும். (முன்னைய இக்டாட் பதிவு),
3. வழமையாக பதிவு செய்து கொண்டுள்ள வழங்குநர் பட்டியலிலிருந்து விலைமனுக்கூறுகள் அழைக்கப்படும். இருந்த போதிலும் தேவையேற்படின் பதிவு செய்து கொண்டுள்ள வழங்குநர் பட்டியலுக்குப் புறம்பாகவும் ஏனைய வழங்குநர்களிடமிருந்து விலைமனுக்களை கோரவும் கொள்வனவு செய்யவும் உள்ள உரிமையை வங்கியானது தன்வசம் வைத்துள்ளது.
4. விலைமனு/ விலைமனுக் கூறுகள் அழைக்கப்படும்போது உடனடியாக விலைமனுக் கூறுகளை சமர்ப்பிக்கத் தவறும் அல்லது குறித்த நேரத்திற்கு பண்டங்களை ஒப்படைப்பதற்கு அல்லது சேவைகளை வழங்கத் தவறும் உத்தேச வழங்குநர்கள்/ சேவை வழங்குநர்கள் பட்டியலிலிருந்தும் நீக்கப்படுவார்கள்.
5. உருப்படிகள்/ சேவைகளை வழங்குவதற்கான விலைமனுக் கூறுகள், வழமையாக பதிவு செய்து கொண்டுள்ள வழங்குநர்களின் பட்டியலிலிருந்தே அழைக்கப்படுகின்றன. இருந்த போதிலும் தேவையேற்படும் பட்சத்தில் ஏனைய மூலங்களிலிருந்தும் விலைமனுக் கூறுகளை அழைக்கும், கொள்வனவு செய்யும் அல்லது புதிய வழங்குநர்களைப் பதிவு செய்யும் உரிமையை வங்கியானது தன்வசம் வைத்துள்ளது.
6. இயந்திராதிகள் மற்றும் உபகரணங்கள் போன்ற உருப்படிகளைப் பழுதுபார்ப்பதற்காக விண்ணப்பிக்கும் உத்தேச வழங்குநர்கள் தேவையேற்படும் பட்சத்தில் திருத்த வேலைகளை மேற்கொள்வதற்காக சொந்தமாக வேலைத்தள வசதியைக் கொண்டிருத்தல் வேண்டும்.
7. உருப்படிகளைக் கொண்டுள்ள ஒன்றிற்கு மேற்பட்ட வகுதிகளுக்கு பதிவு தேவைப்படின் விண்ணப்பமொன்றிற்கு ரூ. 1000/= மீளளிக்கப்படாத பதிவுக் கட்டணத்தைச் செலுத்துவதன் மூலம் ஒவ்வொரு வகுதிக்காகவும் ஒரு பிரத்தியேகமான படிவங்களின் தொகுதியொன்று சமர்ப்பிக்கப்படல் வேண்டும். வரையறுக்கப்பட்ட இலங்கை சேமிப்பு வங்கி இன் பொரளை கிளை கருமபீடத்தில் கட்டணம் செலுத்தப்படல் வேண்டும். அல்லது இலங்கை சேமிப்பு வங்கி கணக்கு இலக்கமான 078100158517396 இற்கு வரவு வைக்கப்பட்டு எந்தவொரு மக்கள் வங்கிக் கிளைக்கும் கட்டணம் செலுத்தப்படலாம்.
8. விண்ணப்பப் படிவத் தொகுதியுடன் ஒரு வியாபார பதிவுச் சான்றிதழ் பிரதி, ஏற்புடையதாயின் கடந்த 03 வருடங்களுக்கான கணக்காய்வு செய்யப்பட்ட நிதியியல் அறிக்கைகள், நிகரான வழங்கல்களின் கட்டளைகளை மேற்கொண்டமைக்காக பெற்றுக்கொள்ளப்பட்ட சான்றுகள் (கொள்வனவுக் கட்டளைகள் மற்றும் ஒப்பந்தங்களின் பிரதி), பெசேவ பதிவுச் சான்றிதழ் போன்றவை இணைக்கப்படல் வேண்டும். அவ்வாறான ஆவணங்களைக் கொண்டிராத விண்ணப்பப் படிவத் தொகுதிகள் அறிவித்தல் விடுக்கப்படாது நிராகரிப்படுவதுடன், பதிவு செய்து கொள்ளப்படவும் மாட்டாது.
9. வங்கி ஊழியர்களின் பிள்ளைகள் அல்லது கணவன், மனைவி ஆகியோர் விண்ணப்பதாரர்கள் அல்லது விண்ணப்பிக்கும் கம்பனியின் உரிமையாளர்கள்/ பங்குதாரர்கள்/ பணிப்பாளர்கள் எனில் அவ்வாறான விண்ணப்பதாரர்கள் பதிவு செய்து கொள்ள தகுதி பெறமாட்டார்கள்.
10. வங்கி அதிகாரிகளின் ஏகோபித்த தீர்மானம் பிரகாரம் ஒவ்வொரு விண்ணப்பமும் மதிப்பீடு செய்யப்படும் போது திருப்திகரமான நற்சாட்சிப் பத்திரங்களைக் கொண்டுள்ள விண்ணப்பதாரர்கள் மாத்திரம் பதிவு செய்து கொள்ளும் உரிமையை வங்கியானது தன்னத்தே கொண்டுள்ளது.

ஒவ்வொரு வகுதி உருப்படிகளுக்காகவும், ஒரு தொகுதிப் படிவங்களுக்காக ஒரு மீளளிக்கப்படாத கட்டணமான ரூ. 1,000/= ரொக்கப் பணமாக செலுத்தப்படுவதன் மூலம் கீழேயுள்ள முகவரியிலிருந்து பெற்றுக்கொள்ளப்படும் உரித்தான படிவத் தொகுதியிலேயே விண்ணப்பம் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். பத்திரிகை விளம்பரத்திற்கமைவாக சேவை மற்றும் வகுதி இலக்கம் என்பன குறிப்பிடப்பட்டு ஒரு கடிதத் தலைப்பில் வேண்டுதல் கடிதமொன்றைச் சமர்ப்பிக்குமாறு இத்தால் உத்தேச விண்ணப்பதாரர்கள் வேண்டப்படுகின்றனர்.

மீளிளக்கப்படாத பதிவுக் கட்டணம் ஏற்றுக்கொள்ளப்படுவது மற்றும் விண்ணப்பப் படிவங்கள் வழங்கப்படுவது, **2020 ஒக்டோபர் 13ஆம் திகதி** வரையான வங்கியின் அலுவலக தினங்களில் மு.ப. 8.30 மற்றும் பி.ப. 4.00 இடையேயாகும்.

உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் **2020 ஒக்டோபர் 14ஆம் திகதி** அல்லது அதற்கு முன்னதாக நேரடியாக அனுப்பப்படல் வேண்டும். அல்லது கீழே குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

அனைத்து விண்ணப்பங்களும், தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் **"2021 மற்றும் 2022ஆம் வருடத்திற்காக வழங்குநர்கள்/ ஒப்பந்தக்காரர்கள்/ சேவை வழங்குநர்கள்/ ஆலோசகர்களைப் பதிவு செய்து கொள்ளல்"** எனக் குறிப்பிடப்பட்டு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

எந்தவொரு மேலதிக தெளிவுறுத்தல்களுக்காகவும் 2674700-3 என்ற தொலைபேசி இலக்கத்தின் மூலம் வங்கியின் பெறுகை முகாமையாளரை தயவு செய்து தொடர்பு கொள்ளுங்கள்.

**தலைவர், பெறுகைக்குழு,**
**வரையறுக்கப்பட்ட இலங்கை சேமிப்பு வங்கி**
**இல. 265, வோர்ட் பிளேஸ்,**
**கொழும்பு-07.**
**2020.09.20**

**தொலைபேசி : 0112-674700-3**
**உடன் அழைப்பு : 0714-693693**
**தொலைநகல் : 0112-674706**

To Buy Your Dream Vehicle within your Budget

If it is a vehicle you want,
YOU NAME IT,
WE HAVE IT

Sunday Observer
aDz it's what you want Auto Focus



Magazine Issued with Sunday Observer

THE ONLY PLACE TO BUY YOUR DREAM CAR!

Sunday Observer
aDz it's what you want




- Auto Focus

Hot Line 011 2 429 369
011 2 429 368
E-mail adzsuo@gmail.com

# கொரோனா பாதிப்பை கண்டறிய இதுவரை 7.19 கோடி மாதிரிகள் சோதனை- ஐசிஎம்ஆர்






இந்தியாவில் கொரோனா வைரஸ் தொற்றை கண்டறிவதற்காக நேற்று மட்டும் 7.09 இலட்சம் மாதிரிகள் பரிசோதனை செய்யப்பட்டிருப்பதாக ஐசிஎம்ஆர் தெரிவித்துள்ளது.

இந்தியாவில் கொரோனா வைரஸ் வேகமாக பரவி வருகிறது. கொரோனாவால் பாதிக்கப்பட்டோரின் மொத்த எண்ணிக்கை 59 இலட்சத்தை கடந்துள்ளது. கொரோனா தொற்றை கண்டறிவதற்கான பரிசோதனைகள் தொடர்ந்து அதிகரிக்கப்பட்டு வருகின்றன. இதன் காரணமாக தினசரி நோய்த்தொற்று எண்ணிக்கை உயர்ந்தவண்ணம் உள்ளது.

இந்நிலையில் இந்தியாவில் பரிசோதனை செய்யப்பட்ட மாதிரிகளின் எண்ணிக்கை 7.19 கோடியாக உயர்ந்துள்ளது.

கொரோனா தொற்றை கண்டறிவதற்காக செப்டம்பர் 27 ம் திகதி வரை 7,19,67,230 சாம்பிள்கள் சோதனை செய்யப்பட்டிருப்பதாகவும், நேற்றுமுன்தினம் மட்டும் 7,09,394 மாதிரிகள் சோதனை செய்யப்பட்டிருப்பதாகவும் இந்திய மருத்துவ ஆராய்ச்சி கவுன்சில் (ஐசிஎம்ஆர்) தெரிவித்துள்ளது.

இந்தியாவில் கடந்த 24 மணி நேரத்தில் 82,170 பேருக்கு கொரோனா பாதிப்பு உறுதி செய்யப்பட்டுள்ளதாக மத்திய சுகாதாரத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

கொரோனா பாதிப்பில் அமெரிக்காவை தொடர்ந்து 2ம் இடத்தில் நீடிக்கும் இந்தியா, புதிய பாதிப்புகள் மற்றும் குணமடைவோர் எண்ணிக்கையில் தினமும் கணிசமான அளவை பெற்று வருகிறது.

இந்நிலையில் இந்திய சுகாதாரத் துறை நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையின்படி, இந்தியாவில் கடந்த 24 மணி நேரத்தில் 82,170 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் இந்தியாவில் இதுவரை கொரோனாவால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 60,74,703 ஆக அதிகரித்துள்ளது.

கடந்த 24 மணி நேரத்தில் 1,039 பேர் கொரோனா பாதிப்பால் உயிரிழந்துள்ளனர். இதனால் இந்தியாவில் இதுவரை கொரோனாவால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 95,542 ஆக உயர்ந்துள்ளது. கொரோனா பாதிப்பில் இருந்து 74,893 பேர் வெளியேறினர். இதன் மூலம் இதுவரை 50,16,521 பேர் கொரோனா பாதிப்பில் இருந்து குணமடைந்துள்ளனர். தற்போது இந்தியா முழுவதும் 9,62,640 பேர் கொரோனாவிற்கு சிகிச்சை பெற்று வருவதாக அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சுற்றுலா தலங்கள் ஒக்டோபர் 15-ம் திகதிக்கு பிறகு திறப்பு



கேரளாவில் அக்டோபர் 15ம்திகதிக்கு பிறகு சுற்றுலா தலங்கள் திறக்கப்பட உள்ளதாக சுற்றுலா துறை அமைச்சர் கடகம்பள்ளி சுரேந்திரன் அறிவித்து உள்ளார்.

கேரளாவில் கொரோனா ஊரடங்கு காரணமாக சுற்றுலா தலங்கள் அனைத்தும் மூடப்பட்டன. மத்திய அரசின் படிப்படியான தளர்வுகள் வழிகாட்டுதல்படி கேரளாவில் தனியார் ஹோட்டல்களும், ரிசார்டுகளும் திறக்கப்பட்டு உள்ளன. இந்த நிலையில் சுற்றுலா தலங்களும் திறக்கப்பட உள்ளதாக கேரள சுற்றுலா துறை மந்திரி கடகம் பள்ளி சுரேந்திரன் அறிவித்து உள்ளார். அவர் கூறியதாவது:

கேரளாவில் அக்டோபர் 15ம்திகதிக்கு பிறகு சுற்றுலா தலங்கள் மீண்டும் திறக்கப்பட உள்ளது. முதலில் உள்நாட்டு சுற்றுலா பயணிகளை ஈர்க்கும் விதத்தில் பிரசாரங்கள் நடத்தப்படும் என்றார்.

# விவசாயிகளை வஞ்சிக்க அனுமதிக்க மாட்டோம்



மத்திய அரசின் வேளாண் சட்டங்களை பாஜக அரசு திரும்ப பெற வேண்டும் என காஞ்சிபுரத்தில் நடந்த ஆர்ப்பாட்டத்தில் மு.க.ஸ்டாலின் வலியுறுத்தினார்.

மத்திய அரசு நிறைவேற்றி உள்ள வேளாண் மசோதாக்களை கண்டித்து நாடு முழுவதும் விவசாயிகள், அரசியல் கட்சியினர் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

மத்திய அரசின் வேளாண் சட்ட மசோதாக்களை திரும்பப்பெற வலியுறுத்தியும், அதற்கு துணை போகும் அ.தி.மு.க. அரசை கண்டித்தும் தமிழகத்தில் நேற்று ஆர்ப்பாட்டம் நடைபெறும் என அறிவிக்கப்பட்டது. அதன்படி திமுக மற்றும் கூட்டணி கட்சிகளின் கண்டன ஆர்ப்பாட்டம் நேற்று நடைபெற்றது.

மாநிலம் முழுவதும் திமுக மற்றும் கூட்டணி கட்சிகளைச் சேர்ந்தவர்கள் ஆர்ப்பட்டத்தில் ஈடுபட்டனர். காஞ்சிபுரத்தில் நடந்த ஆர்ப்பாட்டத்தில் திமுக தலைவர் ஸ்டாலின் பங்கேற்றார்.

விவசாயிகளை வஞ்சிக்கும் வேளாண் சட்டங்களை பாஜக அரசு திரும்ப பெற வேண்டும், விவசாயிகளின் நலன் காக்கும் வரை ஓய மாட்டோம், விவசாயிகளை வஞ்சிக்க அனுமதிக்க மாட்டோம், பாஜக அரசின் வேளாண் சட்டம் மாநில உரிமைகளுக்கு எதிரானது, கூட்டாட்சி தத்துவத்திற்கு எதிரானது என்பது போன்ற முழக்கங்களை மு.க.ஸ்டாலின் எழுப்ப, அவரைத் தொடர்ந்து தொண்டர்கள் முழக்கமிட்டனர். முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமிக்கு எதிராகவும் முழக்கங்கள் எழுப்பினர்.

ஆர்ப்பாட்டத்தில் மு.க.ஸ்டாலின் பேசுகையில், மத்திய அரசு புதிது புதிதாக ஏழைகளை உருவாக்கி கொண்டு இருப்பதாகவும், விவசாயி என சொல்லிக் கொள்ளும் முதலமைச்சர் பழனிசாமி அவர்களுக்கு எந்த நன்மையும் செய்யவில்லை என்றும் குற்றம் சாட்டினார். விவசாயிகளுக்கு விரோதமான வேளாண் சட்டத்துக்கு அதிமுக துணை போய் உள்ளது. இதனை உடனடியாக திரும்பப் பெற வேண்டும் என்பதை வலியுறுத்தி தமிழகம் முழுவதும் சுமார் 3700 இடங்களில் ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது என்றும் ஸ்டாலின் குறிப்பிட்டார். சென்னை வடக்கில் நடந்த போராட்டத்தில் கே.எஸ். அழகிரி, சென்னை தெற்கில் நடைபெற்ற போராட்டத்தில் வைகோ, கடலூரில் திருமாவளவன் உள்ளிட்டோர் பங்கேற்றனர். வேளாண் சட்டங்களை மத்திய அரசு திரும்ப பெற வேண்டும் என முழக்கங்கள் எழுப்பினர்.

# இந்திய-நேபாள எல்லையில் இந்தியாவுக்கு எதிரான நடவடிக்கைகளை ஆதரிக்கும் பாகிஸ்தான்



இந்தியநேபாள எல்லையில் இந்தியாவுக்கு எதிரான நடவடிக்கைகளை பாகிஸ்தான் எவ்வாறு ஆதரிக்கிறது என்ற தகவல்கள் வெளியாகி உள்ளது.

இந்திய பாதுகாப்பு முகவர்கள் தயாரித்த சமீபத்திய அறிக்கையில் இந்திய நேபாள எல்லையில் தீவிர நடவடிக்கைகள் அதிகரித்து வருவதாக தெரிய வந்துள்ளது.

அந்த அறிக்கையின்படி, பீகார் எல்லைக்கு அருகில் உள்ள இந்தியநேபாளத்தில் ஏராளமான மசூதிகள் மற்றும் விருந்தினர் மாளிகைகளுக்கு பாகிஸ்தானை தளமாகக் கொண்ட தாவத்இஇஸ்லாமியா என்ற அமைப்பால் நிதியளிக்கப்படுகின்றன, மேலும் இந்த மசூதிகள் மற்றும் விருந்தினர் மாளிகைகள் இந்தியாவுக்கு எதிரான நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தப்படுகின்றன.

பாகிஸ்தான், இந்தியா மற்றும் நேபாளத்தின் தாவத்இஇஸ்லாமியா கிளைகளால் நிதியளிக்கப்படும் இந்த நிறுவனத்தின் திட்டத்தின் செலவு ரூ1.25 கோடி என்று அறிக்கை கூறுகிறது.

"ரவுட்டாஹாட், பார்சா, கபிலவஸ்து, சன்சாரி மற்றும் பரா ஆகிய எல்லை மாவட்டங்களில் வந்துள்ள வெளிநாட்டு நிதியுதவி கொண்ட மதரஸாக்கள் மற்றும் மசூதிகள் நேபாளத்தில் தண்டனையின்றி செயல்படும் இந்திய எதிர்ப்பு சக்திகளின் நரம்பு மையங்கள் ஆகும் என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து அதிகாரி ஒருவர் கூறும் போது பாகிஸ்தான், வங்காள தேசம் மற்றும் பிற நாடுகளில் இருந்து வரும் தவாத்இஇஸ்லாமியா விருந்தினர்களை தங்க வைக்க இரண்டு மாடி விருந்தினர் மாளிகை கட்டப்பட்டிருப்பது சமீபத்தில் கண்டறியப்பட்டது. இந்த எல்லைப்புற மாவட்டங்களில் வாழுபவர்கள் நேபாளத்தில் பாகிஸ்தான் ஆதரவு பயங்கரவாதிகளுக்கு தங்குமிடம் அளிக்கின்றன, இது இந்தியாவுக்கு தீங்கு விளைவிக்கும். இந்தோநேபாள எல்லையில் இஸ்லாமிய நடவடிக்கைகள் அதிகரிக்கிறது என்று அதிகாரி கூறினார். பாகிஸ்தானை தளமாகக் கொண்ட பயங்கரவாதக் குழு லஷ்கர்இதைபாவும் நேபாள எல்லைக்கு அருகில் உள்ள பகுதிகளை குறிவைத்து உத்தரபிரதேசத்தின் கோரக்பூர் மற்றும் பைசாபாத்தில் ஒரு தளத்தை உருவாக்க முயற்சிக்கிறது.

# அதிமுக செயற்குழுவில் 15 தீர்மானங்கள் நிறைவேற்றம்



ராயப்பேட்டையில் உள்ள தலைமை அலுவலகத்தில் இன்று கூடிய அதிமுக செயற்குழுவில் 15 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

அ.தி.மு.க. செயற்குழு கூட்டம் சென்னை ராயப்பேட்டையில் உள்ள அக்கட்சியின் தலைமை அலுவலகத்தில் நேற்று கூடியது. கட்சியின் அவைத்தலைவர் இ.மதுசூதனன் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் அ.தி.மு.க. ஒருங்கிணைப்பாளரும், துணை முதல்அமைச்சருமான ஓ.பன்னீர்செல்வம், இணை ஒருங்கிணைப்பாளரும், முதல்அமைச்சருமான எடப்பாடி பழனிசாமி, முன்னணி நிர்வாகிகள் உட்பட செயற்குழு உறுப்பினர்கள் பங்கேற்றனர்.

கட்சி வளர்ச்சி பணிகள் மற்றும் பல்வேறு விவகாரங்கள் குறித்து இக்கூட்டத்தில் ஆலோசனை நடத்தப்பட்டது. இக்கூட்டத்தில் 15 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

அதிமுகவினர் ஒற்றுமையுடன் செயல்பட்டு மீண்டும் ஆட்சியமைக்க பாடுபட வேண்டும். கொரோனா பரவலை குறைத்திருப்பதை ஏற்று மத்திய அரசு, தமிழகத்திற்கு தேவையான நிதியை வழங்க வேண்டும்.

எந்த மொழிக்கும் அதிமுக எதிரானதல்ல; ஆனால் மொழி திணிப்பை உறுதியாக எதிர்க்கிறோம். இருமொழிக்கொள்கையே அதிமுகவின் கொள்கை. ஏழை மாணவர்களுக்கு எதிராகவும் கல்வி வணிகமயமாக்கப்படுவதை ஊக்குவிக்கும் நீட் தேர்வை கைவிட வேண்டும்.

ஜிஎஸ்டி மற்றும் பல்வேறு திட்டங்களுக்கான மானியங்களின் நிலுவைத் தொகையை மத்திய அரசு உடனே வழங்க வேண்டும். கலாச்சார ஆய்வுக்குழுவில் தமிழகத்தைச் சேர்ந்த அறிஞர்களுக்கு இடமளிக்க மத்திய அரசுக்கு வலியுறுத்தல். கச்சத்தீவு மீட்கப்பட வேண்டும், இலங்கைத் தமிழர் நலன் பாதுகாக்கப்பட வேண்டும் என மத்திய அரசுக்கு வலியுறுத்தல். காவிரியின் குறுக்கே மேகதாதுவில் அணை கட்ட முயற்சிக்கும் கர்நாடக அரசை கண்டித்து அதிமுக செயற்குழுவில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

# கிருஷ்ணர் ஜென்மபூமி - ஈத்கா மசூதி வழக்கு: மசூதியை அகற்றக் கோரும் மனு நாளை விசாரணை

ஈத்கா மசூதியை அகற்றி கிருஷ்ணர் ஜென்மபூமியையும் மீட்க புதிய மனுவை ஏற்றுக்கொள்ளலாமா வேண்டாமா என்பதை நீதிமன்றம் செப்டம்பர் 30 அன்று முடிவு செய்யும்.

அயோத்தி ராமர் கோவிலுக்கான வரலாற்றுத் தீர்ப்பை இந்திய உச்ச நீதிமன்றம் வழங்கிய ஒரு வருடம் கழித்து, மதுராவில் உள்ள கிருஷ்ணர் ஜென்மபூமியையும் மதுரா சிவில் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. சட்டத்தரணிகள் ஹரிசங்கர் மற்றும் விஷ்ணு ஜெயின் ஆகியோர் தாக்கல் செய்த வழக்கில் 13.37 ஏக்கர் பரப்பளவில் 'ஸ்ரீ கிருஷ்ணர் ஜென்மபூமி' நிலத்தில் உரிமை கோரியும் அங்குள்ள ஷாஹி ஈத்கா மசூதியை அகற்றக் கோரியும் வழக்குத் தாக்கல் செயதுள்ளனர்.

கோயிலுக்கு அருகிலுள்ள மசூதியை அகற்றக் கோரி கிருஷ்ணர் பக்தர்கள் அளித்த மனுவை பராமரிப்பது தொடர்பான விவகாரம் குறித்து செப்டம்பர் 30 ஆம் தேதி கிருஷ்ணர் ஜென்மபூமிஈத்கா வரிசை தொடர்பான விவகாரத்தை நீதிமன்றம் விசாரிக்கும் என்று மதுரா சிவில் நீதிபதி தெரிவித்தார். இந்த மனுவை ஏற்றுக்கொள்ளலாமா வேண்டாமா என்பதை நீதிமன்றம் செப்டம்பர் 30 நாளை முடிவு செய்யும். 1968 ஆம் ஆண்டு மதுரா நீதிமன்ற தீர்ப்பை ரத்து செய்யக் கோரி, மாவட்ட மூத்த சிவில் நீதிபதி சாயா சர்மா நீதிமன்றத்தில் வெள்ளிக்கிழமை மனு தாக்கல் செய்யப்பட்டது, மசூதி குறித்த ஸ்ரீ கிருஷ்ணா ஜன்மாஸ்தான் சேவா சன்ஸ்தான் மற்றும் ஷாஹி இட்கா மேலாண்மைக் குழு இடையே எட்டப்பட்ட நில ஒப்பந்தத்தை அனுமதி அளித்தது.

# கொரோனா வைரசால் இதயத்துக்கு பாதிப்பு: ஹர்ஷ்வர்தன்




''கொரோனா வைரஸ், நுரையீரல் உள்ளிட்ட சுவாசப் பிரச்சினையை மட்டும் ஏற்படுத்தவில்லை. அதனால், மாரடைப்பு உள்ளிட்ட இதயப் பிரச்சினைகளும் ஏற்படுவதாகக் கூறப்படுகிறது. ''இது குறித்து ஆய்வுகள் நடந்து வருகின்றன,'' என, மத்திய சுகாதாரத் துறை அமைச்சர், ஹர்ஷ்வர்தன் தெரிவித்தார்.

'சண்டே சம்வாத்' என்ற பெயரில், ஞாயிற்றுக்கிழமைகளில், பொதுமக்களின் கேள்விகளுக்கு, மத்திய சுகாதாரத் துறை அமைச்சரும், பா.ஜ., மூத்த தலைவருமான ஹர்ஷ் வர்தன், சமூக வலை தளத்தில் பதில் அளித்து வருகிறார்.

பல்வேறு கேள்விகளுக்கு அவர் நேற்று அளித்த பதிலில் கூறியுள்ளதாவது: கொரோனா வைரஸ், நுரையீரல் உள்ளிட்ட சுவாசப் பிரச்னைகளை உருவாக்குவது ஆய்வுகளில் தெரியவந்துள்ளது. அதுபோல், இதயம், சிறுநீரகம் உள்ளிட்ட மற்ற உறுப்புகளையும் பாதிப்பதாக, சில ஆய்வுகள் தெரிவிக்கின்றன. இது, மத்திய அரசின் கவனத்துக்கும் வந்துள்ளது. இது, மிகவும் சிறிய அளவில் நடந்துள்ள ஆய்வு.

இதுபோன்ற சிறிய அளவிலான ஆய்வுகளில் இருந்து சரியான முடிவுகளை தெரிந்து கொள்ள முடியாது. இருந்தாலும், இதை ஒரு எச்சரிக்கையாக எடுத்துக் கொள்கிறோம். இது தொடர்பாக ஆய்வு செய்யும்படி, ஐ.சி.எம்.ஆர்., எனப்படும் இந்திய மருத்துவ ஆராய்ச்சி கவுன்சில் உள்ளிட்டவற்றை அறிவுறுத்தி உள்ளோம். ஐ.சி.எம்.ஆர்., நடத்தியுள்ள ஆய்வில் இருந்து, 'ஹேர்டு இம்யூனிட்டி' எனப்படும், சமூக கூட்டு எதிர்ப்பு திறனை நாம் இன்னும் எட்டவில்லை. ஹேர்ட் இம்யூனிட்டி என்பது, ஏற்கனவே உள்ள நோய்களுக்கு எதிராக நோய் எதிர்ப்பு திறன், நாட்டில் அதிக அளவில் இருந்தால், புதிய நோய்களை எதிர்க்கும் சக்தியை பெறுவோம்.

தற்போது அந்த நிலையை நாம் எட்டவில்லை. எனவே, நோய் பரவலை வேகமாக தடுக்க முடியாது. எனினும் நாம் கவலை கொள்ளத் தேவைஇல்லை. இருப்பினும் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும்.வழிபாட்டு தலங்கள் உட்பட, அதிக மக்கள் கூடும் இடங்களில் இருக்கும்போது, முக கவசம் அணிவதை அனைவரும் தவறாது பின்பற்ற வேண்டும். இவ்வாறு, அவர் கூறினார்.

# தடுப்பூசி பற்றி பேச்சு: பிரதமர் மோடிக்கு உலக சுகாதார அமைப்பு பாராட்டு

ஐ.நா., பொதுச் சபை கூட்டத்தில், கொரோனா தடுப்பூசி பற்றி பிரதமர் மோடி பேசியதற்கு, உலக சுகாதார அமைப்பு பாராட்டு தெரிவித்து உள்ளது.

ஐக்கிய நாடுகள் சபை எனப்படும், ஐ.நா., சபையின், 75ம் ஆண்டு பொதுச் சபை கூட்டம், அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் நடந்து வருகிறது. இதில், பிரதமர் மோடி, நேற்று முன்தினம் பேசினார்.

அப்போது, 'உலகில், தடுப்பூசிகளை அதிகமாக உற்பத்தி செய்யும் நாடு இந்தியா. அதன் சார்பில், உலக சமூகத்துக்கு ஒரு உறுதியை வழங்குகிறேன். கொரோனா தொற்றை எதிர்த்துப் போராடுவதற்கு, அனைத்து மனிதர்களுக்கும் உதவ, இந்தியாவின் தடுப்பூசி உற்பத்தி மற்றும் வினியோக திறன் முழுமையாக பயன்படுத்தப்படும்' என்றார்.



பிரதமர் மோடியின் இந்த வாக்குறுதிக்கு, உலக சுகாதார அமைப்பு பாராட்டு தெரிவித்துள்ளது. உலக சுகாதார அமைப்பின் தலைவர் டெட்ரோஸ் அதானோம் கெப்ரியாசிஸ், 'டுவிட்டரில்' பதிவிட்டுள்ளதாவது: ஐ.நா., பொதுச் சபை கூட்டத்தில், தடுப்பூசி குறித்து, இந்திய பிரதமர் மோடி அளித்துள்ள வாக்குறுதிக்கு, என் நன்றி. நம் வளங்கள் மற்றும் திறமையை ஒன்றாக திரட்டி பணியாற்றினால் தான், கொரோனா தொற்றுக்கு முடிவு காண முடியும். இவ்வாறு, அவர் பதிவிட்டுள்ளார்.

தினகரன்
விளையாட்டு
2020 செப்டெம்பர் 29 செவ்வாய்க்கிழமை
sports.tkn@lakehouse.lk

## மென்பந்து சுற்றுப் போட்டி: விநாயகபுரம் விநாயகர் அணி சம்பியன்



**(திருக்கோவில் தினகரன் நிருபர்)**

அம்பாறை திருக்கோவில் விநாயகபுரம் விநாயகர் விளையாட்டு கழகம் நடாத்திய வருடாந்த சரவனை கந்தையா ஞாபகார்த்த மென்பந்து சுற்றுப் போட்டியில் விநாயகபுரம் விநாயகர் அணி சம்பியனாக வெற்றி பெற்றுக் கொண்டனர்.

இவ் வருடாந்த மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் அம்பாறை மாவட்டத்தில் இருந்து 32 கழகங்கள் கலந்து கொண்டு இருந்ததுடன் இறுதிச் சுற்றுக்கு தம்பிலுவில் றேஞ்சர்ஸ் அணியும் விநாயகபுரம் விநாயகர் அணியும் மோதிக் கொண்டு இருந்தன.

இவ் இறுதிச் சுற்றுப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற தம்பிலுவில் றேஞ்சர்ஸ் அணி முதலில் விநாயகர் கழகத்தினை துடுப்பெடுத்தாட கேட்டுக் கொண்டதற்கு அமைவாக விநாயகர் அணி 10 ஓவர் முடிவில் 03 விக்கெட்டுக்களை இழந்து 83 ஓட்டங்களை பெற்றுக் கொண்டு இருந்தன.

இதனைத் தொடர்ந்து தம்பிலுவில் றேஞ்சர்ஸ் அணியினர் 84 என்ற வெற்றி இலக்கை கொண்டு விநாயகபுரம் விநாயகர் அணியை எதிர் கொண்ட போது தம்பிலுவில் றேஞ்சர்ஸ் அணியினர் 10 ஓவர் முடிவில் 09 விக்கெட்டுக்களை இழந்து 46 ஓட்டங்களை பெற்றுக் கொண்டதுடன் விநாயகபுரம் விநாயகர் அணி இச்சுற்றில் 37 ஓட்டங்களால் வெற்றிப் பெற்று சரவனை கந்தையா வெற்றிக் கிண்ணத்தையும் 30 ஆயிரம் ரூபா பணப் பரிசினையும் தட்டிச் சென்றதுடன் தம்பிலுவில் றேஞ்சர்ஸ் அணிக்கு வெற்றிக் கிண்ணமும் 15ஆயிரம ரூபா பணமும் வழங்கப்பட்டு இருந்தன.

SINCE 1978 42nd
OBSERVER MOBITEL SCHOOL CRICKETER OF THE YEAR 2020
Recognizing talent, inspiring greatness.
Sri Lanka Telecom Mobitel
உங்களுடனே. என்றும்.

## 42வது ஒப்சவர்-மொபிடெல்

**மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர் / வீராங்கனை- 2020**

உங்களுக்கு விருப்பமான பாடசாலை கிரிக்கெட் வீரர்/வீராங்கனைக்கு வாக்களித்து அவரை இந்த ஆண்டின் ஒப்சேவர் - மொபிடெல் மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர்/வீராங்கனையைத் தெரிவு செய்யுங்கள்.

☐ **மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர்-2020**

இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் 19 வயதிற்குட்பட்ட அனைத்து பாடசாலை மட்டப் போட்டிகளில் 2019/2020 பிரிவு I, II, III களில் பூர்த்தி செய்த வீரர்கள் மட்டுமே வாக்களிக்கலாம்.

☐ **மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீராங்கனை-2020**

தேசிய ரீதியில் இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் 19 வயதிற்குட்பட்ட அனைத்து பாடசாலை மட்டப் போட்டிகளில் 2019/2020 தேசிய மட்டத்தில் பூர்த்தி செய்த வீராங்கனைகள் மட்டுமே வாக்களிக்கலாம்.

வாக்கினை அளிப்பது : ........................................

வீரர்களுக்கான பிரிவு : பிரிவு I ☐ பிரிவு II ☐ பிரிவு III ☐

தேசிய மட்ட வீராங்கனை : ........................................

**(ஒரு கூப்பன் ஒரு வாக்குக்கு மட்டுமே செல்லுபடியாகும்)**

பாடசாலை : ........................................

வாக்களித்தவர் பெயர் : ........................................

முகவரி : ........................................

மொபைல் இல. : ........................................

SUNDAY OBSERVER

**Vote: schoolboycricketer.lk இணையத்தளத்திற்குள் பிரவேசித்து வாக்களிக்க முடியும்**

**வாராந்த சீட்டிழுப்பில் பரிசுகளை வெல்லுங்கள்:**

1வது பரிசு : Mobitel 4G Wi-Fi Router
2வது பரிசு: ரூ. 2,500
3வது பரிசு: ரூ.1,500
4வது பரிசு: ரூ. 1,000

42வது ஒப்சவர்-மொபிடெல் மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரரை தெரிவு செய்யும் போட்டி தற்போது ஆரம்பமாகியுள்ளது. கூப்பனை நிரப்பி விளையாட்டு ஆசிரியர், **சண்டே ஒப்சவர், லேக் ஹவுஸ், கொழும்பு-10** எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

**நிபந்தனைகள்:**

மொபிடெல் நிறுவன ஊழியர்கள், அவர்களது குடும்பத்தினர், லேக்ஹவுஸ் நிறுவன ஊழியர்கள், அவர்களது குடும்பத்தினர் இந்தப் போட்டியில் பங்கு பெற முடியாது.

ஒரு கூப்பனில் ஒரு பிரிவில் ஒருவருக்கே வாக்களிக்கலாம். போட்டி தொடர்பில் சண்டே ஒப்சவர் விளையாட்டு நிர்வாகத்தினரின் முடிவே இறுதியானது.

திகதி 2020-10-03 இல. 30




## சர்வதேச பதக்கங்களை வெல்லக்கூடிய 20 இளம் வீரர்களுக்கு 'க்ரிஸ்போ' நிறுவனத்தினால் புலமைப்பரிசில்





சர்வதேச பதக்கங்களை வெல்லக்கூடிய திறமையான இளம் வீரர்கள் 20 பேரை தெரிவு செய்து 4 கோடி ரூபா பெறுமதியிலான புலமைப்பரிசிலை வழங்குவதற்கு தேசிய ஒலிம்பிக் சங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இதன்படி, 2022 இல் நடைபெறவுள்ள இளையோர் ஒலிம்பிக் விளையாட்டு விழா, ஆசிய இளையோர் விளையாட்டு விழா, பொதுநலவாய விளையாட்டு விழா மற்றும் தெற்காசிய விளையாட்டு விழாக்களை இலக்காகக் கொண்டு எதிர்வரும் இரண்டு வருடங்களுக்கு தேசிய ஒலிம்பிக் சங்கத்துடன் இணைந்து க்ரிஸ்ப்ரோ நிறுவனம் குறித்த வேலைத்திட்டத்துக்கு அனுசரணை வழங்கவுள்ளது.

அனைத்து விளையாட்டுக்களையும் உள்ளடக்கும் வகையில் இந்நாட்டில் உள்ள திறமையான வீரர்களை ஊக்குவித்து அவர்களை சர்வதேச போட்டிகளுக்கு தயார்படுத்தும் நோக்கில் பாரிய நிதியொன்றை பயன்படுத்தவுள்ள முதலாவது சந்தர்ப்பம் இதுவாகும்.

க்ரிஸ்போ நெக்ஸ்ட் சேம்ப் புலமைப்பரிசில் வேலைத்திட்டத்துக்கான ஒப்பந்தம் கடந்த (24) இலங்கை மன்றத்தின் கேட்போர்கூடத்தில் இடம்பெற்றது.

இதன்போது தேசிய ஒலிம்பிக் சங்கத்தின் தலைவர் சுரேஷ் சுப்ரமணியம், செயலாளர் மெக்ஸ்வெல் டி சில்வா, க்ரிஸ்போ நிறுவனத்தின் வர்த்தக மற்றும் சிரேஷ்ட விற்பனை முகாமையாளர் அமரெஸ் செல்ல, இலங்கையின் முன்னாள் குறுந்தூர ஓட்ட வீராங்கனையான சுசந்திகா ஜயசிங்க ஆகியோர் கலந்துகொண்டனர்.

எதிர்வரும் காலங்களில் நடைபெறவுள்ள தேசிய மட்ட கனிஷ்ட போட்டிகளில் திறமைகளை வெளிப்படுத்துகின்ற வீரர்களில் இருந்து எஞ்சிய 15 வீரர்களும் தெரிவு செய்யப்படும் என தேசிய ஒலிம்பிக் சங்கத்தின் செயலாளர் மெக்ஸ்வெல் டி சில்வா தெரிவித்தார்.

"நாட்டில் உள்ள அனைத்து விளையாட்டு சங்கங்களுக்கும் தம்மிடம் உள்ள திறமையான வீரர்களின் பெயர்களை அனுப்பி வைக்கும்படி நாங்கள் தெரியப்படுத்தியுள்ளோம்.

இலங்கைக்கு ஒலிம்பிக் பதக்கம் வென்று கொடுத்த நட்சத்திர வீராங்கனையான சுசந்திகா ஜயசிங்க தலைமையிலான குழுவினால் இந்த வீரர்களுக்கான நேர்முகத் தேர்வு நடத்தப்படவுள்ளது.

அதில் தேர்வாகும் வீரர்களுக்கு எதிர்வரும் இரண்டு வருடங்களுக்கு புலமைப்பரிசில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்" எனத் தெரிவித்தார்.

இந்தப் புலமைப்பரிசில் ஊடாக வீரர்களுக்கு ஒவ்வொரு மாதமும் கொடுப்பனவு ஒன்று வழங்கப்படவுள்ளதுடன், அவர்களுக்கான பயிற்சிகள், போசாக்கான உணவுகள், மருத்துவ தேவைகள் உள்ளிட்ட வசதிகளும் செய்து கொடுக்கப்படவுள்ளன.

20 வயதுக்குட்பட்ட வீரர்களுக்கு மாத்திரம் இந்தப் புலமைப்பரிசில் வழங்கப்படவுள்ள நிலையில், அண்மையில் ஐந்து வீரர்களுக்கு வைபவ ரீதியாக புலமைப்பரிசில் வழங்கி வைக்கப்பட்டது.

குருநாகல் சென். ஜோன் கொத்தலாவல கல்லூரியின் மெய்வல்லுநர் வீரர் சிதும் ஜயசுந்தர, வலல ஏ ரத்னாயக்கா கல்லூரியின் மெய்வல்லுநர் வீராங்கனை தருஷி கருணாரத்ன, பத்தேகம அநாகரிக தர்மபால கல்லூரியின் பளுதூக்கல் வீரர் தேஷான் கபில குமார, போத்திவெல மகா வித்தியாலயத்தின் பளுதூக்கல் வீராங்கனை சச்சினி ராஜிகா லக்சரானி மற்றும் ஜிம்னாஸ்டிக் வீராங்கனை மில்கா உள்ளிட்டோருக்கு இந்தப் புலமைப்பரிசில் வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## இராணுவ அரை மரதன் போட்டி சண்முகேஸ்வரன் சம்பியன்



இலங்கை இராணுவத்தினால் 55 ஆவது தடவையாகவும் ஏற்பாடு செய்யப்பட்ட இராணுவ படைப் பிரிவுகளுக்கு இடையிலான அரை மரதன் ஓட்டப் போட்டியில் இராணுவ பீரங்கிப் படைப்பிரிவைப் பிரதிநிதித்துவப்படுத்தி பங்குகொண்ட மலையக வீரர் குமார் சண்முகேஸ்வரன் முதலிடத்தைப் பெற்றுக்கொண்டார்.

கொவிட் – 19 வைரஸ் காரணமாக இலங்கையில் எந்தவொரு தேசிய ரீதியிலான மெய்வல்லுநர் போட்டிகளும் நடைபெறவில்லை.

பல மாதகால இடைவெளியின் பிறகு இலங்கை இராணுவ படைப்பிரிவுகளுக்கு இடையில் நடத்தப்படுகின்ற இவ்வருடத்துக்கான அரை மரதன் ஓட்டப் போட்டித் தொடர் கடந்த (26) நடைபெற்றது.

இராணுவத்தைச் சேர்ந்த சுமார் 111 வீரர்கள் மற்றும் 14 வீராங்கனைகள் பங்குபற்றியிருந்த இம்முறைப் போட்டியானது கொழும்பில் உள்ள இராணுவ தலைமையக வளாகத்தில் இருந்து பனாகொட இராணுவ முகாம் வரையிலான 22 கிலோ மீற்றர் தூரத்தைக் கொண்டதாக இடம்பெற்றது.

இராணுவ பீரங்கிப் படைப்பிரிவைப் பிரதிநிதித்துவப்படுத்தி 5 ஆவது தடவையாகவும் ஆண்களுக்கான அரை மரதன் ஓட்டப் போட்டியில் பங்குகொண்ட குமார் சண்முகேஸ்வரன், தொடர்ச்சியாக மூன்றாவது தடவையாகவும் முதலிடத்தைப் பெற்று சாதனை படைத்தார்.

குறித்த போட்டியை ஒரு மணித்தியாலமும் 10.16 செக்கன்களில் நிறைவு செய்த அவர் இவ்வருடத்துக்கான தனது முதலாவது வெற்றியையும் பெற்றுக்கொண்டார்.

2016 இல் 4 ஆவது இடத்தையும், 2017 இல் 3 ஆவது இடத்தையும் பெற்றுக்கொண்ட சண்முகேஸ்வரன், கடந்த 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற இராணுவ அரை மரதன் ஓட்டப் போட்டியில் முதலிடத்தைப் பெற்று அசத்தினார்.

மெய்வல்லுநர் அரங்கில் நெடுந்தூர ஓட்டப் போட்டிகளில் அண்மைக்காலமாக திறமைகளை வெளிப்படுத்தி வருகின்ற ஹற்றன் வெலி ஓயாவைச் சேர்ந்த சண்முகேஸ்வரன், இறுதியாக கடந்த வருடம் நேபாளத்தில் நடைபெற்ற 13 ஆவது தெற்காசிய விளையாட்டு விழாவில் ஆண்களுக்கான 10 ஆயிரம் மீற்றர் ஓட்டப் போட்டியில் வெள்ளிப் பதக்கத்தை வெற்றி கொண்டார். கடந்த வருடம் நடைபெற்ற தேசிய விளையாட்டு விழா, தேசிய மெய்வல்லுநர் சம்பியன்ஷிப் தொடர், இராணுவ மெய்வல்லுநர் சம்பியன்ஷிப் தொடர் உள்ளிட்ட போட்டிகளில் தங்கப் பதக்கங்களை வென்றிருந்தமை மற்றுமொரு சிறப்பம்சமாகும்.

இராணுவ படைப்பிரிவுகளுக்கு இடையிலான அரை மரதன் ஓட்டப் போட்டியில் கெலும் சம்பத் குணசேகர (ஒரு மணி. 10.47 செக்.) இரண்டாவது இடத்தையும், சாகர விஜேவிக்ரம (ஒரு மணி. 11.16 செக்.) மூன்றாவது இடத்தையும் பெற்றுக்கொண்டனர்.

இதனிடையே பெண்களுக்கான அரை மரதன் ஓட்டப் போட்டியில் இராணுவ பெண்கள் படைப்பிரிவைச் சேர்ந்த வத்சலா ஹேரத் (ஒரு மணி. 25.15 செக்.) முதலிடத்தையும், சுரோகா செவ்வந்தி (ஒரு மணி. 28.57 செக்.) இரண்டாவது இடத்தையும், இரேஷா சுகதபால (ஒரு மணி. 31.04 செக்.) மூன்றாவது இடத்தையும் பெற்றுக்கொண்டனர்.

போட்டிகளின் பிறகு இடம்பெற்ற பரிசளிப்பு வைபவத்தில் இராணுவ தளபதி சவேந்திர டி சில்வா பிரதம அதிதியாகக் கலந்துகொண்டதுடன், வெற்றயீட்டிய வீரர்களுக்கு பதக்கமும், பணப்பரிசில்களும் வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



அக்கரைப்பற்று வலய மட்ட விளையாட்டுப் போட்டியில் பங்குபற்றி மாகாண மட்டத்திற்கு தெரிவு செய்யப்பட்ட ஒலுவில் அல்ஹம்ரா மகா வித்தியாலய மாணவர்களுக்கான சான்றிதழ்கள் வழங்கி வைக்கும் நிகழ்வு கடந்த (14) பாடசாலையின் அதிபர் அஷ்ஷெய்க் யு.கே. அப்துர் ரஹீம் தலைமையில் நடைபெற்றபோது, விளையாட்டு ஆசிரியர் ஆர்.நௌஸாட் மற்றும் விளையாட்டு பயிற்றுவிப்பாளர்களான எம். முனாஸிர், ஏ. அஸ்மத் ஸஹீ ஆகியோருடன் பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்களையும் காணலாம்.(படம் கல்முனை மத்திய தினகரன் நிருபர்)

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2020 செப்டெம்பர் மாதம் 29ம் திகதி செவ்வாய்க்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.